பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

—0✻0—

இஃது,

தமீமன்சாரிமாலை.

காயற்பட்டணம்

ஷைகுலெப்பையவர்கள்

பாடியது.

—0✻0—

இராமநாதபுரம்

இரவுல்ஷாப்புக்கடை-ப-வெ,

முகம்மதுஇபுறாகீம்சாகிபு

அவர்கள்முயற்சியால்

குலசேகரம்பட்டணம்

சர்க்கரை சாகிபுத்தம்பி யவர்கள் குமாரர்

அல்லாபிச்சைப்புலவர்

அவர்களால்

இலக்கணவிலக்கியவழுவறத்திருத்தி

சென்னை

மாணிக்கமுதலியார்

கம்[illegible]லியாரவர்களது

மனோன்மணிவிலாசவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜறத்து-௧௨௱௯௰௨(ஞ)-ஜமாதுல்அவ்வலிறி.

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃது,

தமீமன்சாரிமாலை.

காப்பு - விருத்தம்.

சீர்கொண்டமக்கமேவுந் திருநபிதோழரான
தார்கொண்டமாலைமார்பன் தமீமன்சாரிகாதைப்பாட
நீர்கொண்ட புவியும்வானு நிலவொடுகிரணமற்றுங்
கார்கொண்டேயமைத்துக்காக்கும் கத்தனேகாப்பதாமே.

அல்லாகுத்தஆலாவின்றுதி.

கண்ணிகள்.

ஆதிதிருத்தூத ராலநபிதோழரிலே
நீதிமறைபுறுக்கா னேர்வழியிலானவராய். (க)

அமீறுகள்போற்றுமெங்க ளருமதனூர்யார்களிலே
தமீமன்சாரி தம்கதையையான்பாட. (உ)

சொல்லரிகரில்லாத தூய்யபெரியவனே
வல்லமைகள்தந்து நல்ல வாக்கருள்வாயாண்டவனே. (ங)

இக்கதையான்பாடுதற்கின் கென்றுமுள்ளநாயகனே
மிக்கபிழைவாராமல் மேலோனேகாத்தருள்வாய். (ச)

எல்லாம்படைக்குமுன்னே யிறைவனருளொளியில்
நல்லதொருருத்தாக நன்றாய்வகுத்தநபி. (ரு)

முன்னுதித்துப்பின்பிறந்து முத்திரையுண்டானநபி
வன்னமலர்த்தாளிரண்டு மறவேனொருநாளும். (சு)

தென்னுமொழிப்கருந் திருவாயிற்கல்லடக்கும்
வள்ளல்அபூபக்கர் மலர்ப்பாதம்யான்மறவேன். (எ)

அறமைத்திருப்பிவிட்டே யல்லூரிந்தீன்வளர்த்த
எற்றமுறுமன்னருமர் திருதாளையும்மறவேன். (அ)

இலக்கமகுமூலா மெழில்சேர்பலகைவரி
உலகில்லெழுதுமெங்க ளுதுமானையும்மறவேன். (கு)

கலிமாமொழிபகராக் காபிர்களையறுக்கும்
புலியாமலிபாதம் பொற்றாகயான்மறவேன். (ய)

துங்கநபிப்பேரர் சுவனக்கனியருந்தும்
சங்கையசனுசைனார் தாளையொருநாள்மறவேன். (௰௧)

பதுபத்தரோடு பயகாம்பர்யார்கள்நல
சதுபத்திரண்டாயிரம்பேர் தாளையொருநாள்மறகேன். (௰௨)

ஜெகமேழும்போற்றுமெங்கள் செய்யிதுற்றருல்பேரர்
பகுதாதுமீரான் முகியித்தீன்தாளைமறகேன். (௰௩)

இராவினைதீர்க்கும் செய்கப்துல்காதிறென்னும்
மீராதந்தாளை மேன்மையொடும்யான்மறவேன். (௰௪)

அன்பியாஅவுலியா வானமுசுலீமுமீன்
செம்பொன்மலர்ப்பாதந் தினந்தோறும்யான்மறகேன். (௰௫)

பாலுநற்றேன்சீனி பழமுமதுபோல
காலிமாமானேனை நான்மறகேனோர்போதும். (௰௬)

இறைவன்புறுக்கானி லிறக்கியவேதவு[illegible]
மறையாப்பொருள்விளக்கும் வண்மையுள்ளஆலிமாம். (௰௭)

சுலையுமான்லெப்பையெனுந் தூயோனைப்போற்றிசெய்யில்
அலைவொருநாள்வாராதில் கானசம்பத்துண்டாகும். (௰௮)

நேமமறகாத பிள்ளையங்கள்குன்றாத
* சாமுலெப்பைதாள்போற்றிற் றாழ்வொருநாள்வாராது. (௰௯)

இதற்கப்புறுக்கான் இல்முக்கடலான
சதக்கத்துல்லாமலர்த்தாட் சங்கையொடும்யான்மறகேன். (௨௰)

[illegible]யத் தமிழுனாயாக்கித்தந்த
சாமுனுலெப்பையிரு தாளையொருநாள்மறகேன். (௨௧)

தானேன்புறுக்கானைத் தப்பாமலேயோது
மாமுனுலெப்பையிரு மலர்ப்பாதமேமறகேன். (௨௨)

பன்னுந்தமிழறிவும் பாரிசுவுமேதெரிந்த
இன்னிப்பிள்ளைலெப்பை யிருபாதமும்மறகேன். (௨௩)

கத்தனருளால்வேதங் காசினியிலோதும்வல்ல
உத்தவுலமாக்கள்பத மொருபோதும்யான்மறகேன். (௨௪)

காவியங்கள்பாடுமங்கக் கவிதைப்புலவர்முன்னே
நாவிலாவூமையவ னுன்படிப்பேசென்பதுபோல். (௨௫)

பன்னுதமிழ்ப்புலவர் பாடுங்கவிதைமுன்னே
சின்னமதலையர்போய்த் தென்னதென்னவென்றதொக்கும். (௨௬)

மயிலாடும்பொழிலிடத்தில் வான்கோழியாடுதல்போல்
இயல்பாடும்புலவர்முன்னே யிக்கவியான்பாடுதற்கே. (௨௭)

---

* சாமுலெப்பையென்பது சாமுனுலெப்பை [illegible]
[illegible]றுணர்க.

செஞ்சொற்பயனறியேன் சீர்தளையுந்தானறியேன்
புன்சொல்லான்பாடினதின் பிழைபொறுப்பீர்நல்லோரே. (௨௮)

காகிர்ப்பதிவாழுங் கருப்பாறின்காவலவன்
வாகாருமிக்கவிதை வழுத்துந்தமிழாலே. (௨௯)

சிங்கக்கொடித்தலைவன் செய்யிதருள்செய்குலெப்பை
சங்கைபெறவுலகிற் றன்பாடலுற்றனனே. (௩௰)

—— * ——

நூல்.

குங்குமத்தார்மார்பினொடுங் கூறரியசீரினொடு
மெங்கும்புகழ்பரப்பி யிறசூலரசாண்டு. (௩௧)

அல்லாவருளின்படி யாலநபியானவர்கள்
நல்லான்சுவர்க்கபதி நாடியே போனதற்பின். (௩௨)

வல்லமையபூபக்கர்புவி வாழ்ந்துவான்போயினர்பின்
உண்மையுமறுகத்தா புலகாண்டநாளையிலே. (௩௩)

உலகெல்லாஞ்சேர வொருகுடைக்கீழடக்கிப்
பல்மன்னர்தேயம் பகையறவேயாழ்படுத்தி. (௩௪)

கலகமிடுமொன்னார்கள் களப்பதிகுறைகளாடித்
தலைபதியாசர்கோமான் தாரணியைத்தானாண்டார். (௩௫)

தாரணியைத்தானாண்டார் தராசினிறையாகப்
பாரதனிலேகலிமாப் பயிர்தான்வளர்ந்தேற. (௩௬)

நீரணிபுவனமெல்லா நெறியொடுசெங்கோலோச்சி
வாரணிமுலையார்வாழ்த்த மன்னுமறிருக்கும்நாளில். (௩௭)

(வசனம்.) இப்படி நீதத்தோ டுமறுகத்தாபு றலியல்லாகு அனகு அவர்கள் எழுவான்படுவா னெல்லாங் கீர்த்திமிகும்படி. ஒருகுடையில் பூமியை யாளும்நாளின் வரலாறுசொல்வாம்.

கண்ணிகள்.

மக்கமதினவு மகரிபென்னும்ராச்சியமும்
மிக்கசாமுறூமு மிசுறுபகுதாதுடனே. (௩௮)

முலுந்தான்குருசானி மொழிதுபசிநற்றேரம்
வலுத்தானகாவுறாவு மட்டிபிரானைப்பறதும், (௩௯)

ஈழமிலாடம் எழிலரசரொங்கலாம்
வாழும்ப[illegible]ளெல்லாம் வாகுமறின்செங்கோலால். (௪௰)

தி[illegible]ள்ளமன்னரெல்லாஞ் சென்றுதிறைகட்டிநிற்பப்
ப[illegible]முள்ள மன்னரெல்லாம் பாதம்பணிந்துநிற்க. (௪௧)

தற்கமிடுமன்னர்முடி தரையிற்கிடந்துருள
மிக்கமுடிமன்னர்கொலு வேலைக்கண்டேகாத்துநிற்க. (௪௨)

வங்கர்கலிங்கர் மராடர்திறையளக்கக்
கொங்கர்கருநாடர் குடகர்மாகோசலர். (சங)

பங்காளங்கிட்டா மலையாளரீளரொடு
சிங்களர்திவாந்தர் சீனர்மிஞ்சுங்கன்னடரும். (சச)

வடுகர்கவுடர் மாளினரொட்டியரும்
அடவாய்த்திறையளந்தே யாசாரஞ்செய்வாரும். (சரு)

கண்டுவணங்காத காபிர்குலமறுத்தும்
பண்டுவணங்காத பாராசனைப்பிடித்தும். (சசா)

கலிமாப்பயிரோற்றிக் காசினியெல்லாந்தழைக்கப்
புலிமாறொருதுறையிற் பொருந்திப்புனலுண்ணவும். (சஎ)

பருந்துங்கிளியுமொரு பஞ்சரத்திற்றுறைய
அருந்தமிழைப்புசியா தவராக்கினைக்கஞ்[illegible]ட. (சஅ)

ஆனைகரடிசிங்கம் ஐவாய்மிருகங்களும்
தானையுமறுகத்தாப் தம்பேர்கேட்டால்நடுங்கும். (சகூ)

சந்திரனுஞ்சூரியனுந் தாரையும்விசும்புமுதல்
அந்தரத்தின்வானவரு மழகாய்நடுங்கிருப்பார். (ருய)

தந்தைதலைய[illegible]த்துத் தாரணியில்விட்டெறிந்தோர்
மைந்தனையுங்கத்தழியால் வதைசெய்தமன்னவர்காண். (ருக)

என்றுமறுமன்னரெல்லா மிருமருங்குஞ்சூழ்ந்துநிற்க
வென்றியுள்ளவெள்ளானை வேந்துமறுகத்தாபால். (ருஉ)

[illegible]ங்கக்கொடியோங்கத் திரள்மன்னர்தாம்போற்ற
[illegible]ங்களங்கள்வாழ்த்த மறுமன்னர்கொண்டாட. (ருங)

[illegible]ளக்கொடியோங்கப் பாத்திகாத்தாளுகத்
தவளச்சங்குங்கமங்கத் தவில்முரசுந்தான்கறங்க. (ருச)

கொற்றக்குடைநிழற்றக் கொம்பனையார்தான்வாழ்த்த
வெற்றிவலம்புரிகள் விருதுசின்னந்தான்முழங்க. (ருரு)

வெஞ்சாமரையிரட்ட பின்னோர்ப்பிமாறப்
பஞ்சாட்சரமறையோர் பார்வேந்தர்தாம்போற்ற. (ருசா)

வட்டப்பிடித்துவர வாணர்விருதோதி[illegible]ப்
பட்டுப்பணிமாறுப் பாவாடைபோட்[illegible]வர. (ருஎ)

கட்டியக்காரர் கலையோர்புகழ்ந்[illegible]
பட்டுமணிமாலை பாவாடைபோட்டுவர. (ருஅ)

அட்டதிக்குமன்னரெல்லா மரசாரஞ்செய்துநிற்கத்
[illegible]ட்டுத்தட்டெடென்னத் தவில்களதிர்த்துவர. (ருகூ)

பேரிகைடம்மாரம் பெரியதவில்முரசு
[illegible]ரிகைபெக்காளம் புடைத்தேசெவிகுழற. (சாய)

நாகசுரமேளம் நகராவிருதுகொம்பு
கூகாணமாகக் கோடிபுடைசூழ்ந்துவர. (கூக)

ஆலவட்டம்வீச வரசர்புடைசூழத்
தாலவட்டமெல்லாம் தாங்கியொருகுடையில். (கூஉ)

செங்கோல்முறைநடத்திச் சிங்காசனத்திருந்தார்
குங்குமத்தார்மார்பர் கொலுவிருக்குமந்நாளில். (கூஙு)

தமீமன்சாரியைஜின்கொண்டுபோனது.

விருத்தம்.

மன்னர்கோனுமறுகத்தாப் மானிலமுழுதுஞ்செங்கோல்
இன்னிதாயாளுநாளி லியல்பெறுந்தமீமன்சாரி
பொன்னகர்மடவார்போற்றப் பொறைநெறியறிவுமுள்ளார்
அன்னவர்வரலாறெல்லாம் யாவருமுவந்துகேளீர். (கூச)

யாவருமுவந்துகேளி ரறிவுள்ளதமீமன்சாரி
காவலன்பரிசைபெற்ற கபீபிறசூல்கந்தோழர்
மாவலோர்யார்கடனில் வல்லவன்கிருபையுள்ளோர்
பூவினிற்றேவுகொண்டு போனதின்வாறுசொல்வாம். (கூரு)

(வசனம்.) மஹ்துல்லாவுடைய யார்கள் நாற்பத்தீராயிரம் பேர்களில் நின்றும் வீரசூரமு மிகுந்த அழகுரூபத்து முடையவருமாய் அல்லாகுத்தஆலாவுடைய கிருபைப்பேறு பெற்றவருமாய் அறபுநாட்டிலே தொழுதேயத்தி லரசர்வாழ்க்கையுடைய தமீமன்சாரியார் மூமினுக்கெல்லாம் ராஜாவாகிய வுமறுகத்தாபு றலியல்லாகுஅன்கு கொலுக்கூடி மாளிகைக் கெழுந்தருளினபின்னர் தாமுந்தமது மளிகைக்குவந்தாரென்றவாறு.

கண்ணிகள்.

வந்தார்தம்மாளிகையில் மன்னர்மனமகிழ்ந்து
விந்தைமயிர் சாயலினுல் வேண்டும்பசியாறி. (கூகூ)

சங்கையழகுள்ளநல்ல தமீமன்சாரியரும்
மங்கையருந்தாமுஞ்சப்ர மஞ்சத்தோர்பாய்தனிலே. (கூஎ)

கூடிக்கலந்துநல்ல கொங்கைநலம்பாராட்டி
நாடியேயங்கோர நாமுழுகவேண்டுமென்றார். (கூஅ)

அவ்வேளைகன்னி லரிவையுந்தானுஞ்சொல்வாள்
மெல்லிசைகனிவாய்திறந்து கேதையுந்தானுரைத்தாள். (கூகூ)

செல்வமெவனுக்கவில்லை செப்பரிநேரத்திலே
இவ்வேனைபோகா திருமென்றுளேந்திழைதான். (எ0)

ஒவ்வாதசொல்லுரைத்த வொன்னுதலைப்பார்த்துரைப்பார்
அவ்வலொக்குத்திலேநா னல்லோமுழுகவேண்டும். (எக)

ஆலநபிசொன்னகதி தங்குனாத்துத்தாமுழுங்
மேலவனையேவனாங்க வேண்டுமென்றுரைப்போது. (௭௨)

இன்னஞ்சற்றுநோ ரிங்கிருந்துபோய்முழுகு
மென்னவவள்சொல்ல இதுதான்விதியல்லவே. (௭௩)

புறக்கான்வழிநடந்தாம் பொற்பதியுண்டாநமக்குச்
சறுக்கிநடந்தோர்கள் தாழ்வார்நரகிலென்றார். (௭௪)

தடுத்துவிலகாதே சங்கையல்லக்காணுமிதிங்
குடித்தானீட்கூசு மூட்டனெடுத்துவாருமென்றார். (௭௫)

கன்னன்மொழிமடவாள் கையிற்கூசடுத்தாடையும்
இன்னுபிடியுமென ஈந்தாளவர்கரத்தில். (௭௬)

அந்நேரமங்கொருதே வானைவடிவாகக்
கன்னமிடவந்தவர்போற் கதவடியிலேபதுங்கி. (௭௭)

துதிக்கைதனைநீட்டிச் சுற்றிப்பிடித்ததுவே
கதிக்கப்பதுங்கக் கலங்கப்பிடித்ததுவே. (௭௮)

பூனைபோலேபதுங்கிப் புலிபோற்பிடித்ததுவே
ஆனைப்போற்றேவாய் கடர்ந்துபிடித்தனைத்தான். (௭௯)

கன்னலனையமொழிக் கன்னியருந்தானறியாள்
இன்னபிடித்ததென்றுங் கேந்திழையாள்தானறியாள். (௮௰)

விடிந்துவராக்காணமல் மெல்லியருமேக்கமுற்றுக்
கழிந்துவராக்காணமற் கலைவிழந்தமானதுபோல். (௮௧)

மன்றல்கொண்டதார்மார்பர் வாரவழிபார்த்தேங்கி
இன்றுநாளைவருவா ரென்றிருந்தாளேதேடி. (௮௨)

உண்டுபசிதீராம லுருகிமிகவாடிக்
கன்றிழந்தமான்போலே காரிகைதானேயிருந்தாள். (௮௩)

விருத்தம்.

இப்படிவருடமூன்று மிடைந்தழுதுருகிவாடிச்
செப்புநேர்முலைமின்னாள்தான் தீயிடுமெழுகுபோல
ஒப்பில்லாளிகரொன்றில்லா ளூழ்வினையெம்மைவிட்டுத்
தப்புமோவென்னமைந்தர் தன்முகநோக்கிச்சொல்வாள். (௮௪)

மைந்தரே[illegible]ண்மேனமுத்தே மதி[illegible]கக்[illegible]றேயுங்கள்
தந்தையவ[illegible]கயென்றே தாயர்வாய்புலம்பக்கண்டு
எந்தைதபேபிதாவேநாங்க ளிடைவதாநன்றேவென்னைச்
சிந்தையதுருகக்கண்ணீர் சிந்தினர்தாயரோடும். (௮௫)

(வசனம்.) இவ்வன்னம் மூன்றுவருடமாகத் தமீமன்சாரியாளாக்கா
ளைமம் மேடி யுருகி மறுகினவொன்றவாறு.

கன்னிகள்.

இப்படியேதான்பார்த்து சேங்கிமனஞ்சலித்து
மைப்படியுந்தேன்மொழியார் மானுள்மதிமயங்கி. (அசு)

பிள்ளையொருமூன்றிலுக்கும் பேதகங்கள்வாராமற்
கிள்ளைமொழிமானுள்தாங் கேவலமாய்த்தான்கரைந்து. (அஎ)

தாய்மக்கள்நால்வருமாய்த் தார்வேந்தருமறுகத்தாய்
வாயல்தனிற்சென்றிருப்போம் வாருநீர்மக்காளென். (அஅ)

என்றுமங்கமூவருட னீன்றதாய்நால்வருமாய்ச்
சென்றுபுறப்பட்டுத் தெருக்கடந்துபோகயிலே. (அகூ)

மன்றல்கொண்டதார்மார்பர் வள்ளலுக்கும்வள்ளலினார்
வண்டர்களைத்தாணெடுக்கும் வாகாருமரசர். (கூ0)

எங்களிருக்கின்ற வென்றங்குகேட்டளவிற்
குங்குமத்தார்மார்பர் குறுகிநிதம்பள்ளியிலே. (கூக)

மூபேன்களுக்கரசர் முகம்மதும்றசூல்மாதலர்
கோமானுமறுகத்தாய் கூட்டக்குழாம்நடுவே. (கூஉ)

மிக்கவுமமாக்கள் வேந்தர்புகடகுழத்
தெற்குவாயலருகே யிருக்கிறார்செல்லுமென்றார். (கூங)

கருபாலவந்நக்கியந்தக் காரிகைதானேநடந்து
வெகுசோபனமாக வேந்தருமனைக்கண்டாள். (கூச)

கன்னிசலாமுரைத்துக் கணவனுர்தம்மாலே
உண்டானசெய்தியெல்லா மொன்னுதலாள்தானெடுத்து. (கூரு)

ஒன்றொன்றாச்சொல்லியின்னு மொல்லொடியாளீதுரைப்பாள்
நன்றுமிகுந்த நம்பியின்மாதுலரே. (கூசு)

மூன்றுவருடமாச்சு மூமினேயென்கணவன்
ஊன்றுமிடமும்மறியேன் ஊர்திரும்பவுங்காணேன். (கூஎ)

பண்டுகாணுதகன்ற பத்தாவைநாடிவிதம்
இன்றுநாளைவருவா ரென்றேயெண்ணியிருந்தேன். (கூஅ)

உடுக்கக்கலையுமில்லை யுண்டிருக்கச்சோறுமில்லைப்
படுக்கவொருபாயுமில்லைப் பாராளுமன்னவரே. (கூகூ)

ஏழையெளியவளை எழுந்தவேரோர்க்கிந்தாம்
காளைகளைநாலுங்கஞ்சி குடித்தேகலிதீர்வோம். (ள)

இப்படியினைவகூற வேந்தலுமதிதுசொல்வார்
அம்மாநீயின்னமுநா லாண்டிருந்திருவென்றுரைத்தார். (ளக)

வேல்போல்விழியணைய மெல்லியுந்தானிதுரைப்பாள்
நாலாண்டிந்கெப்படித்தா னிருப்பேன்மன்னவரே. (ளஉ)

இன்றைக்கவ்வாச மேதுமில்லையென்னசெய்வேன்
என்றமொழிகேட்டே யெங்கோனுமரசர். (௪௩)

கூபத்தில்மாற்காரர்தம்மை வாருமெனவழைத்தே
உயர்த்திவில்லச்சீலை யுடுபிடவைதான்கொடென்றார். (௪௪)

மானார்க்குமக்களுக்கு மனதுகொசியாகத்
தேனார்மொழியாட்குச் செல்வுஞ்செலவுங்கொடுத்து. (௪௫)

காலாண்டுமிப்படியே நன்றாய்க்கொடுத்திடென்றார்
சேல்போல்விழியார்க்கு வேண்டியதெல்லாங்கொடுத்து. (௪௬)

மன்னருமறுகத்தாப் வள்ளலுரையின்படியே
அன்னநடைமானார்க்கு மாகங்களிகூர. (௪௭)

அன்னங்கொடுத்தார்க ளாடைபலதுங்கொடுத்தார்
சொன்னங்கொடுத்தார்க்குத் தோகைதுவாச்செய்தனளே. (௪௮)

ஆதிபெரியவனே யம்புவிபெல்லாம்படைத்து
நீதியுடனேவளர்க்கும் நிகரில்லாமன்னவனே. (௪௯)

எங்கள்கலிதீர்த்த வேந்தருமறரசை
மங்காசுவர்க்கபதி மாதவொடுந்தான்சேர்ப்பாய். (௫௰)

எந்தன்கணவனர்த்தா னென்னுடனேசேர்ப்பாய்நீ
நந்தாத்நாயகனே [illegible]ரடோாறுமுள்ளவனே. (௫௰௧)

வென்றியுள்ள ஆண்டவனே வெற்றிமமராயக்கொடு
என்றுதுவாச்செய்துமனே யேகினுள்மானுள்தாம். (௫௰௨)

மானுனுமக்களுமாய் மாளிகையிற்போயிருந்தார்
தீனேர்க்கரசர்சொன்ன தினமெல்லாஞ்சென்றதுவே. (௫௰௩)

காலாண்டுசென்றதற்பின் ஞாயருந்தானெழுந்து
கோலாகலவுமறு குங்குமத்தார்மார்பர்முன்னே. (௫௰௪)

வந்துமுன்னர்நின்று மாதுநல்லாளேதுசொல்வாள்
இந்துமுகத்தோரே யெங்கள்கலிதீர்த்தோரே. (௫௰௫)

மூமீன்களுக்கரசே முதலோனருட்கோவே
ஆமினார்பெற்ற அகுமதனுர்மாதுலரே. (௫௰௬)

மூன்றுவருட முறைமையுடன்முன்னிருந்தேன்
ஆ[illegible]ரான்காக வமர்ந்திருந்தேனிப்போது. (௫௰௭)

ஆக்க[illegible]மே மூாயிற்றேமன்னவரே
மாகினியா[illegible]ல்லாரப் பைக்கிளியைப்பார்த்துரைப்பார். (௫௰௮)

கத்தாவுடன்போகம் கடிபிறகுல்மார்க்கவழி
இத்தாகாவ்ரூறு இருமென்றுரேக்கிழைக்கு. (௫௰௯)

ஈதக்தலாவாத யார்த்தியர்கஞ் சொற்படியே
வேதமுறைமொழுங்கு வேண்டுங்காவல்பெல்லியரே. (௬௰)

என்றேயுமரச ரிவ்வாறுறைந்தபின்னர்
நன்றென்றுமயின்க ணாயகமென்றேநடந்தாள். (௱௨௰௧)

மாளிகையைநோக்கியந்த மங்கைநல்லாள்சென்றிருந்தாள்
நாழிகையோராண்டாக நாரியர்தானுட்கழித்தாள். (௱௨௰௨)

நூறுநாளிப்படியே நன்னிடையாள்நாட்கழித்து
மாறிரண்டுபேசா வள்ளலுமறருகே. (௱௨௰௩)

நடந்துமனைகடந்து நாரியர்க்குநாயகிதாம்
குடந்தயங்குமாமேருக் கொத்திடுநற்கொங்கையினள். (௱௨௰௪)

எங்கள்குலத்தரசே யெத்திங்கள் நாயகமே
சங்கையுள்ளழமீன்க டங்களுக்கெல்லாமரசே. (௱௨௰௫)

நாளையென்றுசெல்லாமல் நம்தோழமார்களிலே
யேழையெளியோர்க் கெழுதிக்கொடுமரசே. (௱௨௰௬)

என்றுமொழிந்தபின் னிறகுலின்மாதுலர்தாம்
நன்றியுள்ளயார்க ளொற்பத்தீராயிரவர். (௱௨௰௭)

தங்கள்முகநோக்கித் தார்வேந்துமறுசொல்வார்
மங்கையினைத்தாலிகட்ட வாள்வீரருண்டோகாண். (௱௨௰௮)

அதிலோர்சுகாபி யறிவோடெழுந்துசொல்வார்
நதியைத்திருப்பியந்த ராஜர்பெரும்பதியை. (௱௨௰௯)

அதிகபுதுமையினு லவ்வு[illegible]சுலாம்வளர்த்தீர்
மதியையழைத்தநபி மாதுலரேகள்மணியே. (௱௩௰)

மறைபீனெறிதவறு மாதுகவிழ்த்தவெண்ணெய்
தலையின்மிர்த்தேவாங்கித் தளம்பாதளித்தவரே. (௱௩௰௧)

என்றுமிக்கவென்பதனை யானறியேன்மன்னவரே
இன்றேயெனக்குநிக்கா கெழுதித்தரவேண்டுமென்றார். (௱௩௰௨)

அந்தமொழிகேட்டங் காள்வீரவுமறுகத்தாய்
சிந்தைகளி[illegible]ர்ந்தே தீரருமறுகத்தாய். (௱௩௰௩)

காலிதனையழைத்தே காசினியோர்தான்சூழ
ஆலிம்நபிமார்க்கவழி யழகாயெழுதுமென்றார். (௱௩௰௪)

நிக்காகங்கெழுதியபின் னிறைந்தகளரியுள்ளோர்
மிக்கானபாத்திகா விளம்பினரெல்லோரும். (௱௩௰௫)

ஆலயமித்தோழ னாயெட்டுராயிரரும்
மேலவனைத்தான்புகழ்ந்தார் வேந்தருமறுடனே. (௱௩௰௬)

எல்லோருவ்வாழ்த்தி யிறையோனைத்தான்போற்றி
மல்லார்புயத்தாமே மாப்பிள்ளைநாயகமே. (௱௩௰௭)

மங்கைதனைக்கூட்டியுங்கள் மனையிற்போமென்றனரே
சங்கையுடனெழுந்தே சலாஞ்சொல்லித்தாழ்ச்சிசெய்தே. (௱௩௰௮)

நல்லோர்பெரியோரே நபிதோழரேநீங்கள்
எல்லோருஞ்சொர்க்கபதி யினைப்பெறவீரென்றுரைத்தே. (௱௩௯)

ஏந்தலுமறுபத மேற்றிப்புகழ்ந்துரைப்பார்
வேந்தர்க்கரசே விடையருளுநபீனே. (௱௪௰)

அல்லாவருளாலே ஆதிபவுசுண்டாங்காண்
வல்லிதனைக்கூட்டியுங்கள் மாளிகைக்கநேகுமென்றார். (௱௪௧)

வண்டுறையுங்கூந்தல் மடமாதேமாமயிலே
சென்றாலுமங்கிருப்போஞ் சேடியர்க்குநாயகமே. (௱௪௨)

அம்மாளிகையுண்டு நாயகரேநீர்வாரும்
அம்மாளிவைகூற அன்னம்போலேநடந்தார். (௱௪௩)

பேர்ன இருவருமாய்ப் பூவையர்தின்மாளிகைக்கே
சென்றார்தன்மாளிகையை யலங்கரித்திட்டிக்கினரே. (௱௪௪)

கரமசப்புவெடுத்துத் தான்விதானித்தனரே
பரமதானியெடுத்து விரித்தார்கள்பாவைநல்லார். (௱௪௫)

மெத்தை நயதின்மேல்விரித்தார் மேற்கட்டிப்பூம்பந்தரிட்டார்
கத்தாவருளிதெனக் கல்புகளிகூர்ந்திருந்தார். (௱௪௬)

பிரியக்கடல்பெருகிப் பெண்ணரசேகேளுமென்றார்
அருளைப்படைத்தவனை யான்வணங்கவேண்டுமென்றார். (௱௪௭)

அத்தராவிச்சாமத்திலே யானுமதுச்செய்துகொண்டு
நித்திரைதான்செய்யாமல் நிமாசுசெய்யவேண்டுமென்றார். (௱௪௮)

செம்பாதிசென்றதற்பின் தேவியேநாமிருவர்
சம்போகஞ்செய்து சந்தோஷமாயிருப்போம். (௱௪௯)

என்றமொழிகேட்டவ் வேந்திழைதானன்றெனவே
சென்றுகூசாவெடுத்துத் தெளிந்தபுனலெடுத்து. (௱௫௰)

ஆசாரஞ்செய்தங் காயிழைதண்ணீர்கொடுத்தாள்
ஈசாத்தொழவே எழுந்திருந்தார்மூமினே. (௱௫௧)

தண்ணீர்தனிவாங்கிச் சகாதக்குத்தாஜோதி
என்றமுள்ளஆண்டவனை யென்பிழையைநீபொறென்றே. (௱௫௨)

துய்யவுலுச்செய்தே தொழுகைக்குப்போனதற்பின்
மெய்யவளின்னுள்ளமுங்கூசிற்றங்கோதி. (௱௫௩)

பத்தினியவள்நேருவே பண்பாகவேநடந்து
முத்தமெனமனில் மெய்குழலாள்வந்திருந்து. (௱௫௪)

கபுலாக்குநாயகனை கத்தாவேயென்றுசொல்லி
கிபுலாவைநோக்கி யிருந்தாள்இனிமொழியாள். (௱௫௫)

நிகரில்லாதவனையோதி மிக்கஷகாதத்தோதித்
துகுமனனுகாமற் றுய்யவனேகாவென்றனள். (௱௫௬)

விருத்தம்.

துய்யவனருளினாலே துரிதமாயரியபட்சி
தையலாள்வாசல்முன்னே தமீமனையிறக்கிவிட்டு
மையெனவெழுந்துபட்சி வானையேநோக்கிச்செல்லச்
செய்யுநேர்மாதுகண்டு திடுக்கமுற்றயர்ந்தாளன்றே. (௱௫௭)

விண்ணிலேபட்சிசெல்ல விரிதலைச்சடையுமாக
நின்னையத்தமீமன்சாரி நேரிழைவாசல்முன்னே
கண்ணினாற்கண்டுமாது கயங்கியேமயங்கியேங்கி
அன்னைமேலறகீமேயுன்ற னுடைக்கலந்தானேயென்றாள். (௱௫௮)

(வசனம்.) அப்பெண் கூசாவிலே தண்ணீர்கொண்டுவந்து கிபுலாவுக்கு நேரோயிருந்து முன்கைகழீஇ முகங்கழுகும்போது தமீமன்சாரியா ரிவ்வண்ணம்வந்துநின்றுசொன்னவாறு.

கண்ணிகள்.

முன்கைகழுகி முகங்கழுகும்வேளையிலே
மங்கைமுன்னே தமீமன் சாரிநின்றார்மாமலைபோல். (௱௫௯)

தலைரோமந்தான்வளர்ந்து தரையிற்சடை தூர்க்கக்
கலைகளொன்றுமில்லாமற் கருப்பூதம்போலேநின்றார். (௱௬௰)

கண்டுகலங்கிக் கருத்தழிந்துமெய்மறந்து
பண்டுவினையின்றுவந்து பலித்ததோபாவிமுன்னே. (௱௬௧)

தேவபரிஜின்னோ தெரிகிலேனென்றேங்கி
நாவுகொடுலாஹவுலை நன்றாகத்தானோதி. (௱௬௨)

நீரொன்றுளப்போது சொல்லுவார்தமீமனவர்
காரணமுந்தல்மின்னே கணவனைத்தூராக்குவதோ. (௱௬௩)

வந்ததுநீயொட்டா மரியாதையில்லாமல்
எந்தன்கணவனென வேறாதசொல்லுரைத்தாய். (௱௬௪)

என்வீட்டில்யான்வந்தே னென்தேவிநீயல்லவோ
ஜின்பரியுந்தேவுகளுஞ் செப்புமேயிப்படியே. (௱௬௫)

இன்னான்மகனானீ யின்னார்மகளல்லவோ
முன்னாளிரவில் முதலிருவோருந்தனியே. (௱௬௬)

மன்னன்குருளில் வழுங்குமோராயத்துநான்
சொன்னதுண்டே நீயுமன்று சொன்னதோராயத்துண்டே. (௱௬௭)

எப்படிநீசொன்னாலு மென்மனதிற்கேற்கவில்லை
இப்படியுஞ்சொல்லுந்தே வென்றாளிளமயிலாள். (௱௬௮)

என்புருடர்தமீமன்சாரிக் கிப்பாரிலொப்பில்லைக்காண்
மன்புருடர்க்கொவ்வாது வதனவொளியழகு. (௱௬௯)

ஏழுவருடமாயிற் றென்புருடனேகியிப்போ
லாளரசர்தான்பணியு மன்மதனைவெல்லவல்லார். (௱௭௰)

ஜின்னேயர்தேவோ தெரியாதுன்மாயமென்னத்
தன்னுடலெல்லாம்பதறித் தத்தளித்தங்கீதுசொல்வாள். (௨௭௧)

ஐயோவிஃதென்னவினை யாயிற்றென்றுதானேங்கி
மையுலாவிழியாள்தான் வாய்விட்டுக்கூவென்றழுதாள். (௨௭௨)

கூவென்றசொற்கேட்டுக் கோபமுடனேயுமயி
மாவென்றமன்னர்சிங்க மனையைவிட்டுவந்தடர்ந்து. (௨௭௩)

வந்துநீயாரடா மரியாதையில்லாமல்
எந்தன் [illegible]னயாளோ டிட்டோட்டுப்பேசுகிறாய். (௨௭௪)

என்றங்கசுகாபிக் கிருகண்ணிற்றீயெரிய
வன்டுறுக்கிப்பற்கடித்து வருவதுகண்[illegible]சொல்வார். (௨௭௫)

வந்தவன்தான்யானல்லவோ வல்லிதா[illegible]னென்றேவியல்லோ
உந்தன்மனையென்றே வுறுக்கியென்முன்னேடிவந்தாய். (௨௭௬)

உன்[illegible]னநான்விடுவதுண்டோ வென்றேயுறுக்கிச்சொல்வார்
என்னையறியாதா ரிவ்வுலகில்யாருமில்லை. (௨௭௭)

என்மனையாளென்பதனை யெல்லோருந்தானறிவார்
உன்மனையா[illegible]ளென்பதனை வுண்டாக்கமாட்டார்காண். (௨௭௮)

அப்போதசுகாப[illegible] கதிகசுகமானதுவே
செப்பாவெனநட[illegible]து சேர்ந்தார்மற்போராக. (௨௭௯)

சேர்ந்தபின்தமீமன் சாரிசிக்கம்போலேபாய்ந்து
சேர்ந்தகழுத்தில் நெடியநகங்களினால். (௨௮௰)

அழுத்தப்பிடித்தார்கா ளல்வாப்பிநுகமென்ன
வளர்ந்தநகங்களினால் மறுபுறங்காலைப்பிடித்தார். (௨௮௧)

அதைக்கண்டுமானு ளப்பவனியாயமென்றான்
இதுநல்லபாவமா யிற்றின்றுநிக்காகெழுதி. (௨௮௨)

செவ்வேமனையில்வந்து சேர்ந்திங்கிருக்கவில்லை
பவ்வக்கலியிதுவோ பாவிஎன்றன்பாக்கியமோ. (௨௮௩)

எழாண்டுபட்டசள மெனக்குத்தான்போராதோ
ஆளவல்லான்றாத ரகுமதிற்றருல்மாதுலர். (௨௮௪)

மூரீளரசர்முன்னே முறையிட்[illegible]மூன்றுதரம்
[illegible]னதிரங்கித் தார்வேந்துமறுகத்தாப். (௨௮௫)

எழுவ[illegible]மியா னிருந்தநெறிகண்டிரங்கி
ஏழைமிசுக்கீனுக் கெனையெழுதியிந்தார்காண். (௨௮௬)

இன்றென்மனையில்வந்தார் யான்செய்தபாவமிதோ
நன்றுநடுவில்லையோ ராஜாவில்லாப்பதியோ. (௨௮௭)

சொன்னவிடுமோதேவு கூகூ வெனவழுதாள்
மன்னுபல்லிலொண்டதோளார் முகம்மதம்யார்கள் சிலர். (௨௮௮)

கூச்சத்தமேதென்றே கூடியங்களோடவந்தார்
வாய்ச்சத்தங்கேட்டோடி வந்தார்நகரிலுள்ளோர். (௱௮௯)

சுற்றுள்ளயார்களெல்லாந் தொடர்ந்தோடிவந்தார்கள்
மற்றுள்ளயார்களெல்லாம் வந்தேமனைபுகுந்தார். (௱௯௰)

மனைபுகுந்தயார்களிவர் மற்கட்டைத்தான்விலக்கி
வினையோவிதென்னபழி வில்வசன்டையேனுமர்க்கு. (௱௯௧)

என்றுவிவரி யிருந்தபேர்புத்திசொல்லிச்
சென்றங்கசுகாபிகள்முன் செப்புவார்தமீமனவர். (௱௯௨)

என்னையறியீரேர்வென்பேர் தமீமன்சாரியென்றார்
வன்னடூனைமாறுஞ் மனைய[illegible]வுமென்னதென்றார். (௱௯௩)

அப்போசசகா பனைவோருந்தான்சொல்லுவார்
இப்போதேவ்பேசுகிறீர் எல்லாம்விடிந்தாற்றெரியும். (௱௯௪)

கொண்டற்குடையுடைய கேஜ்ஜாலம்யார்களிலே
வண்டுறையுங்குங்குமத்தார் மார்பனையுங்கண்டிருப்போம். (௱௯௫)

இவ்வுலகிற்றமீமன்சாரிக் கியலழகுக்கொப்பிலைக்காண்
செவ்வானெழுந்தமதி சோராதவரழகு. (௱௯௬)

சட்டையழகுஞ் சருவந்தக்கட்டழகும்
வட்டமதிமுகமு மலர்ந்தகுன்றக்காதும். (௱௯௭)

குவளைவிழியழகும் கூறரியமூக்கழகும்
பவளவிதழழகும் பாகிலியசொல்லழகும். (௱௯௮)

வில்லின்புருவத்தழகும் வெண்முறுவற்பல்லழகும்
சொல்ல[illegible]ரில்லாத சுறுமாவிழியழகும். (௱௯௯)

குங்குமச்சந்தார்மார்பகனிற் கோதையர்க[illegible]ாஞ்சவைப்பார்
தங்கமுள்[illegible]ளுவ்வாது தமீமன்சாரிதம்மழகு. (௨௱)

நல்லார்க்குநல்லார்கா ணுயனருட்பெற்றவர்காண்
சொல்லத்தொலையாது தூயவடிவழகு. (௨௱௧)

நாங்களறிவோமே நபிதோழர்தமீமன்சாரி
பாங்கானபச்சைப் பரியுடையபார்த்திபர்காண். (௨௱௨)

நபியினசுகாபிகளில் நாற்பத்திரண்டுபேரிற்
நவி[illegible]தவாள்வீரர் சண்டைப்ரசண்டர்களூர். (௨௱௩)

இன்றுநீர்தமீமன்சாரி யென்றதுதானெங்களுக்கிவ்
கொன்றுந்தெரியவில்லை யுண்மையாய்க்காணுதில்லை. (௨௱௪)

உண்மையுள்ளோனல்லா வொழியவேறுண்டோதான்
உண்மையுள்ளயார்களெனீ ரொருவசனந்தான்கேளீர். (௨௱௫)

சோதியின்றன்கிருபைத் தரும்பைத்தாணுக்கவல்லான்
ஆதிபொருந்துனை யத்துருமபதாக்கவல்லான். (௨௱௬)

கடலைத்திடராக்கிக் காட்டைநகராக்கவல்லான்
திடரைக்கடலாக்கிச் செப்புநகர்காடாக்கவல்லான். (௨௱௭)

அல்லாவருட்படிமுன் னுவதுவேயர்குமல்லால்
வல்லானன்மையாகில் மனுடராலாவதுண்டோ. (௨௱௮)

காலைவிடிந்ததம்பின் கத்தாபுமறருகே
யேலந்தருஞ்சுந்த லேந்திழையுமீருமவர். (௨௱௯)

மூன்றுபேருமுமறு மூமீனரசர்முன்னே
ஆண்டவன்றன்கிருபை யருட்பெற்றமன்னவரே. (௨௱௰)

எனப்போற்றிவேந்தநம திடத்திலுரைத்திடுவோம்
உமைக்கூட்டிப்போகவென்று ளுடன்கூட்டிநீரொரும். (௨௱௰௧)

அவ்வாயழைத்துமறன் கவர்பிறகேபே கச்சொன்னால்
எவராலுமன்னர்முன்னே எதிர்த்துரைக்கப்போகாது. (௨௱௰௨)

தந்தையபிசுலாமார்க்கஞ் சற்றேபேசினதாற்
சிந்தைகழன்றிந்து சிரத்தைத்துணித்துவிட்டார். (௨௱௰௩)

பெற்றபிள்ளைசெய்தகுற்றம் பிழைபொறுக்கமாட்டாமல்
கத்தியினாலுயிரைக் காசினியிற்கொன்றனரே. (௨௱௰௪)

அப்படிநீதங்கே பா ராசுமறுகத்தாப்தாம்
ஒப்புவமையுண்டே கா ணுமறுகத்தாப்நீதத்திற்கே. (௨௱௰௫)

என்றங்கசுகாபிமா ரிருவருக்கும்புத்திசொல்லி
நன்றாகச்சூழ்ந்திருந்தார் நாயன்பணிவிடையால். (௨௱௰௬)

கிழக்குவெளுத்தவுடன் செம்பீர்பிலால்வாங்குரைத்தார்
முழக்கமுள்ளவாங்குச்சத்த முத்நபியுமர்தாங்கேட்டே. (௨௱௰௭)

கருபாவைநோக்கி கத்தாபுமரசர்
மருமூனைதவாழ்த்தி மனைப்ப ளிவாசல்வந்தார். (௨௱௰௮)

மறையோருலமாக்கள் மற்றுமுள்ளயார்களுடன்
நிறைந்துகூடிநின்றே நிமாசுதனைச்செய்தார்கள். (௨௱௰௯)

தொழுதுமுடிந்ததம்பின் துவாயோதியபங்கவர்கள்
பழுதகலும்வல்லவனே பாவம்பொறுத்தருள்வாய். (௨௨௰)

என்னவுமறிருகை யேந்திதுவாச் ய காரோ
மனை சுகாபிகளு மறையோருமாமீனென்றார். (௨௨௧)

பாத்திகாவோதியிருந் தார்கள்பரிவுடனே
வேற்றரசர்தாள்பணியா மேவலனாவென்றசிங்கம். (௨௨௨)

பள்ளிப்புறத்தினிலோர் பாரிசத்திற்றனிருந்தார்
ஒள்ளியோரமேமேலா ருலமாக்கள்சூழ்ந்திருந்தார். (௨௨௩)

எண்ணைந்தீராயிரம்பே ரழிலாகச்சூழ்ந்திருந்தார்
வெண்ணிலவைச்சூழ்ந்த மீன்கள்போற்சூழ்ந்திருந்தார். (௨௨௪)

விருத்தம்.

இப்படியுமறுவேந்த ரிருந்தனரிருந்தபோது
தப்புறத்தமீமன்சாரி தமையிராக்காத்தயார்கள்
ஒப்புடனிருவர்தன்னை டொன்னுதமனையுங்கூட்டிச்
செப்பமாருமறுகத்தாப் திருப்பதம்வந்துகண்டார். (௨௨௫)

கண்டனர்தமீமன்சாரி கருதியேசலாமுங்கூறிக்
கொண்டல்சேர்குடையார்மேவதக் குருநபிமாமனுரோ
யண்டெனையறிந்திலீரோ பாத்துபார்க்கரசேகேளும்
அண்டுவார்சிங்கமேயான் தமீமன்சாரீயேயென்றார். (௨௨௬)

(வசனம்) இப்படித்தமீமன்சாரியார்சொல்ல மூமின்கட்கெல்லாம் ரா
ஜாவாகிய வுமறுகத்தாபிஃதருளிச்செய்தாரென்றவாறு.

கண்ணிகள்.

தமீமன்சாரியென்றவுடன் சந்தாபித்தேயுமறு
நமதசுகாபிகளில் நாமறியாப்பேருமுண்டோ. (௨௨௭)

தேவுபரிஜின்னை தெரியாதென்றுவேந்தர்
நாவுகொண்டோராயத்தை நபிமாதுலரோதி. (௨௨௮)

ஊ[illegible]த்தாரொன்று ருரைத்துநின்றார்தமீமன்சாரி
ஆ[illegible]மியானதினு லசையாதுநின்றனர்காண். (௨௨௯)

தேவுபரிஜின்னாற் றெரியாததூரஞ்செல்லும்
[illegible]வுபரிவேந்தர் சந்தாபந்தீர்வதற்கே. (௨௩௰)

நமக்கெல்லம்புத்திமா னுயன்அறசுப்புலியார்
தமக்கெல்லாந்தான்தெரியுஞ் சந்தாபமூந்திரும். (௨௩௧)

என்றேயுமறுகத்தா பெருந்திட்டர்யார்களுடன்
தண்டாமரையினம்போற் றுன்சூழ்ந்தார்வேந்தரெல்லாம். (௨௩௨)

முகம்மதுற்றசூல்மாதுலர் மூமீன்களுக்கரசர்
ஐகவுமறுகாமலியார் தம்மகத்திற்கேகடந்தார். (௨௩௩)

அலியார்மனைக்குமறு நண்ணவெழுந்துசெல்ல
வலியவாள்வீரர் வகைவகையாய்த்தானெழுந்தார். (௨௩௪)

வச்சிரநாடாளுகின்ற வள்ளலுமறுடனே
பசனை[illegible]ரிவேந்தர் நடந்தார்பரிவாக. ([illegible])

மூரகத்[illegible]ருடைய [illegible]யுமறுடனே
குரகதர்கள்தானொருங்கக் கோடிப்படை சூழ்ந்துவர. (௨௩௬)

குருவினம்தம்போற்றுங் குறைசிக்குலத்தோர்கள்
சருவந்தமாமுடியோர் சதகோடி சூழ்ந்துவர. (௨௩௭)

கொள்ளாததேசந்திறை கொண்டவுமறுடனே
வெள்ளானைவேந்தர் விரதமொருகோடிவர. (௨௩௮)

குருப்பாதம்போற்றுங் குங்குமத்தார்மார்பருடன்
கருப்பாறின்காவலவர் கடல்முழக்கம்போலெழுந்தார். (உ௩௯)

இங்கிலத்தில்மன்னர்பத மேற்றித்திறையளக்கும்
வன்னியர்களோர்கோடி மன்னட்விகரோர்கோடி. (உ௪௰)

மிகவிருதுமுன்னடக்க வேந்தரணிபின்னடக்க
மகமேரிடக்கையங்ஙன் வாணிடிக்குமொப்பதிர. (உ௪௧)

சிங்கக்கொடியுஞ் சிவந்தபவளக்கொடியும்
மங்காதவெங்கொடியு மகாமீனக்கொடியும். (உ௪௨)

வட்டமதிபோலே வளர்ந்தகிரணக்கொடியும்
பட்டுப்பணிமாமப் பாவாடைபோட்டு[illegible]. (உ௪௩)

வட்டுப்புகழ்ந்துவர வாணர்விருதூதிவரக்
கட்டியக்காரர் கலையோர்புகழ்ந்துவர. (உ௪௪)

நாகசுரமேளம் நகராவிருதுகொம்பு
வாகுடனேமுழங்க மண்ணும்விண்ணு[illegible]மேயதிர. (உ௪௫)

குரகதமேல்டம்மாரங் கோண்டயிடிபோல்முழங்க
விரகாதங்களின்மேல் வேடிக்கைசெய்[illegible]வர. (உ௪[illegible])

பேரிகையெக்காளம் பெரியவீராணமுடன்
பூரிகைமும்முரசு [illegible]டைக்குங்தொனிகுமுற. (உ௪[illegible])

தவிலொடுதம்பட்டந் தக்கவிடிபோலதிர
செவியடக்கவாத்தியங்கள் திக்கெல்லாந்தான்முழங்க. (உ[illegible])

மாரியெழுந்துபொங்கி மண்ணிற்பாய்ந்ததுபோல்
சூரியனுந்தோற்றமற் றுகளால்மறைந்ததுவே. (உ௫௰)

விருத்தம்.

பொருசினவீரார்த்துப் பு[illegible]டந்திருமருங்கிற்போக
வருசினவாரணங்கள் மலைகள்போலசைந்துசெல்லக்
குருகிதோழரான கோளரியுமறுகத்தா
பருசினிற்புலியாராலி மாமனைகுறுகினாரே. (உ௫௧)

அரண்மனை குறுகியாலிக் கன்புடன்றாதுபோக்கார்
பொருவினைக்குபிணாவென்ற பொற்புலிபாற்சென்றன்னார்
ஒருவனைவனைக்குமூமீ னுமதுழைவாரரென்றார்
வி[illegible]னிற்சொலுமுனவர்ந்து வேந்தனைதழீஇக்கொ[illegible]. ()

(வசனம்)இப்படிமூமீன்கட[illegible]ராஜாவாகியவுமறுக[illegible]புலி
வல்லாகுஅன்கவர்களையலியார்தழீ இக்கட்டிப் புகழ்ந்தச[illegible]சொ
ல்லிச் சொல்லுவார் தேவரீரவர்கள் அல்லாகுத்தஆலாவுடைய தூதரா
கிய நகுலுல்லாவுடைய திருவாழி முத்திரைதரிக்க பட்டத்திராஜாவா
கவிருக்க மிசுக்கினவிலெழுந்தருளி வந்தகாரியமென்ன எதுகாரிய
த்திற்கும் சொல்லியனுப்பினவைத்தால் சாகிபவர்கள் அன்டைக்கோம

வாரோனேவென்று பலதுஞ்சொல்லிப் பரமதானிவிரித்தங்காசாரத்து டனே உமறுகத்தாபுராஜாவை யிருக்கவைத்து அலியார்தாமு மிருந் துகொண்டேறிட்டுப்பார்த்தாரொன்றவாறு.

கண்ணிகள்.

மாறிட்ட கன்னுசின் வலக்கண்ணைத்தான்கெடுத்தோர்
ஏறிட்டுப்பார்க்க எங்கோனபிமருகர். (௨௫௨)

பார்த்தாரபதாதிவெள்ளம் பல்வக்கடலடுங்க
வேற்றுருவாய்த்தமீமன்சாரி விரைந்துமுன்னேவாரதுவும். (௨௫௩)

கிண்டங்கலியுரைப்பார் காரணந்தானிதெனவே
இன்றுதமீமான்சாரி வாரஇயல்புகண்டு. (௨௫௪)

வாருந்தமீமன்சாரி சலாமென்றார்மன்னர்சிங்கம்
நேருந்தமீமன்சாரி நீதியலிதான்பணிந்தார். (௨௫௫)

பணிந்தவரையாசரித்துப் பார்வேந்தர்முன்னிருத்தித்
துணிந்தெனைநீரறிந்ததுவுந் துய்யோன்திருவைகண்டீர். (௨௫௬)

அப்போதுமறுகத்தா பலிதனையேபுகழ்ந்தார்
ஒப்புவமையில்லான்முன் னொருநலருக்குமிப்படியே. (௨௫௭)

இல்லாஅலியார்க்குக் கொடுத்தவறிவதுபோல்
எல்லோர்க்குந்தான்கொடுக்க வில்லையென்றேயதம்பின். (௨௫௮)

மன்னருமறுகத்தாய் வாள்வீரனைநோக்கிப்
பொன்னுருநல்ல புகழுந்தவாய்திறந்து. (௨௫௯)

எழிரவுமோரிரவா யெங்கோனுடன்பேசி
மீளநபிசொன்னார் வெற்றிஅலிகீர்த்தியெல்லாம். (௨௬௰)

முன்னுமுங்கம்மதனர் மொழிந்திடுமக்காரணத்தை
இந்நாளில்யாமெல்லோரு மெழிலாகக்கண்டோமே. (௨௬௧)

வலியார்க்குவலியவனே மட்டிலடங்காதவனே
அலியாரின்சிற்றை அல்லாவேநீயறிவாய். (௨௬௨)

என்றுநபிசொன்னசொல்லுக் கின்றேபொருள்றிந்தோம்
இன்றுகண்டோந்தாழ்ச்சி யென்றுருமறரசர். (௨௬௩)

விருத்தம்.

இன்றுநல்லலியைப்போற்றி யிருந்தனருமறுகத்தார்
வென்றிவாள்வீரர்சேர வேந்தரைச்சூழ்ந்துபோற்றி
நன்றிசேர்மூமீன்கட்கு வாம்பத்திரராயிரர்க்கும்
இன்றிங்ஙன் தமீமன்சாரி வந்ததைவிளம்புமென்றார். (௨௬௪)

முகம்மதுநபியுல்லாதம் மருகனாலியைப்போற்றி
மிகமகிழுமறுகத்தாப் வேதியர்க்கரசர்கோமான்
ஜகமதிற்றமீமன்சாரி சார்ந்ததைதயுரையுமென்ன
அகமதிற்பிரியமாகி யரசர்கோனுடனுரைப்பார் (௨௬௫)

(வசனம்) அப்போது அல்லாவுடைய அறுசின் கீழே புலியாகிய அலி
ர் தமீமன்சாரியைப் போற்றிசெய்து அல்லாகுத்தஆலாவுடைய கிரு
பைநோக்குள்ள தமீமன்சாரியே நீர்போயிருந்தவரையுமுள்ளகணக் கே
ளூவ நடமும்தானுநாளுமாயிற் றன்றுமுதலின்றுவரையு நீர்போன தல
ங்களு மங்குள்ளதாகிய புதுமைகள் காரணீகங்க ளுள்ளவைகளெல்
லாமு மூமீனகட்கிராஜாவாகிய உமறுகத்தா புறலியல்லாகுஅன்கவர்களுக்
கு நாற்பத்திராயிர வசகாபிகளுக்கும் மற்றுமுண்டான நல்லோர்பெரி
யோர்களுக்கும் தெரியச்சொல்லுமென்றார் அதுகேட்டுத் தமீமன்சாரி
யாரெழுந்து நின்றியாவர்க்கும் சலாஞ்சொல்லி மூமீன்கட்கெல்லாம்
ராஜாவே நான்பட்டபாடுகளெல்லாம் சொல்லுகிறேன் நன்றாகப் பராக்
கின்றிக் கேட்குகவென்று சொல்லஆரம்பித்தா ரெவ்வாறு

கண்ணிகள்.

அல்லாகிருபைபெற்ற ஆலநபிதோழர்களே
எல்லோருநல்லோர்க ளின்பமாய்க்கேளுமென. (உசுசு)

முன்னுளிலவ்கின் முடிந்துலகிடைந்தசெய்தி
சொன்னார்தமீமன் சொன்னக்கனிவாய்திறந்து. (உசுஎ)

காலுமென்றன்தேவியுமாய் நாடியொருபாய்தனிலே
தேனும்பாகும்போலச் சேர்ந்தேகலந்திருந்தோம். (உசுஅ)

அந்தவொகுத்திற்றான் யான்முழுகவேண்டுமென்றேன்
இந்தச்சரிசாம மிலையுசும்பாநேரத்திலே. (உசுகூ)

இந்நேரம்வேண்டா மிருமென்றுளென்தேவி
சொன்னவுடனேதானத் தோகைதனைச்சினந்து. (உஎய)

கூசாவுதெத்தாடை கொண்டுவாவென்றேன்பின்
பேசாதெடுத்துவந்து பிடியொருள்பேதையவள். (உஎக)

அந்தமொழிகேட்டன் கானவடிவாய்த்தேவு
சிந்தைகலக்கமுறச் சேர்ந்தேபிடித்ததுவே. (உஎஉ)

திக்கையாய்சுற்றிச் சூறுவளிபோலெடுத்துக்
கதிக்கப்பிடித்தென்டம்வனா கடுகிப்பறந்ததுவே. (உஎங)

பறந்துவான்போகயிலே பாதாபந்தானுகி
மறந்துதுனியாவின் வாழ்க்கைசரியாயிற்றென்றே. (உஎச)

அப்பொய்த்தேவுகையி லகப்பட்டதப்போதே
துனியாவின்வாழ்க்கைகளின் துன்பமெல்லாந்தீர்ந்தேனுள். (உஎரு)

சற்றேநினைவுவந்து தரணிதனைப்பார்த்தளவிற்
கர்த்தனருளாலே கண்டேன்புவனமதை. (உஎசு)

மண்ணின்பரப்பெல்லாமோர் வட்டவெளிதனிலே
இல்லனைக்கிடந்தியக் கிடந்ததுபோற்கண்டதுவே. (உஎஎ

மற்றுமயங்கி மறுகாலும்பார்த்தளவின்
முற்றவெளிதன்னிலொரு மோதிரத்தைப்போட்டதுபோல். (உஎஅ)

பின்னுமதிமயங்கிப் பேதலித்துத்தானேங்கித்
தன்னைமறந்து சரீரம்பதைபதைத்தே. (உஎகூ)

ஒன்றுந்தெரியாம லுணவுமிகவழிந்து
கண்டுகளித்தேன் கலக்கஞ்சற்றேதீர்ந்தபின். (உஅ௦)

வகையாசிப்பூமிதன்னை மறுகாலும்பார்த்தளவிற்
புகையாயிருந்ததல்லாற் பின்னையொன்றுந்தான்காணேன். (உஅக)

நெஞ்சிலுணர்வும் நினைவுமறந்தனவே
பஞ்சபாதகத்தேவு பாதாளந்தானேகி. (உஅஉ)

அஞ்சாம்பூமிதன்னி லிறக்கிவிட்டுப்போனதுவே
கஞ்சாயக்கம்போற் கண்விழியாமற்கிடந்தேன். (உஅங)

மூன்றுதினஞ்சென்றதற்பின் முழித்தேனினைவுவந்து
மாண்டஜடமதுதான் மற்றுமுயிர்பெற்றதுபோல். (உஅச)

சற்றேநினைவுவந்து தலையெடுத்துப்பார்த்தளவிற்
கத்தனருளாலே காவொன்றுதோன்றியதே. (உஅரு)

வலதுபுறமாக வாய்த்தபெருந்தோப்புதன்னிற்
பலதுவகைமரமாய்ப் பாரவிருட்சங்களாய். (உஅசா)

கண்டுமனமகிழ்ந்தக் காவுதனிற்செல்லவெற்குத்
தண்டியெழுந்திருக்கத் தத்துவங்களில்லாமல், (உஅஎ)

கட்டித்தடுமாறித் தவழ்ந்தந்தக்காவினிற்போய்
மட்டிலமையாக்கனிகள் வகைவகையாய்க்கண்டனனே. (உஅஅ)

கண்டகனிபார்த்துக் கல்புகளிகூர்ந்து
தின்றேன்பசிதீர்ந்தேன் தேனிலினியகனி. (உஅகூ)

தேனும்பழம்பாலுஞ் சீனியுமொவ்வாக்கனிதான்
கானின்கனியதுவோ கழறுசொர்க்கநற்கனியோ (உகூ௦)

என்னுந்துனியாவி லிக்கனிபோற்கண்டதில்லை
வெண்ணெய்தனிலு மெதுவானதக்கனிதான். (உகூக)

கனியுடையவாசமிந்தக் காசினியிற்கண்டதில்லைப்
பனிதனிலும்வெண்மைப் பரிமளங்கொள்வாது. (உகூஉ)

தேன்வருக்கைப்பூங்கதலி தின்றாற்றெவிட்டாது
மாங்கனிகள்நல்ல மதுராக்கனிகளுடன். (உகூங)

முந்திரிகைபேரீத்த முதிர்ந்தகனிகளுடன்
சந்திரனைப்போற்சிலது தளதளவேயிலங்கும். (உகூச)

கனிகளொளியதுபோற் காசினியிற்கண்டதில்லை
இனியதொருநற்கனிபோ லெங்குமேகண்டதில்லை. (உகூரு)

பொற்பமுலக்களொவ்வாத பூங்காவிலுள்ளகனி
நற்பவளம்போற்காவில் நல்லகனிகளுண்டும். (௨௰௬)

விந்தைவிந்தையாக வெகுகனிகளுண்டதிலே
இந்தவகைக்கனிக ளென்னத்தொலையாதே. (௨௰௭)

மரங்கள் நூறாயிரத்தின் வகையுண்டுங்காவுதனில்
நெருங்கிவளர்ந்தடர்ந்து நிற்குமந்தத்தோப்புடனே. (௨௰௮)

பேராறுயோராறு பெருகிக்கரைபுரண்டு
சீராய்நீரோடுந்தச் செய்திதனைக்கேளீர். (௨௰௯)

யாற்றுதொருநாளும் வல்லோனருளாலே
முத்துப்பவள முழுநீலந்தான்விளையும் (௩௰)

குற்றமில்லாமாணிக்கமுங் கோமேதகமுடனே,
பற்றியொளிவீசும் பளிங்கிரத்னமாமணியும் (௩௰௧)

வயிரவயிடூரியங்கள் மரகதம்பச்சையுடன்
புருடராகம்மணியும் பொன்விளையுநன்னதிகாண் (௩௰௨)

சங்குவலம்புரிகள் சஞ்சலமுந்தானுமுண்டும்
மங்காமசங்கட்கெல்லாம் வழிந்தச்சலம்பாயும் (௩௰௩)

விருத்தம்.

ஆற்றுநீர்தன்னைப்பள்ளி யாவருங்குடிக்கிலப்போ
வேற்றுநோய்பிணியுந்தீரு மேனியுமொளியுண்டாகும்
தோற்றிடாவிழியுந்தோற்றுந் துன்பமுந்துயருந்தீரும்
சாற்றுமவ்வாற்றினீளந் தம்பிரானறிவன்றானே (௩௰௪)

தோப்பினின்மரங்கள்லட்சந் துய்யவனருளினாலே
மாப்பிலாவகைக்கொன்றல்லால் மரமிரண்டில்லையொன்றும்
சாப்புள்ளோர்கனிகள்தின்றால் முதுமைவிட்டகன்றுநல்ல
கோப்பில்லாத்திண்மையாவர் குறியிதுகண்டதையா (௩௰௫)

(வசனம்.) இவ்வண்ணந் தோப்பின்கனிகளுடைய பறக்கத்துமகிலுண்டான புதுமைகளையெல்லாம்கண்டு களிகூர்ந் தெனக்குப் பசித்தாபங்களுடைய வருத்தங்களைத்தீர்த்த வல்லபமுடைய ராஜாவுக்கெல்லாம் புகழ்ச்சியுமென்று முனஜாத்துச்செய்துகொண்டு பகற்காலந் தோப்பிலேபோவேனாகிற் றோப்புக்காரர் அடித்துப்போடுவார்களென் றிராத்திரிகாலங்களிற்போய்த் தோப்பிலேபுகுந் தெனக் கிச்சையானகனிகளெல்லா மெடுத்துப் பசிதீரத்தின்று தண்ணீருங்குடித்துக்கொண்டு விடியுமளவிலே யந்தவெளியிலேவந்து படுத்துக்கொள்வேனென்றவாறு

கண்ணிகள்

இப்படிகானந் திருக்குகின்றநாளையிலே
யொப்புவனமில்லாத வுடையோனருளாலே (௩௰௬)

ஒருநாள்விடிந்தந் துதயகாலந்தனிலே
கருமாமுகில்போலக் கண்டேன்சிலஜின்களை (௩௱௭)

வாரதுவும்போறதுவுங் கண்டேமனங்கலங்கித்
தேறுதலாற்பின்னுந் திகைத்திருக்கும்வேளைதனில் (௩௱௮)

அதில்வந்திரண்டுஜின்க ளாதமியோரென்றது
சதிவந்ததோவெனவே தடுமாறிநாவுலர்ந்து (௩௱௯)

ஏதுசெய்யுமோவெனவஞ் சேங்கிமிகவாடி
ஆதமகனுன் அகுமதலருமத்தென்பேர் (௩௱௰)

தமீமன்சாரியென்றேன் சலாம்சொல்லிப்போனதுவே
நிமிடத்திலாண்டவனை நினைவிற்புகழ்ந்துகொண்டேன் (௩௱௰௧)

அவர்களிருவரும்போ யரைநாழிகையினுள்ளே
நவமாயொருமுழக்கம் நாதகீதத்துடனே (௩௱௰௨

ஆகாயமீதினின்றங் காரபாரத்துடனே
வாகாகவேயெழுந்து மன்னும்வில்லுந்தானதிர (௩௱௰௩)

கோடையிடியுமின்னுங் கூடிமுழக்கினபோல்
வாடையுடன்கூறு வளிபோலெழுந்தனவே (௩௱௰௪)

[illegible]ன்களொளிவதுபோல் மிகுரத்னசிங்காசனத்தில்
[illegible]ன்களுக்கெல்லாமரசர் சென்றங்கிறங்கினரே (௩௱௰௫)

[illegible]சனிலிருந்திறங்கி ஜின்கள்கோன்பீருபத்தி
[illegible]ணிக்கச்சிங்காசனமேல் மதிபோலவீற்றிருந்தார் (௩௱௰௬)

தேவர்ஜின்கள்வெகு சேனைகடம்போலக்
காவருகேவந்திறங்கிக் கருகோலங்கண்டனரோ (௩௱௰௭)

அங்குள்ளஜின்கள்வந்தங் காசாரஞ்செய்துசொல்லும்
நங்குலத்திராஜாவே நல்லதமீமென்றொருவர் (௩௱௰௮)

இங்குண்டெனமொழிய வேந்தலங்கிருந்தார்
எங்கேயவனைவிட்டோ மிங்கேயழையுமென்றார் (௩௱௰௯)

என்றரசர்கூறியபின் னின்றஜின்களோடிவந்து
வென்றியுள்ளமானிடரே வேந்தழைக்கின்றாரெனவே (௩௨௰)

என்னையழைத்துக்கொண்டங் கேகந்தன்முன்னர்விட்டதுநான்
மன்னவனைக்கண்டவுடன் வாய்புதைத்தங்காசரித்து (௩௨௧)

சலாமுன்தலைக்குமென்றேன் சாற்றஜின்களுக்கரசர்
அலைக்குமுச்சலாமென்றே யருளினார்மன்னவர்தாம் (௩௨௨)

ஆதமியோர்தீனோர்கள் வைத்தாவதுபூமிதனில்
ஏதுவகையாய்வந்தீ ரென்னவேகேட்டவுடன் (௩௨௩)

மன்னவரேயென்றனக்கு மதீனநகர்காணும்
என்னையொருதேவின் கெடுத்துவந்துபோட்டதுகாண் (௧௨௪)

மக்கமதீனவாழும் வன்மையறபிகண்டீர்
மிக்கவேதாம்பர் வேந்தர்களில்யாரொருவன் (௧௨௫)

வேதவழிதவிரா வேதாம்பர்யார்களிலே
ஆதமகனுன் அருமதரினும்மத்தென்பேர் (௧௨௬)

தமீமன்சாரியென்றவுடன் சந்தோஷத்தோடுமன்னர்
அமீறுமுகம்மதரி னதிஜயங்கள்கேட்டீரோ (௧௨௭)

மஞ்சுகுடையுடைய முகம்மதைநீர்கண்டீரோ
கஞ்சமலர்ப்பாதமதைக் கண்ணாலேகண்டீரோ (௧௨௮)

கண்டதுண்டுநானவர்க்குக் கைகருமஞ்செய்கிறவன்
தொண்டுசெய்துகிட்டநின்று தோத்திரங்கள்செய்கிறவன் (௧௨௯)

என்றமொழிகேட்டவுட னின்பமுடனேதுரைப்பார்
நன்றியுள்ளமானிடவர் நபிகளுக்கெல்லாமரசை (௧௩௰)

முக்காலுங்கண்டீரோ முதலோனருள்நபியை
மக்காவில்வாழுமெங்கள் வள்ளல்முகம்மதுவை (௧௩௧)

முக்காலுங்கண்டேனான் மோசளல்லமன்னவரே
திக்கெல்லாஞ்செங்கோம் நீன்விளக்கவேண்டுமென்றே. (௧௩௨)

சோதியொளிவிற்பிறந்து தூதால்வந்தோர்சரித
மோதவினிக்கேளுமெங்க ளுண்மைநபிகாரணத்தை. (௧௩௩)

கத்தாவருளாலே காசினியோர்தான்போற்ற
முத்தாய்சிலநாளிருந்த முகம்மதுற்றசூலவர்காண் (௧௩௪)

அயினுவொருமரத்தி னநேகநெடுங்காலம்
மயிலாயிருந்து முனாஜாத்துச்செய்தவர்காண் (௧௩௫)

வேதவிளக்கொளிவாம் வேதாம்பரானவராய்
ஆதந்தனக்குமுன்னே யானமுகம்மதுகாண் (௧௩௬)

லட்சத்திருபத்து நாலாயிரநபிக்கு
பட்சமாய்முன்னுதித்த பயகாம்பரானவர்காண் (௧௩௭)

கானகத்தில்வேடன்வலை கண்ணியிலேயகப்பட்டழுந்து
மானுக்குப்பிணைநின்ற வள்ளல்முகம்மதுகாண் (௧௩௮)

மங்கைகதிஜாவின் மனக்குறையைத்தானீக்கு
திங்கள்முகத்துடையோர் திருவாய்மணத்திறந்து (௧௩௯)

செம்பொன்மலைவெள்ளிமலை சேரவழைப்பித்தோர்காண்
வம்பதிபுலீசுகன்னை மறைத்தஅலி மதுலர்காண் (௧௪௰)

பூதலத்தின்மூமீன்கள் போற்றுமுகம்மதுகாண்
காதலுறிகஸ்தூரி காலப்புரிமளிக்கும் (௧௪௧)

வஞ்சனைபுஜங்கிலே மல்லாலெடுத்தெறிந்தோர்
இஞ்சொல்லார்வேதத் தியல்புடையபோதகர்காண். (௩௪௨)

இச்சையுடன்கூனியவட் கீனமதைமாற்றிவித்தோர்
நச்சைசக்கறியாக வமுதுண்டநன்னபிகாண். (௩௪௩)

பீஞேடுரைகேட்டு வெள்ளெலும்பைப்பேசவைத்தோர்
கானகத்துடும்புடனே காரணங்கள்காட்டிவைத்தோர். (௩௪௪)

வாரணங்கள்சேனையொடு வந்தகபீபினுக்குப்
பூரணச்சந்திரனைப் பொம்பாயழைத்தோர்காண். (௩௪௫)

நாகந்தலையேழு நடுக்கஅரிந்தவர்காண்
சோருடனேதான்பேசித் துட்சனானைவென்றோர்காண். (௩௪௬)

மானிடருமொட்டகமு மறுகித்தவிக்கையிலே
கானினதியழைத்த காரணர்காணெங்கணபி. (௩௪௭)

நலமாயமுதுண்ணு நன்முலைப்பாலெச்சிலென
அலிமாவின்சூகை யமுதுண்டஆலநபி. (௩௪௮)

ஓர்கனியைநாற்பத்தி ராயிரம்பேரொக்கவுண்ணப்
பாரிலுள்ளோர்காணப் பகிர்ந்துகொடுத்தவர்காண். (௩௪௯)

பூமிதனிற்பாதம்படாப் பொற்பாரும்புண்ணியர்காண்
ஊமைக்குவேத மோதிவைத்தஉண்மைநபி. (௩௫௰)

இந்தவோநபிபுதுமை யின்னமெத்தவுண்டுகண்டீர்
இதுவேதகாரணங்கள் சாற்றத்தொலையாதே. (௩௫௧)

விருத்தம்.

இதெல்லாமுறைக்கஜின்னுக் கேந்தல்கேட்டுளத்தின்மீது
வேதனேதமீமன்சாரி மெய்யிதிங்குண்மைசொன்னார்
ஆதினின்றதான அருமறைக்காண்பதெப்போ
நீதிசேர்றசூலுல்லாதந் நெறிவழிபெறுவதெப்போ. (௩௫௨)

என்றுதான்சொல்லிமன்ன ரேங்கியேதிடுக்கமுற்று
வண்டுமொய்த்திருக்குமார்பர் முகம்மதுநபியைக்கண்ணா
லென்றுதான்காண்பதென்றங் கிருதயமெலிந்துவாடித்
தண்டுவார்சிங்கமென்னுந் தமீமனைவிளித்துச்சொல்வார். (௩௫௩)

(வசனம்.) வாருங்காண் தமீமன்சாரியாரே றசூலுல்லாவுடைய புதுமைகள் காரணங்கள் எல்லாங்கேட்டேனக்கெப்படியிருக்குதென்றால் மிடியர் திரவியங்கண்டெடுத்ததுபோலும் அந்தகன் திருட்டுவிளங்கப் பெற்றதுபோலுஞ் சந்தோஷமாயிற்றென் றென்னுடன் ஜின்னரசர் பின்னுஞ்சொல்லுவா ரென்றவாறு.

கண்ணிகள்.

நன்றுதமீமன்சாரியே நாயனருட்பெற்றவரே
இன்றுநான்பெற்றபல னேதெனவெடுத்துரைப்பேன். (௩௫௪)

நன்றாநன்றென்றுசொல்லி நயனங்களிகூர்ந்து
என்றுமனமகிழ்ந்தே யேந்தலங்கிதுசொல்வார். (௧௫௫)

சிங்காசனத்தைவிட்டு ஜின்களுக்கெல்லாமாசர்
சங்கையுடன்வந்தென்னைத் தழுவிமனமகிழ்ந்தே. (௧௫௬)

விண்ணோர்புகழும் வேதாம்பர்தம்மைக்கண்ட
கண்ணோவிதென்றுசொல்லிக் கண்களிணைமுத்திக்கொண்டார் (௧௫௭)

நாறுயிரந்தேர நோக்கியவர்முத்தமிட்டுப்
பேறுனபேறுபெற்றேன் பெரியோனருளாலெனவே. (௧௫௮)

விருத்தம்.

கூறுனிமாதர்போற்றுங் குருநபியிறசூல்நம்மை
மாறுதவான்மைமிக்க முகம்மதைமனுமிற்கண்பீர்
பேறுனபேறுங்கிட்டும் பெரியவன்கிருபையென்னும்
ஆறுனவருட்கடைக்கண் ணேக்குமுமுண்டாமம்மா. (௧௫௯)

(வசனம்.) ஜின்களுக்கரசே நீர் நபிநாயகத்தை மனுமிற்கண்டவர்களுடைய துவாப்பேறும் அல்லாவுடைய கிருபைப்பேறு முமக்குண்டாவதாகுமென்று துவாச்செய்தே னதுகேட்டுச் ஜின்களுக்கெல்லாம் ராஜாவாகிய பிருபத்தியார்சொன்னார் தமீமன்சாரியாரே நாலும்முடையகண்ணை ஆறுயிரந்தர முத்திக்கொண்டதேதுக்கெனில் கியாமநாளையிம் சகலத்திராளையு மம்மகுசறு வெளியிலொரு கூட்டமாகச்சேர்த்து அல்லாகுத்தஆலா ஐம்பதிறையிரம்வருடத்தை யொருநாளாக்கிச் சூரியனை வல்லயப்பிரமாணத்தி லிறுத்திக்கொண்டவரவர்பட்டோலையை யவரவர்கையிற்கொடுத்துக் கேள்விகணக்குக் கேட்கிறபோது றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் யாவருக்குமுதலில் நிற்பார்களே யந்தக்கூட்டத்தில் நீரு நபிநாயகத்தின் சமீபத்தில்நிற்பீ ரப்போதென்னை நீர்கண்டவுனே ஜின்னுக்கெல்லாம் ராஜாவாகிய பிருபத்தி என்னை யைந்தாம்பூமியிற்கண்டு நீர் யாரென்றுகேட்டா ரதம்குநான் ஆதமுடையமகன் முகம்மதுடைய உம்மத்தென்றேன் நீர் முகம்மதைக்கண்டீரோ வென்றுகேட்டார் கண்டேனென்றுசொன்னே னச்சணமே என்கண்ணை ஆறுயிரந்தர முத்திக்கொண்டாரென்றுசொல்வீர் அப்போது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமென்பேரிலே சந்தோஷமாகவிருப்பாரென் றும்முடைகண்ணை முத்திக்கொண்டே னென்றனவாறு.

கண்ணிகள்.

பின்னுமக்குஜின்னரசு பிருபத்தியிதுரைப்பார்
மன்னனருட்பெற்ற மானிடரேநல்லதமீம். (௧௬௰)

அன்சாரியாரேநீ ரண்டேரான்புறக்காளை
நெஞ்சாரவோத நினைவுண்டோசொல்லுமென்றார் (௧௬௧)

தறுகாமலப்போது தம்பிரான்றன்னருளால்
குறுஆன்முப்பதுமெனக்குக் குறைவற்றபாடமென்றேன். (௧௬௨)

என்றமொழிகேட்டவுட னிதுரைப்பார்ஜின்னரசர்
நன்றுள்ளீர் தமீமே நாயனுதவியினால். (௧௬௩)

நீரிங்ஙன்வந்ததுதா னித்தநான்செய்பாக்கியங்காண்
சீர்கொண்டவேதமெல்லாந் தெரிந்தெடுத்திங்கென்றனக்கு. (௱௬௪)

ஏழுமக்களாண்பிள்ளைக ளிங்ஙன் அல்லா தந்ததுண்டும்
வாழுமென்றன்மக்களுக்கு முகம்மதின்றப்ஷார்க்கமதை. (௱௬௫)

ஓதிக்கொடும் அறபி லுடையோன்றனக்காக
ஆதந்தொடுத்திய் கருமதின்றன்காலமுதல். (௱௬௬)

வேதவழியு மெய்ஞ்ஞானமுள்ளதுவும்
நீதிவழியு நெறிவழியுமோதிக்கொடும். (௱௬௭)

இந்தவகையெல்லாமென் னின்பமுள்ளமக்களுக்குச்
சிந்தைதகளிகூரத் தீனைப்படித்துக்கொடும். (௱௬௮)

அந்தமுடன்சொன்னதின்பின் அன்னார்மொழிகேட்டே
யுந்தமதுமக்களையிங் குடனேயழையுமென்றேன். (௱௬௯)

எந்தன்மனையிங்கிலேக்கா னிரண்டாவதுபூமியிலே
அந்தமுள்ளவாட்கூட்டி யனுப்புகிறேன்சென்றிடுநீர். (௱௭௰)

ஏழுநாள்மட்டுக்கு மெனக்கிங்கேவேலையுண்டும்
ஏழுநாட்சென்றதற்பி னெழுந்தங்ஙனேவருவேன். (௱௭௧)

என்றுரைக்கநற்றமீம னிணங்கினரோயதம்பின்
அன்றரிபோல்ஜின்கள்தனை யழைத்துமன்னரீதுரைப்பார். (௱௭௨)

ஆதமிக்கிநல்ல அசனமுடைக்காயுடனே
போதக்கொடுத்துப்புது மாளிகையொன்றீயுமென. (௱௭௩)

ஓதச்சொலும்பிள்ளைகளை யுண்மைபுறுக்கான்றனையே
ஏதுசொல்லிவிட்டேனோவென் றெண்ணிருக்கவேண்டாங்காண். ()

தன்பரியிலேற்றியந்தத் தலைவரிருவரையும்
முன்னொருவர்பின்னொருவர் முறையுடனேதானேறி. (௱௭௫)

ஈவென்றுதானேறி யென்னிருகண்மூடுமென்றார்
மாவென்னும்வாம்பரிதான் வானோக்கிச்சென்றதுவே. (௱௭௬)

பதிறிலேநின்று பயணம்புறப்பட்டதுதான்
அசறிரண்டாம்பூமி யதனிலேசென்றனவே. (௱௭௭)

ஆசாரவ[illegible]யல்முன்னே யவர்களெனைமிறக்கி
வாசார[illegible]னவரோ வந்ததுவெத்தூரமென்றார். (௱௭௮)

[illegible]மிப்[illegible]வந்த[illegible]தா னு[illegible]தங்காணுமென்றேன்
மூமினேநீர்சொன்னது மோசம்வெகுசாய்விட்டதே. (௱௭௯)

அஞ்சாவதூமிக்குமிங் காகும்ரண்டாம்பூவினுக்கும்
வஞ்சமறும்ரண்டாயிர வருடவழித்தூரமுண்டே. (௱௮௰)

என்றுரைத்தங்கா தமியே பின்னவேவாருமென்றார்
ஒன்றுபடஆசாரத் துள்ளேயழைத்துச்சென்றார். (௱௮௧)

ஆசாரன்காத்திருக்கு மச்சின்களீ துசொல்லும்
வாசாரமாகவிங்கே வாருமிருமென்றனரே. (௩௮௨)

வாருமிருமானிடரே வந்தவகையேதெனவே
ஊரெந்தவூரிங் குமையொருக்காம்கண்டதில்லை. (௩௮௩)

அப்போதுகூட்டிவந்த வந்தஜின்களீ துசொல்லும்
எப்போதிவர்க்குமக்க மதீனமெனுமேருர்காண். (௩௮௪)

ஆதமகன்காணு மகுமதவரும்மத்துக்காண்
பூதலக்கிலேந்தாம் பூமிதனிற்றேவெடுத்து. (௩௮௫)

கொல்லுவந்து பொட்டதுகாண் கோவேந்தர்கண்டிவனைக்
கண்டிவர்தஞ்செய்தியெல்லாங் காவலவர்தான்கேட்டு. (௩௮௬)

பண்டுசெய்தபாக்கியமோ பலகாம்பர்தோழரிவர்
என்றிவனைப்போற்றிசெய்தே எம்முடனே தான்கூட்டி. (௩௮௭)

பன்டவர்தானேறும் பரிமேலேதானேற்றி
இன்றிங்கனுப்பினர்காண் யான்கூட்டிவந்தேனே. (௩௮௮)

ஜின்னரசர்பீருபத்தி சொன்னவுரைகேட்டருளிர்
மூன்னலிந்தமானிடர்க்கு மாளிகையொன்றீயச்சொன்னார். (௩௮௯)

போஜனங்கள் தின்கனிகள் போதக்கொடுக்கச்சொன்னார்
வாசமலர்போலிவனை வாகுசெய்துகொள்ளச்சொன்னார். (௩௯௦)

ஏழுமக்களாண்பிள்ளையை யிவரிடத்திற்கூட்டிவைத்தே
தாள்பணிந்துசிராகச் சங்கையுடனேதச்சொன்னார். (௩௯௧)

வேதமொருநான்கு மெய்ஞ்ஞானமுள்ளதெல்லாம்
நீதியுடனேதிவைக்க நிகழ்த்தினார்ஜின்னரசர். (௩௯௨)

என்றந்தஜின்கள்சொல்ல விருந்தஜின்களீ துசொல்லும்
மன்டலிகர்பீருபத்தி மக்களிவராகுமென்றார். (௩௯௩)

ஒசுவாம்அவூதெழுதி யோங்கும்பிசுமில்லெழுதி
பசுமைக்கலிமாவும் பாத்திகாவும்மெழுதி. (௩௯௪)

சுமாஞோராறு மிசுலாமோரைந்துடனே
கோமான்றன்மக்களுக்குக் குருஉபதேசமுள்ளதெல்லாம். (௩௯௫)

பலகையெழுதிப் படித்துக்கொடுத்தேனே
நலமாகவோதிப் படித்தார்நபிமார்க்கம். (௩௯௬)

ஏழுநாட்சென்றதற்பி னிரண்டாம்பூமிதன்னில்
வாளரசர்பீருபத்தி மன்னர்பெருஞ்சேனையுடன். (௩௯௭)

வந்தார்தம்மாளிகையின் மன்னர்பெருமான்தாம்
எந்தோழன்தமீமன்சாரி யெங்கேயிருக்குமென்றார். (௩௯௮)

எங்கேயிருக்குமென்ற வேந்தன்மொழிகேட்டுச்
ஜின்களெழுந்து சென்றழைத்துவிட்டதுவே. (௩௯௯)

மன்னரசர்பீருபத்தி மக்கவொருளழ்லவையும்
தன்னருகேவாருமென்று சாற்றுவார்ஜின்னரசர். (சா)

மன்னுநபிபுறுக்கான் மார்க்கமறைவேதம்
இந்நாளிற்கற்றதெல்லா மென்முன்னமோதுமென்றார். (சாக)

சொன்னமொழிகேட்டக்கணே சோபனமென்றேயெழுந்தே
மன்னர்மொழிதப்பாமல் மைந்தரெழுவருந்தான். (சாஉ)

முன்னேபிசுமில்தனை முறைமையுடனேயோதி
பின்னேநபிகலிமாப் பிசகாமற்றானோதி. (சாங)

ஈமானோராறு மிசுலாமோளைந்துடனே
கோமானபிமார்க்கம் குருனுயத்தோதினரே. (சாச)

மன்னன்மனங்குளிர்ந்தே மைந்தர்தனக்கேதுரைப்பார்
என்னிலதிகமதா யிவரைநீரெண்ணிக்கொள்ளும். (சாரு)

அன்பாயவர்வார்த்தைக் காசாரஞ்செய்துகொள்ளும்
பொன்போலங்காசரித்துப் புறுக்கானையோதுமென்றார். (சாசு)

எந்தோழாதம்மீமே எந்தன்மைந்தரெல்லாம்
உந்தமைந்தரென்ன வோதிவையுநன்மையுண்டாம். (சா[illegible])

என்றுரைத்துமைந்தரைத்தா னென்னுடனேகூட்டிவிட்டு
மன்றல்கொண்டதார்மார்பர் மாளிகையிலேகினரே. (சாஅ)

என்றமன்னன்மாளிகையி லெழுவரையுந்தான்கூட்டி
ஜின்னரசர்மைந்தர்களைத் தீன்வழியிலேபயிற்ற. (சாகூ)

மறுவிலாவேதமெல்லா மைந்தர்படித்தனரே
குறுஆனுயத்துள்ளதெல்லாம் குறையிலாதோதினரே. (சாய)

இப்படியேநானங் கிருக்கின்றநாளையிலே
ஒப்பாருமில்லாத வுண்மையுள்ளோன்றன்னருளால். (சாயக)

ஒருநாள்நடுச்சாம முசாரந்துறங்கயிலே
திருவானதேவியுடன் சேர்மூன்றுநால்வருமாய். (சாயஉ)

வன்னமயிலனைய மாறுருமைந்தருமாய்
என்னருகேவந்திருந்தன் கின்பமாய்முன்போலே. (சாயங)

தன்[illegible]மறையினம்போற் றையலேயுமைந்தரையும்
கன்[illegible]ன்கனவுதனிற் கல்புகளிகூர்ந்தேனே. (சாயச)

கல்பு[illegible]ந்துடனே [illegible]தலியுமைந்தரையும்
செல்வ[illegible]குறு[illegible]துவதுந் தேவியருமோவியம்போல். (சாயரு)

ஓவியம்போல்மாறுடை னான்றமூன்றுமைந்தரையும்
காவிலிளமானதுபோற் கண்டேனிடுக்குற்றேன். (சாயசு)

ஆவலுடன்றேவியையு மன்பானமைந்தரையும்
தாவிப்பிடித்தேன்பதறித் தானேமுழித்துவிட்டேன். (சாயஎ)

முழித்துவிட்டபோதெனது முன்னேயிருந்தவரை
யொளித்துவிட்டவாறதுபோ லொருவிட்முங்காணுமல். (௪௱௰௮)

கல்லடிலேஞேடிக் கலங்கினேன்மெய்மறந்தேன்
வண்டுறையுங்கூந்தன்மின்னர் மைந்தரையுங்காணுமல். (௪௱௰௯)

சரீரம்பதைபதைத்துத் தடுமாறிநாவுலர்ந்து
பிதிர்கலங்கியென்மனது பேதலித்துத்தானழுதேன். (௪௱௨௰)

விருத்தம்.

வருத்தமாயழுதசத்த மன்னவர்கேட்டுஜல்தி
யொருத்தனையழைத்துப்போய்நீ யுசாவியேதமீமன்சாரி
கருத்தினிற்குறைகளேது கவலுகவென்னக்கேட்டுப்
பொருத்திநீவருவாயென்ன வுரைத்தனர்ஜின்கள்மன்னர். (௪௨௧)

மன்னவர்தூதன்வந்து முகம்மதுஇறசூலுல்லா
பொன்னகர்மடவார்போற்றும் புரவலவென்னப்போற்றி
என்னகாரணந்தானீரின் றிரவினிலழுதவாறு
தன்னையேயுரையீரென்றூர் தானதற்கெதிர்ந்துசொன்னேன். (௪௨௨)

(வசனம்.) ஜின்னுக்கெல்லாம் ராஜாவாகிய பீருபத்தியா ரனுப்பின தூதன்வந்து தமீமன்சாரியாரே நீரிந்த அகோரராத்திரிகாலத்திலே அழுதசத்தங்கேட் டெங்கள் ராஜாவாகிய பீருபத்தியார் என்னையழைத்துத் தமீமன்சாரியாருக்கு ஏது குறைகளுண்டோ வென்று விசாரித்துவாவென் றனுப்பினைத்தார் - உம்மை யாராகிலுந்தா னடித்தார்களோ வைதார்களோ மச்சுமாளிகை மதிலிடிந்துவிழுந்ததோ அல்லது ராஜாவாற்றுனோர் குறைகளுண்டாச்சோவென்று கேட்டபோது நானழவில்லையென்றே னிச்செய்தியை யத்தூதன் ஜின்னரசிடத்திற்போயழவில்லையென்கிறுரென்றுன் அப்போது ஜின்னரசர்சொன்னு ரவரழுதசத்த மென்காதிலேகேட்டேன் அவரழுகதில்லையென்றதேதென்று ஜின்னுக்கெல்லாமிராஜாவாகிய பீருபத்தியார்தாமெழுந்தருளிபாய் நானிருக்கிறமாளிகைக்குவந் தென்னுயிர்த்தோழராகிய தமீமன்சாரியாரோ நீரிவ்விராத்திரி யழுதகாரணமே துன்மையாகச்சொல்லுமென்று கேட்டாரென்றவாறு:

கண்ணிகள்.

மன்னவரேசின்னஹீசே மகுடமுடிவேந்தே
என்னைநீரிந்நாள்வரை எழிலாகவைத்தவது. (௪௨௩)

தன்னையென்சொல்லுவேன் தனியோனுக்கிசைந்து
பொன்னகர்மாதருடன் பொருந்திநீர்வாழ்ந்திருப்பீர். (௪௨௪)

மருவுமலர்போலும் வைத்திருந்தீரிந்நாள்வரை
ஒருவர்குறைசெய்ததில்லை புன்மைசொல்லவகேளுமையா. (௪௨௫)

எந்தனுடதேவியரும் பெண்மக்களுமவர்களும்
வந்திருந்தென்முன்னே மறைந்தோடக்கண்டேனே. (௪௨௬)

கண்டேன்கனவுதனிற் காரிகையுமைந்தனையும்
தண்டியெழுந்திருந்து தாவிப்பிடிக்கையிலே. (௪௨௭)

தாவிப்பிடித்தேன்பதறித் தானேவிழித்துவிட்டேன்
ஆவ்தமொறியவர்கள்தனைக்காணாமல். (௪௨௮)

முழித்துவிட்டபோதெனக்கு முன்னேயிருந்தவரை
யொளித்துவருபவரை யோரிடத்துங்காணமல். (௪௨௯)

கனவிற்கண்டபொன்னவர்க்குக் கையின்வராதெனவே
மனதிற்றரியாமல் வாய்விட்டழுதேனென்றேன். (௪௩௰)

என்றவிசளமெல்லாம் இன்புற்றுக்கேட்டரசர்
நன்றுமக்குத்தம்மீமே நாரியையுமைந்தனையும். (௪௩௧)

காணவேண்டுமோதுமது கருத்திலினைவுளாயீர்
காணநான்வேண்டுமையா காவலரேசின்னரசே. (௪௩௨)

விருத்தம்.

காணவேவேண்டுமென்ற கருத்தினையறிந்துவேந்தர்
தாணுவுதமீமேநீர்தாஞ் சலிக்கவேவேண்டாங்கண்டீர்
பேணியென்கரத்தைப்பற்றிப் பிடித்திங்கேவாருமென்ன
நாணடுசிலையிற்றொட்ட வாளியேபோல்நடந்ததன்றே. (௪௩௩)

நடந்தனர்கிபுலாநோக்கி நாடியேபோகுங்காலை
இடந்தருவனத்தினுள்ளே யேகியேபோனதங்கே
படர்ந்தொருமனைதானுந்தோற்றப் பாரமாமனையைநோக்கி
விடந்தனின்வாசல்முன்னே வந்தனர்வேந்தர்கோமான். (௪௩௪)

(வசனம்.) அந்தமனையின் வாசற்கதவுகள் சாம்பிராணியினாலே வீகம்பூட்டி யிருந்தன அந்தக்கதவைக் கையினாற்றள்ளினர் திறவாமையாற் கோபமாகக் காலினால்மிதித்தா ருடனே கதவுதிறந்த தப்போதந்த மாளிகைக்குள்ளே யென்கையைப் பிடித்துக்கொண்டு போனாரென்ற வாறு.

கண்ணிகள்.

மாளிகைக்குள்ளேகியபின் மற்றங்கறையறையாய்ச்
சூழவறைவீடாகச் சுற்றிலுமேசிற்றறையாய். (௪௩௫)

சிற்றறைகள்தோறும்வெகு சேனைகறங்கள்தன்னைப்
பற்றிபறியாய்ப்பிணித்துப் பாரநெடுந்தூண்தனிலே. (௪௩௬)

கைத்தலைகளைத்தத்ததுவுங் காலில்விலங்கிட்டதுவும்
மெய்த்தலைகளிட்டதுவு மிடைவிலரிகண்டங்களும். (௪௩௭)

தேவுகளைத்தான்கொணர்ந்து செவ்வேகிடத்தாட்டி
நாவுகளைத்தானிழுத்து நடுவேமுளையறைந்து. (௪௩௮)

பூதக்கணக்கடன்னைப் பிடித்துச்சிறையிலிட்டுக்
காதுகளைத்தானறுத்துக் கைச்சங்கிலிகளுடன். (௪௩௯)

கண்டுபணிந்துநின்ற கட்டாததுட்டர்களைக்
கொண்டுவந்திலாடமது கோட்டிக்கொடுபூட்டி. (௪௪௰)

குட்டைகளிற்கைநீட்டிக் குவிந்தங்ஙனிற்பதுவும்
கட்டைகளிற்பூட்டிக் கான்மடக்காதிருப்பதுவும். (௪௪௧)

மலத்திக்கிடத்தியந்த மகாபூதத்தேவுகளைப்
பெலத்தகரங்காலதனிற் பெரியமுளையறைந்து. (௪௪௨)

இப்படியேதேவுகளை எல்லாஞ்சிறைச்சாலையிலே
தப்பறவேயாக்கினைகள் தான்செய்தவாறுகண்டு. (௪௪௩)

கண்டுவணங்கிப்பூத கணங்கள்தானிதுசொல்லும்
இன்றரசனிங்குவந்தார் எதுசெய்வரோவறியோம். (௪௪௪)

ஆக்கினைகள்செய்வதற்கோ அடர்ந்தேற்றஞ்செய்வதற்கோ
பாக்கியங்களெப்படியோ பரமன்விதிக்கென்செய்வோம். (௪௪௫)

என்றந்தத்தேவதெல்லாம் இடைந்துமிகவாடக்
கண்டந்தப்பீருபத்தி கதிக்கமேற்கேநடந்தார். (௪௪௬)

மேற்கொடுக்கந்தன்னில் வீரமுள்ளதேவொன்றுதான்
பா[illegible]ங்களெய்தும் பஞ்சபாதகத்தேவு. (௪௪௭)

கருமலைபோலுத்திரத்திற் காலிற்றளைத்துடனே
ஒருமலையைத்தான்பிடுங்கி யொருமலையிற்சேர்த்ததுபோல். (௪௪௮)

மதவாரணக்கடன்னை வாரிக்கொண்டுசேர்த்ததுபோ
லிதமாயோரார்யிரஞ் சங்கிலியார்சேர்த்துநிற்கும் (௪௪௯)

சேர்த்துநிற்குந்தேவதுதான் சென்றரசைக்கண்டவுடன்
வேர்த்துநடுங்கி மெய்மறந்துநாவுலர்ந்தே. (௪௫௰)

ஆனிகல[illegible]வாரணம்போ லாவிதடுமாறி
மீளவிங்குவந்ததுதான் வினையேதெனவறியேன். (௪௫௧)

ஆக்கினைகள்செய்வதற்கோ அரசரின்றுவந்ததுகாண்
தேக்கிலையினீர்போலே திகைப்பதுகண்டேயரசர். (௪௫௨)

மாவேந்தர்தாம்பணியு மன்னர்கோனீதுரைப்பார்
தேவேநீயஞ்சாதே செப்பக்கேளென்வார்த்தை. (௪௫௩)

என்வார்த்தைகேட்பாயே லீதுனக்குவாராது
மன்வார்த்தைகேட்டவுடன் வாய்புதைத்துத்தேவுசொல்[illegible] (௪௫௪)

சாகிபுசொற்கேளாமற் றாழ்வுபட்டே [illegible]க்கும்
பாவியென்னன்பொல்லாப் பய[illegible]விதிவிடுமோ (௪௫௫)

முன்னைநாள்சாகிபவர் முத்திரைக்குள்ளேநடந்தால்
இந்நாள்வரைக்குமிந்த விடைஞ்சற்படக்காரியமேன். (௪௫௬)

மன்னவரோயும்முடைய வார்த்தையினுமேற்கடக்கேன்
சொன்னபுத்திக்குள்ளடப்பேன் தொண்டுசெய்வேன்மன்னவரே.

நற்றவங்கள்செய்யாமல் நானடியேனிவ்வனையும்
புத்தியறியாமற்செய்த பிழைபொறுப்பீர்மன்னவரே. (௪௫௮)

பெற்றபிள்ளைசெய்தகுற்றம் பிதாக்கள்பொறுப்பதல்லால்
மற்றவரார்பொறுப்பார் மன்னவரேநீர்பொறுப்பீர் (௪௫௯)

விருத்தம்.

குற்றங்களதிக்காகக் குருநபியிறசூல்க்காக
மற்றுள்ளநல்லோர்க்காக மனமதுபொறுத்தேன்கண்டாய்
உத்தமகுணத்தமீமை யுடையவன்கிருபைப்பேறு
பெற்றவர்தமைமக்காவிற் பேணிநீகொடுபோவென்றார். (௪௬௰)

பேணியேமக்கநாட்டிற் பிசகிலாமூன்றுநாளின்
ஊணியேகொடுபோய்விட்டு வாவெனவுரைத்தார்தேவு
தானுமேவதமியேனுக்குத் தத்துவமில்லாளேழும்
காணவேகொடுபோய்விட்டு வருகிறேன் கருணைமன்னே. (௪௬௧)

(வசனம்.) பீருபத்தியார்தேவிடத்திலேயென்னை மூன்றுநாளையிற்கொண்டுபோய் மக்கத்தில் விட்டுவாவென்றுசொன்னதும் கேழுநாட்செல்லுமென்று தேவுசொன்னதைக்கேட்டென்வார்த்தையைத் த[illegible]பேசினதேதென்று பீருபத்தியார் கண்களிரண்டு மக்கினிபறக்கச்சீறிப்பார்த்தமாத்திரத்தே தேவுபயப்பட்டு நடுநடுங்கி மெய்சோர்ந்து நாவுலர்ந்துசொல்லும் நல்ல[illegible]சாமிபு மூன்றுநாளையிலேகொண்டுபோய் விட்டுவருகிறேனென்றது பிறகு விலங்குசங்கிலியெல்லாம்விட்டு வெளியிலேகொண்டுவந் த[illegible]த் தேவின்கழுத்திலே பென்னையேற்றியெனக்குப் பீருபத்தியார் சொன்னபுத்தியானது இதுமெத்த வுசூகேவித் தேவுவாக்கிலொன்று மனதிலொன்று நினைத்துச் சொல்லுமாதலால் நீ இந்த துவாவையோதுமென்றெனக்குச்சொல்லித்தந்தார் அத்துவாவாவது அல்லாகும்ம யாதல்மூஸ்தகீதி அவூதிறு வயாமாலிக்கு எவ்மித்தீன் இய்யாக்க நவுபுது ஓமிய்யாக்க நஸ்தகீன் பிறகுமத்திக்க யாஅக மற்றுகிமீன் இந்த துவாவையோதாமல் மறந்துவிட்டாயாகில் உம்மை மூசக்கத்தப்படுத்தி மலைகள் கெவிகள் சமுத்திரங்களிலேகொண்டுபோயடித் தலக்கழிவுபண்ணிப்போடும்படிவராமல் அல்லாவுதவியினாலிந்தத்துவாவை நன்றாய்நினைத்துக்கொண்டு போமென்று புத்திசொல்லித் தேவின்கழுத்திலேற்றினார் அப்போது நானவருக்கு சலாம்சொன்னேன் [illegible]சலாத்திற்குப் பிரத்திசொல்லிப் பிறகெனக்கவர் சலாஞ்சொன்னார் [illegible]னவர்சலாத்திற்குப் [illegible]த்திசொல்லி யவருக்கு துவாச்செய்தேன் அதன்பிறகு [illegible]லைப்பார்த்திவென் றேவிவிட்டாரென்றவாறு.

கண்ணிகள்.

தேவுசனிபீவென்று ஜின்னாசரோவினரே
தாவிறிருடுவோனேக்கித் தான்கொண்டுபோனதுவே. (௪௬௨)

மன்ன[illegible]ரினின்றுதேவு மலையெழும்புமாறதுபோல்
விண்ண[illegible]லேதாழ்ந்துசென்று மேனேக்கிப்போனதுவே. (௪௬௩)

மேனேக்கிப்போகயிலே மெய்யிலுணர்வழிந்து
தானேதடுமாறித் தத்தழித்துநாவுலர்ந்தே. (௪௬௪)

ஆலோசனையா யறிவுமிகக்குழறி
மேலோகபூமிரண்டும் விட்டிப்பாற்றான்வரவே. (௪௬௫)

தவ்விரண்டுபூமியையுந் தான்விட்டுமேலாகி
இவ்வுலகிலாதவன்று னெழும்புந்தலத்தனிலே. (௪௬௬)

ரண்டுபகல்ரண்டிரவி லிருபுவியையுங்கடக்க
வென்றியுடன்கோபுக்கா மேருகிரிதோன்றியதே. (௪௬௭)

தேவுகட்செல்லாமரசன் சிங்கம்போலேபாய்ந்து
கோபுக்காமேலெழும்பிக் கொண்டேவருகையிலே. (௪௬௮)

எம்மின்மனமகிழ்ந்தன் கெண்ணினேனேழைமதி
நம்மனூர்மக்கமினி ரண்டுரை நாளுண்டுவழி. (௪௬௯)

இன்றுநாளைக்குள்ளாக எம்மூரிற்செல்வமென
அன்றரசர்சொன்னதுவா வதனைமறந்துவிட்டேன். (௪௭௦)

துவாவைமறந்தசளும் ரோசிப்பெருந்தேவு
[illegible]டன்மலேதா னடவிகெவியத்தனையும். (௪௭௧)

சென்றடித்துத்தானுழக்கித் தியங்கப்படுத்தியதே
கொன்றுவிடப்போகுதென்றே குதாயைநினைந்தழுதேன். (௪௭௨)

விருத்தம்.

மனத்தினிலாதியென்னும் வைத்தியானழுமங்[illegible]ரம்
இனத்திலுக்குவமையில்லா னெழிலுறக்கிருபையாலே
நினைத்துமுன்வாராதந்த கேருறுந்துவாவென்வாக்கிற்
கனத்தொடுந்தோன்றிற்றப்போ கழறினன்தேவுகேட்டே. (௪௭௩)

(வசனம்.) மறந்ததுவாவை நானேகத்தேவுகேட்டஞ்சி வானமூட்டக்கொண்டுபோய்போது முன் வானங்காத்திருக்கிற மலக்குகள்சொல்வார் மூதேவி நீ தமீமன்சாரியாரை எங்கே கொண்டுவாராயென்று நரகத்துக்கொள்ளிக்கட்டையைப்பிடுங்கி ஒலாபத்து சம்பன் பயசருத்து சற்றனென்கிற இந்த ஆயுத்[illegible]தயோதி எறிந்தார்கள் அப்போது தேவுக்கு ஈரலிலேபட்டுக் கோபுக்காமலையாமிலே பொழுது கிழம்புகிறதலத்திலேவிழுந்த தப்போது [illegible]ான்பதறிக் கையைவிட்டு[illegible]ட்டேன் தேவுவோடிற் றென்றவாறு.

[illegible].

தேவோடிப்போ[illegible]த்தின் [illegible]வாகி
நாவோரிணையகன்று நஞ்சதின்றயினதுபோல். (௪௭௪)

கண்ணிருண்டுநாவுலர்ந்து காதடைத்துமூச்சன்றியே
எண்ணமுமசாரன்றியே யிப்படிநான்மூன்றுதினம். (௪௭௫)

மூன்றுதினஞ்சென்றதற்பின் முயற்சியினைவவந்து
ஆண்டவனின்தம்பனைக் கனுவேதுந்தப்பாது. (௪௭௬)

மூன்றுளின்லவ்கின் முடிந்தபடியல்லாது
இந்நாள்விசாரமிட்டால் எழுத்தின்விதிவிடுமோ. (௪௱௭)

எங்கேயினிப்போவேன் மெய்விடத்திற்செல்வமென
அங்குமிங்குமெட்டாத அந்தரத்திலானேனே. (௪௱௮)

அந்தரத்திலானேனென் றுகுலைப்பட்டாவதென்ன
எந்தவகையாது மேகனுதவியுண்டாம். (௪௱௯)

சிந்தாத்தினையாகச் சேர்க்கவவனுக்கரிதோ
எந்தனிறைவனவனே எனக்குதவியாருமில்லை. (௪௱௰)

ஒன்றுமறியேனு னுன்னையன்றியாருமில்லை
என்றுபுகழ்ந்தே எழுந்தங்குதானடந்தேன். (௪௱௰௧)

கபுலாக்கின்காலவனே கத்தனேகாப்பாயென
இபுலாவைத்தானேக்கி நடந்தேன்கிலேசமுற்றே. (௪௱௰௨)

விருத்தம்.

கிலேசமுற்றெழுந்தவெய்யோன் கிளம்புமத்தலத்தைவிட்டுத்
தராதலமடவிகானந் தாமரைத்தடாகமற்றும்
குலாவியேமயில்களாடுங் குளிர்ந்தகாவகளுநீங்கி
விலாசமாய்வெளிகடோற்ற வெழிலுறுமிரவிற்றனே. (௪௱௰௩)

விளைவினிலடவிநீங்கி வெளியில்யானேகுப்போது
வருகவும்போகவுந்தா னின் மனிதரக்கொருவர்காணேன்
ஒருவனைமனத்துட்கொண்டிங் குதவிநீசெய்வையென்றேன்
மருவியபட்சியொன்றவ் வழியினின்றுலவிற்றன்றே. (௪௱௰௪)

(வசனம்) அவ்வழியின்மேலே நிற்கக்கண்ட பட்சிநம்மை என்செய்யுமோவென்று விசாரமாகநின்றேனப்போ தந்தப்பட்சி என்னைப்பார்த்து வாருந் தமீமன்சாரியாரே சலாமுன் அலைக்குமென்றதப்போ தந்தப்பட்சியின் சலாத்திற்குப் பிரத்திசொல்லிப் பின்னர் நான்கேட்டேன் நீயொரு பட்சியாயிருந் தென்பேருரைத்து சலாஞ்சொன்னதின் வகையாதென்னை நீ முன்னேயறிவையோவென்று கேட்டேனப்போ பட்சி நானும்மையறிந்தவை சொல்லுகிறேன்கேளுந் தமீமன்சாரியாரே இசுகாக்குநபிவளர்த்த பட்சி நான் என்னைவளர்த்த இசுகாக் கலைகில்லாம் சொன்ன வொசியத்தாவது பட்சியே நீ யிவ்விடத்திலிருந்து அல்லாவுடைய வரிசைபெற்ற முகம்மது நபியுடையயார்களிலே யொருவர் இன்னகாலம் இன்னவருட மின்னமாத மின்னகிழமை இவ்வழியே வருவார் அவர்பெயர் தமீமன்சாரியென றழைக்கப்படு மவருக் கென்னுடைய சலாஞ்சொல்லென்றார் அவருடையசலா முமக்குண்டாவதாக வவர்சொன்னபடிநான் கெடுவு மின்றைவரையுஞ் சரியாயிற்றேயென்று நானெழுவானே நோக்கிப்பார்த்தே னும்மைக்கண்டு பேரும் சலாமுஞ்சொன்னேனென்றந் தந்தப்பட்சியுடைய அழகோ சொன்டுசிவந்தமாணிக்கம் கண்ணிரண்டும் வயிடூரியம் கால்களிரண்டு மாகதம் நகங்களெல்லாம் வயிரம் சிறகிரண்டும் ஆயிரம்வர்ணமாக விருக்கின்றன பின்

பந்தப்பட்சி யென்னைப்பார்த் துமக்குப் பசியாக இருக்கின்றதோவெ ன்று கேட்ட தப்போதெனக்குப் பசிதானென்றேனெனக்கு வலதுபா ரிசமாக வொருகனியிருக்கு ததையெடுத்துத் தின்னும் நாற்பதுநாள்வ ரையுமக்குப் பசியாதென்ற ததுபோலப் போய்ப்பார்த் தக்கனியைக் கண்டே னென்றவாறு.

கண்ணிகள்.

கண்டகனியெடுத்துக் கல்புகளிகூர்ந்து
தின்றேன் பசிதீர்ந்ததந்பின் சென்றந்தப்பட்சியுடன். (௪௮௫)

பட்சியேயென்றனக்குப் பசியாற்றிவிட்டாயே
இச்சையுடன்சொர்க்கபதி யீடேற்றமுண்டாவாய். (௪௮௬)

நல்லபதவிகளும் நாயன்கிருபையதும்
அல்லலனுகாத வகுமதுற்றஞ்சலருளும். (௪௮௭)

சொர்க்கதலமதுவுந் தூயோனளிக்கிடுவான்
மிக்கானபட்சிக்கெல்லாம் வேந்தேயெனப்போற்றி. (௪௮௮)

மக்கநகர்க்கேக வழியெனக்குக்காட்டுகவென்
றக்கணமேயான்கேட்டே னழகாருமந்தப்பட்சி. (௪௮௯)

சொல்லிக்கரில்லாத சொண்டுதிறந்தீதுசொல்லும்
சல்லாபமார்கிபுலாத் தனைநோக்கிச்செல்லும்பின்னும். (௪௯௰)

பொழுதெழுப்பினுலெழுந்து போய்ப்புகுதுமட்டுஞ்செல்லும்
பொழுதுவிழுந்திடத்திற் போகாமலேதருரும் (௪௯௧)

இப்படிநீரேகுமென வேகனருட்பெற்றபட்சி
சொற்படியேமூன்றுதினந் துணிந்தேநடந்ததற்பின். (௪௯௨)

அப்பாலங்கோர்வழியி லாருமுறுவில்லாமற்
செப்பமாய்நின்று திரண்டுருண்டுதானிருக்க. (௪௯௩)

உன்னுடைப்பட்சிசாலமதை யொளிவாகக்கண்டேனே
கண்டுமெருண்டொளிவைக் காரணந்தானீதெனவே. (௪௯௪)

சென்றேனதினருகே செல்லும்போதிதுசொல்லும்
இன்றுமக்குத்தம்பீமே என்றன்சலாமென்றதுவே. (௪௯௫)

விருத்தம்.

வாயில்லைக்கண்காதில்லை வடிவுநிறமுறுப்புமில்லை
நீயென்னையறிந்தவாற்றை நிகழ்த்திடென்றதனைக்கேட்கத்
தாயில்லான்தமரொன்றில்லான் றரிப்பிடமவிடத்துமில்லான்
நாயகனுதவியாலே நானுமையுமிந்ததாமே. (௪௯௬)

நீயென்னையறிந்ததுண்மை நிகழ்த்தெனக்கேவலேது
வாயுறுகமில்லாய்யானோ மருவுறுவெளியிலாகித்
திமனக்காயிர்திரேனோர் நிரைவொன்றுய்கிற்கும்வேனோ
நாயகனேவலால்கா ணிக்குவன்வேறுவேறாய். (௪௯௭)

(வசனம்.) இப்படி யப்பக்கிசாரஞ் சொல்லும் நாளை எங்மல்கியாம் த்தில் அல்லாகுத்தஆலா மவுத்தானவர்களையெல்லாம் எழுப்பிக் கேள் விகளைக்குக்கேட்கிறபொழுது தீனனவர்களைப்பிரிக்கிறது நாளுக்கும் எனக் கியாமத்துநாள்வருமளவு மிவ்விடத்திலேயே யிருக்கக்கற்பித் தான் அல்லாவுடைய யேவல்வருமளவும் இங்கே கிடப்பனென்றது அ ப்போது நான்மெத்த அதிஜயப்பட்டு எனக்கு மதீனத்துக்குப்போக வழிசொல்லுமென்று கேட்டே னதுசொல்லும் செவ்வேகிபுலாவைப் பார்த்துக்கொண்டு போவீராகில் ஒருவொளிவுதெரியும் அந்த நிதா னத்தைப்பார்த்துக்கொண்டுபோ மென்றவாறு.

கண்ணிகள்.

அப்படியேபட்சிசொன்ன வடையாளங்காணவென்னச்
செப்பமுடனெழுந்து செவ்வேகிபுலாவை. (௪௰௮)

தப்பாமலேநோக்கித் தானடந்தங்காகையிலே
சர்ப்பமொன்றுபாரத் தலையைவழிமேலேவைத்து. (௪௰௯)

பாகமொருநூற்மதிகம் பாரமலைபோலே
நாகம்வழிமறித்தே நடுவேகிடந்ததுவே. (௫௰)

சுற்றுபதின்காதவழி சுட்டுக்கரிகாடாக்கி
அத்திசையிலேகிடக்கு மவ்வரவைக்கண்டாலே. ([illegible])

கண்டுநடுநடுங்கிக் கால்கைதடுமாறி
இன்றரவுக்கிங்கே இரையாகவந்தோமே. (௫௰௨)

என்றிடைந்துவாடியங்க னேங்கிமனங்கரைந்து
வென்றியுள்ளமெய்ப்பொருளே வேந்தேயெனைக்காப்பாய். (௫௰௩)

உன்னையன்றியாண்டவனே வுசாவுதுணைவேறில்லையே
என்னை நீகாத்தருள்வா யென்றேமனதுரைத்து. (௫௰௪)

புறக்காணிருபத்தொன்றைப் பூரணமாய்த்தானோதிச்
சுறுக்காமலேநடந்தேன் றனியோனுதவியினால். (௫௰௫)

அந்தரவுதன்றலையை யவ்விடம்விட்டேமாறிச்
சிந்தைமிகக்கலங்கிச் சிரத்தையேமாறவைத்த. (௫௰௬)

அப்போகிபுலாவை யானோக்கியேநடத்தேன்
தப்பாமலேயொளிவு தான்முன்னேதோற்றியதே. (௫௰௭)

தோற்றுமொளிவதன்னைத் தொடர்ந்துநடந்துசென்று
பார்த்தேனொளிபடர்ந்து பற்றிச்சுற்றிப்பாய்வதுவும். (௫௰௮)

மலைபோற்றிரண்டதொரு மாணிக்கமொருகே
நிலையாநெடுநேரம் நின்றங்ஙனேபார்த்தேன் (௫௰௯)

தீபவொளிபோலே சிவந்தமாணிக்கமதை
ஆவலுடனோடி யள்ளினேன்கைகளினால். (௬௰)

அப்போமனதுசொல்லு மாகாதறுதேவி
இப்போதேனள்ளுகிறு யேதுசெய்வாய்நீகாமே. (௬௰௧)

ஒருசிறியகல்லுதரஞ் லோகமெல்லாங்கொள்ளுமில்லை
பெரியகல்லையள்ளினையே பேராசையேன்சாமே. (ருயஉ)

கொள்ளவொருசெட்டியில்லைக் குடியிருப்பாரூருமில்லை
அள்ளி முடியவென்றாலனையிற்றுணியுமில்லை. (ருயங)

என்றனையேயென்சாமே யேநிற்குவீணாசை
உன்சிவன்றன்பிழைத்திங் கூர்சேர்ந்தாற்போராதோ. (ருயச)

என்றுமனதுசொல்ல எடுத்தகரமிரண்டும்
ஒன்றுமுறையாம லுலர்வழிந்துபோட்டனவே. (ருயரு)

விருத்தம்.

இப்படிச்சொல்லித்தானே யேந்தலார்தமீமன்சாரி
யொப்புடன்காத்தைப்பார்த்தங் கொருமொழிசொல்லலுற்றார்
தப்பும்பேராசையாலே தானினையள்ளவேண்டாம்
எப்படியாகிலுந்தா னிடாதுவருமேகண்டாய். (ருயசு)

அல்லல்வருமுன்னாலே யாசையைவிழுந்துவிட்டுச்
சொல்லொணாவிமசூல்யாதங் துதிசெய்துபோற்றிவாழ்த்திக்
கல்[illegible]லாம்போட்டுவிட்டுக் கருபத்துல்லாவைநோக்கி
இல்லல்லாதன்னைப்போற்றி யேகவேதுணிவையென்றார். (ருயஎ)

கண்ணிகள்.

போட்டுகிபுலாவைப் பூராயமாய்நோக்கி
காட்டமுடன்மேற்கே நடந்தேனவிடம்விட்டே. (ருயஅ)

சந்தவிருத்தம்.

அந்தத்தலம்விட்டேன்முன்னே யடசிச்செல்லவேதான்
அகில்யார்த்தனின்கிரியானது வடிவான்முடிதொடவே
இங்கப்பருவதமானதும் கென்செய்குவன்யானே
யிறையேயுன்றனருளேயன்றி யெளியேன்செலவசமோ
முந்திச்செலுமரவந்திட முழுதும்மெனைக்காத்தாய்
முனைநாளடிமுடிவற்றவ னுனையன்றியிற்றுணையா
ரெங்கப்படியாலுமெனை யிட்டேற்றுவைநீயென்
றேகன்றனையிதயந்தனி லிசையப்[illegible]ழ்ந்திட்டேன். (ருயகூ)

(வசனம்)—இப்படித்தானே யா[illegible]டவனைக் கல்பினுமேலநினைத்துநா விணுலேபுகழ்ந்து முனுஜாத்துச் [illegible] வானத்தைத்தொட்டுநிற்கிற மகாமேரு பருவதத்திற்கு [illegible]னென்றவாறு.

கண்ணிகள்.

அர்கமலைக்காவுதன்னிலானைகரடிசிங்கம்
மந்திபுலிவேங்கை மான்மரையிலங்கவரி. (ருயய)

கஸ்தூரிநாவிகளும் காண்டாமிருகங்களும்
விஸ்தாரமாக விளையாடித்திரிமங்கே. (ருயய[illegible])

கொண்டல்குடியிருக்குங் குளிர்ந்தபெருங்காவுதனில்
அன்ன ரண்டப்பட்சி யடைகிடக்குமவ்வரோங்கால். (௫௨௨)

மஞ்ஞுதவழுஞ்சோலை மயிலுங்குயிலினமும்
பஞ்சவனக்கிளியும் பல்வகையுமஞ்சுகமும். (௫௨௩)

தென்னமரங்கமுகும்சேர்ந்தடர்ந்தகாவுதனில்
அன்னமின்றிக்கோகுலங்க ளாலித்துக்கூவுமங்கே. (௫௨௪)

சந்தனக்காரகில்கள் தானோங்குங்காவுதனில்
அந்தரப்பட்சியுட னருவியாகாசப்புள்ளும். (௫௨௫)

சொந்தமாய்த்தானிருக்குஞ் சோலைமலையருகே
இந்தவனக்காவுகள்தான் எண்ணத்தொலையாதே. (௫௨௬)

அத்தனையுங்கண்டுமன மதிஜயித்துத்தானடந்தேன்
சற்றேவெளிதோற்றச் சருகின்மலையருகே. (௫௨௭)

கத்தனருட்பெற்றதொரு காரணராயங்கொருவர்
மெத்தப்பெரியவராம் வெளுத்தநரைத்தாடியும். (௫௨௮)

அந்தமலைச்சாரலின் ஆசனம்போட்டங்கிருந்தார்
சிந்தைமகிழ்ந்தவர்தம் செய்தியறிவமென்றே. (௫௨௯)

முன்னேநடந்தவரை முடுகினேனங்கவர்தாம்
மன்னுதம்மீமே வாருஞ்சலாமென்றனரே. (௫௩௰)

வாரும்சலாமென்றவத்த மன்னவரையாசரித்துப்
பேரறிந்தவாறதனைப் பேசும்மெனக்கேட்டேன். (௫௩௧)

எந்தனக்கேகின்றும மேகனறிவித்தான்காண்
எந்தவூர்கீரிங் கிருக்குங்வகையே துரையீர். (௫௩௨)

தந்தையன்னைசுற்றமில்லான் சாவுதுன்பமுமில்லான்
இந்தத்தலத்தி லிருத்தினனெங்கோமான். (௫௩௩)

வலதுபுறவாரியில் மரக்கலங்களோடிவரும்
அலைகடலிற்சேர்ந்ததண்ட வங்கோர்ந்தானெழுந்தே. (௫௩௪)

மலைமேலேயுச்சணமே வன்னிதனைமூட்டஞ்செய்வேன்
வி[illegible]க்கவொன்றுக வெள்ளைக்கொடியதனை. (௫௩௫)

கட்டுவேன்வெற்பதிலே கண்டவுட னவர்கள்
பட்டணமீதெனவே பாய்தாழ்த்திச்சேனிவிட்டே. (௫௩௬)

[illegible]ருபதியெனவே [illegible]டிவருங்கப்பலிங்கே
சேருமந்தக்கப்பல்விட்டே சிலபேரிறங்கிவந்து. (௫௩௭)

வந்தெனக்குக்காணிக்கைகள் வைப்பார்களப்போது
எந்தனுடென்றவரை யான்கேட்டவர்களுக்கு. (௫௩௮)

தண்ணீரொழிபனங்கள் தானேற்றுவேவிடுவேன்
என்றுமிது தொழிலோயேகனருட்படியே. (௫௩௯)

இந்தக்கலத்தி லிறையேவல்செய்திருப்பேன்
வந்தவரோதம்மீமே வாய்வருக்கவேண்டாமோ. (௫௪௰)

பசியுண்டோதானுமக்குப் பார்த்திபரேசொல்லுமென்றார்
பசியுண்டெனவுரைத்தேன் பலகனிகள்தான்கொடுத்தார். (௫௪௧)

கொடுத்தகனிவாங்கிக் கொண்டேன்பசிதீர்ந்தேன்
அடுத்தவர்தன்கிட்டவந்தங் கருகாசனத்தருகே. (௫௪௨)

அருகாசனம்போட்டே யங்கிருக்கும்வேளையிலே
ஒருகப்பல்வடகடலி லோடிவரக்கண்டோமே. (௫௪௩)

வடகடலிற்சோங்குவர மன்னருமங்கேதுசெய்வார்
இடமானமலைமீதி லேறிவெள்ளைடால்கட்டினார். (௫௪௪)

வெள்ளைடால்கட்டினபின் விண்ணிற்புகையோங்க
உள்ளமரம்புற்பூ டேன்கூட்டிமூட்டஞ்செய்தார். (௫௪௫)

அப்போதுகப்பலுள்ளோ ரனைவோருங்கண்டனரே
செப்புவாருர்பதிகாண் சீனிவிடுங்கப்பலென்றார். (௫௪௬)

விருத்தம்.

சீனியக்கடலிற்றள்ளிச் சிலரொருநகுதாசொல்வார்
மானிலத்தரசர்க்கேற்ற வகைபலகைகாணிக்கை
தானினிக்கொடுபோய்நல்கிச் சகலமுந்தெரியச்சொல்லித்
தேனினுமினியசொல்லாய்ச் செப்பியேசலாமுஞ்சொல்லும். (௫௪௭)

இப்படிநகுதாசொல்லி யேவினர்சிலபேர்தாமு
மப்படித்திறைகள்கொண்டே யடுத்தகைத்தோணியேறிக்
கப்பலைவிட்டுநீங்கிக் கரையினிற்சென்றிறங்கித்
தப்பிலாப்பெரியோர்தம்மைக் கண்டுநல்சலாஞ்சொன்னரே. (௫௪௮)

(வசனம்.) அந்தப் பெரிய வயதுள்ளோர்முன்னே கப்பற்காரர்கொண்டுவந்த காணிக்கைகள் கற்கண்டு பட்டுவர்க்கங் கட்டுவர்க்கங்களெல்லாம் எடுத்து முன்னேவைத்துச் சலாஞ்சொன்னார்கள் சலாத்திற்குப் பிரத்திசொல்லி நீங்க ளெங்கேதயத்திற்குப் போறபேர்களென்று கேட்டார் அப்போது கப்பற்காரர் சொல்லுவார்கள் எழுவான்திசையிலே மகாதீவென்றொரு பட்டணமுண் டந்தப்பட்டணத்திலிருந்து மக்கமதினத்திற்குப் போகவென்று கப்பற்பாய்விரித்தோம் அதிலே காற்றும்விசலும்எடுத்துத் திசைதப்பி இராட்சதர் சஞ்சாரமான பெருந்தீவிற்கொண்டுபோன தப்போது நாங்களெல்லாரினேம் இராட்சதர் நம்மைக்கண்டவுடனே எல்லோரையும் பட்சித்துப்போடுவார்களென்று கப்பலைமாறவிட்டு வரும்போது தண்ணீ ரொஜீபுணமில்லாமல் மெத்தத் தங்கட்டப்பட்டோமே யாதனையாக வரும்போ திந்த மலைச்சாரிலே வெள்ளைநிசானியும் புகைச்சலையுங்கண்டு இஃதொன்று மனிதர்சஞ்சாரமுள்ளதலமென்றும் கப்பலைச்சினிவிட்டிறங்கி யிக்கேவந்தோ மின்ன மிரண்டுபேருக்குத் தண்ணீ ரொஜீபனங் கிடைக்காதிருக்கி லெல்லோரு

பிறந்துபோவோமென்றார்கள் அப்போதவர்களுக்கு மதீனத்திற்குப் போவதாவுந் தண்ணீரொஜீபனமுங்கொடுத் தென்னை யழைத்தவர்கள் கையி லொப்பித் திவனை மதீனத்திற்கொண்டுபோய் விட்டுவிடுங்களென் றவர்கள்வசத்திலொப்பிவித்தார் அவர்களென்னைச் சந்தோஷத்தோடே கூட்டிக்கொண்டு தண்ணீரொஜீபனமும் ஏற்றிக்கொண்டு கப்பலிலேறினார்களென்றவாறு.

கண்ணிகள்.

கப்பலதுபாரக் கருமலைகளொவ்வாறு
ஒப்பானகப்பலதி லுள்ளசரக்குவகை. (௫௪௯)

சீனிசுழிகையுடன் சிவந்தசாதிபத்திரியும்
நானம்பன்னீரம்பர் நல்லகற்பூரமுடன். (௫௫௦)

வங்காளனுவிகளு மலர்ச்சந்தனம்புழுகும்
[illegible]ங்காதநற்பவள மாத்ததிகபொற்பவளம். (௫௫௧)

வாரணக்கோட்டுடனே மருத்துமாதளைப்பழமும்
தாரணிவிலைமதியாச் சகலாத்துமுண்டதிலே. (௫௫௨)

மெத்தப்பலபட்டுப்பணி விலைமதிக்கப்போகாது
மற்றச்சரக்கின்வகை மட்டிலைக்காண்மன்னவரே. (௫௫௩)

அப்பெரியகப்பல்நல்ல யாத்திரையாகவென்றே
செப்பினரெல்லோர்க்கும் சீனியைத்தூக்கெனவே. (௫௫௪)

மிகுதிஜனங்களுக்கும் வேந்துகாணங்கொருதன்
நகுதாக்குறியான ராஜாநற்கப்பல்கண்டீர். (௫௫௫)

வேதானமாலிமை வேந்துநகுதாவழைத்தே
நீதானசமுக்காவை நின்னையமாய்ப்பாருமென்றார். (௫௫௬)

கலாசுகட்கெல்லாஞ்சேவைக் காரன்றனையழைத்தே
விலாசமாய்ச்சிறுங்கேநீ மேலேற்றுசீனியென்றார். (௫௫௭)

சீனிதனைவலித்துச் சேர்ந்தார்கள்கப்பலதனில்
ஏ[illegible]த்தா[illegible]ங்கள் ஏற்றப்பாய்தூக்குமென்றார். (௫௫௮)

மதிநகர்க்கேக மரக்கலத்தைப்பாய்விரித்தே
பதினறுபாயுமன்னன் பரிவாகத்தூக்கினரே. (௫௫௯)

பெரியபீரங்கியோர் புறத்திற்சிறுபறையும்
துரிதமாய்வேட்டெழுப்பித் துய்யகொடிகட்டினர். (௫௬௦)

கட்டினர்பல்விருதும் காற்றும்பாயேற்றவே
கொட்டினரேமுரசங் குதித்தார்கள்கொம்புசின்னம். (௫௬௧)

வங்கக்கட லூடே வரையெழுந்துபோமாறாய்த்
தங்காமற்கப்பற் றனுவாழியொப்பதுபோல். (௫௬௨)

விருத்தம்.

புருவனையனையசோங்கு மாய்பதினறுமேற்றித்
திரைகடலலைகளார்ப்பத் திசைமதிறனைவைத்தேடிக்
குருநபிசலவாத்தோதிக் குறையில்லாதேகுங்காலைக்
கருமலைக்கடலினூடே கலடவர்கலங்கினரே. (ருசுங)

கலங்கினர்கப்பலுள்ளோர் கவலைகள்மிகவுமாகி
மலங்கினர்வாடிக்கோடி வல்லவன்விதியீதென்ன
விலகவேறிடமுங்காணேம் விதியினளிஃதோவென்னத்
துலங்கவேயுரையார்தம்மிற் சொல்லியேயழுதுகொள்வார். (ருசுச)

(வசனம்.) அப்போதென் கிட்டேயிருக்கிற பக்கீரையழைத் தித்தனை நாளும் வெகுசந்தோஷத்தோ டாட்டம்பாட்டமாக விருந்த கப்பற்கார ரிப்போது சற்றுநேரத்திற்குள்ளாக முகங்குழவிச் சலித்தொருவரையொருவர் கட்டிக்கொண் டழுகிற தேதென்றுகேட்டேனதற் கந்தப் பக்கீறுசொன்னார் அறமியே நீயொன்றுமறியீரோ இந்தக்கப்பலாகிற திரண்டுகருமலையி னடுவேகுடாவில்வந்துவிட்டது விலகியோட வழியில்லை இன்னஞ் சற்றுநேரத்திலே கப்பல்கலாக்காகிப் போய்விடுமென்று மினிமேல் நமுல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் இயாமத்திலே யல்லோ நீதாறு காணப்போறோமென்று தங்கள் தாய்தகப்பன் பெண்சாதி பிள்ளைகளை நினைத்து நாம் சமுத்திரத்திலேபோறோமே முதல்கள் பெண்சாதிபிள்ளைகளுக் குதவாமற் போகுதென் றழுகிறாரென்று பக்கீர்சொன்னார் அவர்சொல்லி வாய்மூடுமுன்னே கப்பற் கருமலையிலே போய்ப்பாய்ந்து கலாக்காகிப் போயிற்றென்றவாறு.

கண்ணிகள்.

கப்பற்கலாக்காகிக் கடலிலேதாழ்ந்தவுடன்
எப்போதுமுள்ளவன்று னேவினுனோர்பலகை. (ருசுரு)

எனக்கோர்பலகைவந்தங் கேந்தியெடுத்தனபோல்
மனக்கோட்டமில்லாமல் வாரிதனிலேபலகை. (ருசுசு)

என்முன்னேதான்வரக்கண் டெங்கோனைத்தான்தொழுது
முன்யாகவந்துதித்த முகம்மதைத்தான்புகழ்ந்து. (ருசுஎ)

எல்லாமுமுள்ளநாயகனை யிருதயத்திலேநினைந்தக்
கொண்டிப்பலகைதனி லுருளாமலேகிடக்கேன். (ருசுஅ)

அலைகள்மலைபோலே யந்தரத்தேதானுயர்ந்தே
மலைபோலுயர்ந்தமலை மாபிலமேற்கொண்டுசெல்லும். (ருசுகூ)

அப்படியேபலகைதனில் பான்கிடக்கும்வேளையிலே
மெய்ப்பிறைவன்றன்னருளால் மீன்கள்வந்துதோன்றியதே. (ருஎ0)

மகரகுழத்திருக்கை மாவிடநாவுடுரம்
சரில்லாமீவாங்கில்பெரு கெய்மீன்கடற்கலக்கி. (ருஎக)

ளை நீன்பாரைபெருந் தேரளிசம்மாதுருட்டி
வாரிகிளிமூக்கன் வந்துவிளையாடிநிற்கும். (ருஎஉ)

ஆனைமீன்குதிரைமீ னாழிமீன்றன்னுடனே
மீனைமீன்பாய்ந்து வெருட்டிப்பிடிப்பதுவும். (௫௭௩)

கண்டுபயந்து கர்த்தனேகாப்பாய்நீ
யென்றேதுவாவிரந்தே னென்றருமுள்ளான்றன்னுடனே. (௫௭௪)

விருத்தம்.

அன்னைந்துமாறுந்தினை யருளியநபிதன்றோழர்
நின்னைந்துவனைக்குவோரில் நெறியினைருள்ளாரொன்றே
என்னைந்துநாளும்வாரி யெதிருமீனென்னைநோக்கி
ஒன்றுஞ்செய்யாமல்மீள வோடுமேதிரும்பித்தானே. (௫௭௫)

நாற்பதுநாளதாக நாளந்தப்பலகைமீதி
லசிப்பதமவனேயல்லா லருந்துநீருமில்லாத
சேர்ப்பதோராழிதன்னிற் சிராயினையலைகடள்ளிக்
காப்பவனருளாலங்கோர் கரையினிற்சேர்த்தவாறே. (௫௭௬)

(வசனம்.) நாற்பதுநாளாகக் கடலிலேயொரு சிராயின்மேலே யன்னந்தண்ணீரில்லாமற் கிடக்கிறபோ தொவ்வொருமீன்கள் மலைபோலே வந் தென்னைப்பார்க்கு மந்தமீன்களைக்கண்டு பயப்பட்டல்லாவுன் அமானமென்பேன் அப்போ அந்தமீன்கள் திரும்பி யோடிப்போய்விடும் இப்படி நாற்பதுநாளு மொரு தங்கடங்கள்வாராமல் ஒருகரையிலே வந்துசேர்ந்து மூன்றுநாளாகத் தன்னைமறந்து நினைவில்லாதேயிருந்தேன் அதன்பிறகு மயக்கந்தீர்ந்து சற்றே நினைவுவந்து கண்ணைவிழித்துப்பார்த்தேன் கடலிலே யித்தனைநாளாக இருந்தோமே இப்போது கரைசேர்ந்தோமென்று சற்றே சந்தோஷமாயிற்று அதன்பிறகு அந்தக்கரைக்குமேற்காக ஒரு சிறுதோப்புத்தெரிந்தது அந்தத்தோப்பிலே போனேனுமானால் ஏதாகிலும் புசிக்கிறவஸ்து கண்டாயிருக்குமென்று மெள்ளத் தவழ்ந்தும் நடந்து மந்தத்தோப்பிலேவந்தேன் அதிலே பார்க்கிறபோதொரு மரத்தின்கீழே சிலகனிகளுதிர்ந்து கிடக்கின்றன அந்தக்கனியை யெடுத்துப்புசித்தேனெனக்குமெத்தவுமது ருசியாகவிருந்தது என்னுடைய புசித்தாபமெல்லாம் தீர்ந்தே யொரு மயக்கமாகத்தானே யந்தமரத்தின்கீழே நித்திரைசெய்து பொழுதுசாய்ந்த நேரத்தில் விழித்துப்பார்க்கிறபோது அந்தத் தோப்புக்கு மேற்பாரிசமாக வொரு பாதையாகவிருந்தது அந்தப்பாதையிற் சிலபேர்கள் ஆடுமாடொட்டகங்கள் மேய்த்தோட்டிக்கொண்டுபோறார்கள் அவர்களைக் கண்டு சந்தோஷமாக வோடிப்போய்க் கூப்பிட்டு நீங்களெந்தவூருக்குப் போறபேர்களென்று கேட்டேன் அவர்களென்னைப் பிரிந்துபார்க்கவுமில்லை என்னுடனே பேசவுமில்லை அவர்கள் தங்களிலே யொருவருக்கொருவர் பேசுகிறது பக்கிசாரங்கள் கூப்பிட்டதுபோலே யிருக்கின்றததன்பிறகு நான் திரும்பிவந்து அந்தத்தோப்பி லொருமரத்தின்றூரிலே புடையிருந்த அந்தப்புடையிலே இரவெல்லாம் புகுந்து படுத்துக்கொள்வேன் பகலெல்லாங் கனிகளிறக்கிப் புசித்துக்கொள்வே னிப்படிச் சிறிதுகாலமாயிருக்கிறபோ தொருவன் கைசங்கைபுள்ள ஆசிக்க ஜலமாக்களைப்பிடியா லென்னிட்டவந்தா னென்றவாறு.

கொச்சகம்.

சட்டைசருவங்கூடனே தசுபிமணிகையேந்திக்
கட்டுமிடைக்கட்டுமொரு கையின்முசல்லாவதுவும்
கொட்டபாதக்குறடுஞ் சுகந்தமணம்வீசக்
கிட்டவந்தபோதுசலாங் கேட்கவுரைசெய்தேனே. (௩௭௭)

நானவர்க்குறுஞ்சலா நல்லவனென்றேயுரைத்துத்
தீனவினமாமதினச் சேரவழிசொல்லுமென்றேன்
தானவனுமேபிரத்தி சங்கையுடனேயுரைத்தான்
ஆனவழியேயுமக்கி யானுரைப்பேனென்றானே. (௩௭௮)

(வசனம்.) அப்போதுநா னவனைப்பார்த் திவன் மெத்த அழகுள்ள வனென்றெண்ணி யெனக்கு மதீனத்திற்குப்போக வழிசொல்லுமென் றுகேட்டேனப்போ தவன்சொன்னான் உம்மை மதீனத்திற்கொண்டு போய் விடுகிறே னொருவார்த்தை சொல்லுகிறே னவ்வார்த்தையை க் கேட்பீரானால் உம்மை மதீனத்திற்கொண்டுபோய் விடுகிறேனென் றான் நானல்லவென்றேன் முக்காலுங் கபூல்த்தானேவென்றான் கபூல்க் காமென்றேன் அப்போ தூரப்போய்ப் பின்னுக்குவாங்கிக்கொண்டு த ன்னுடைய சுரூபத்தைக்காட்டினா னென்றவாறு.

கண்ணிகள்.

வாங்கினான்பின்னே வளர்ந்தான்மலைபோலே
ஓங்கினான்கைகளிரண்டு முத்திரம்போலேநீட்டி. (௩௭௯)

நின்றானேமாபாவி நீதிகெட்டமூதேவியைக்
கண்டேன்மனங்கலக்கிக் கைகால்நடுக்கமுற்றேன். (௩௮௰)

தேவல்லோவென்று நினைத்துப்பெருமூச்செறிந்தேன்
நாவுலர்ந்துகண்ணிருண்டு நடைவீவாய்முசலானேன். (௩௮௧)

பண்டென்னைத்தான்பிடித்த பழிகாரமூதேவி
இன்றிங்கேவந்தவினை யேதோவெனவறியேன். (௩௮௨)

எதுசெய்வானோவறியேன் என்பாவந்தீர்ந்திலையோ
வாதுசொல்லிவந்தவன்போல் வழிமறித்துக்கொண்டானே. (௩௮௩)

என்றேமிகவாடி யேங்கித்தனைமறந்தே
யொன்றுந்தெரியாம லோவியம்போலேயிருந்தேன். (௩௮௪)

வாடியென்னுள்ள மயக்கிக்கிடக்கையிலே
கூடினானேபழைய கோலச்சுருபங்கொண்டான். (௩௮௫)

சுருபங்கொண்டென்முன்வந்து சொல்லுவானல்லவர்பால்
பருவமொன்றுசொல்லுகிறேன், பார்த்திபரேதம்பியே. (௩௮௬)

அஞ்சாதீரல்ல வறிவாளரேயர்தோரே
நெஞ்சிற்பயங்கள்தள்ளி நீர்போடுமென்னபரே. (௩௮௭)

சுருவந்தன்னைவேறேயுமேநீர்கேளும்
ஒருவர்தன்னுடனே யுமையொன்றுஞ்செய்வதில்லை. (௩௮௮)

உம்மாலொருகரும முண்டாகத்தான்வேண்டும்
எம்மாற்பயமுமக்கில் கில்லைக்காண்மன்னவரே. (௫௮௯)

ஆதமுதனபியா யானநபிமார்களிலே
வேதக்கவுறுத்துடைய வேதாம்பரானவர்காண். (௫௯௦)

சுலேமானபியுடைய செல்வம்போலார்க்குமில்லை
உலகில்சுலைமானபிக்கிங் குடையோனருட்படியே. (௫௯௧)

கதிர்மதியுமின்னிடி கண்டவர்க்கேதொண்டுசெய்யும்
பதினெண்ணுலகிலுள்ள பல்படைப்புஞ்சொற்கேட்கும். (௫௯௨)

அலைகடல்புவியா னண்டபகிரண்டமுதம்
பலதேவுஜின்பரிகள் பாதம்பணிந்தேவல்செய்யும். (௫௯௩)

தறையிற்றவமேத்துத் தானிறக்கும்வள்ளலவர்
பறக்கும்பட்சியாவதுள்ள பாஷையெல்லாம்பேசுவர்காண். (௫௯௪)

எல்லாநபிமார்க்கு மில்லைக்காண்மன்னவரே
சொல்லரிகரொவ்வாத சோராதவாழ்க்கையர்காண். (௫௯௫)

விருத்தம்.

நபிகளிற்சுலையுமானின் னபியின்றன்வாழ்க்கைபோலப்
புவிதனினியாய்வந்து பிறந்தவர்தமக்குமில்லைத்
தவிசினைச்சின்னோர்தாங்கச் சகலலோகமும்போய்மீள்வார்
கவிபுனையாழியாலே காசினிமுழுதும்ஆண்டார். (௫௯௬)

அப்படியாகுநாளிலொ திகற்பனையினாலே
தப்பிலானமைந்தன்மன்னன் சடுதியில்மவுத்துண்டாகி.
யொப்பிலானுலாம்வாரி யுயரமாந்தலத்தின்மீதே
செப்புநேர்பள்ளிக்கட்டிற் சேர்ந்தவண்டுயில்கின்றாரே. (௫௯௭)

(வசனம்.) இப்படிச் சுலையுமானபி நாலாங்கடலினடுவே யொருதீவு ண்டு மந்தத்தீவு அல்லாகுத்த ஆலாவுடைய வரிசைபெற்றதீவு அதி லொரு குப்பாயிருக்கின்ற ததிலுவ்வொரு பள்ளிக்கட்டிலிருக்கின்ற ததின்மேலே நித்திரைசெய்கிறார் அந்தப் பள்ளிக்கட்டிலை யொரு ஐந் தலைநாகம் சுற்றிக்கொண்டிருக்குது அந்த ஐந்தலைநாகத்திலிடமாகத் தேவுகள் பரிகள் ஜின்களாலும் அண்டப்போகாது அதற்கென்னகையி லே யொருமூலிகைமருந்திருக்கின்றன மனிதராலேயல்லாமல் மற்றப் பேராலே யாகாது அப்படியந்த ஐந்தலைநாகத்தை நம்முடைய மூலி கைமருந்தினாலே ஜாய்கொண்டு சுலையுமானபிகை மூத்திரைமோதிரத் தைக் கழற்றிலேமானல் எழுவாலபடுவான்மட்டும் ஒருகுடையிலாள லாமுமக்கு மூன்றிலொருபங்கிராச்சியம் ஆளத்தருவேனென்றுனைப் போ தென்மனத்திலேநினைத்தேனு ராச்சியம் ஆளத்தானேனு திரிகிறோ மிந்தசூதேவிக்குக் கழல்செய்துவிட்டோமே இனி நாமாட்டோமென் றாலும் விடமாட்டானென்று மனதிலெண்ணிக்கொண்டு நாயனாலவி லே பாஞ்சாட்டி யுனக்கேற்றபடி செய்யென்றேன் அப்போதவன் சொ ல்லுவான் நீயொன்றன் தேவிலேறிக்கொண்டு கண்ணைச் சிக்கெனமூடிக்

கொள்ளும் நான்விழியுமென்றபோது விழியுமென்றான் அப்போ தவன்
தோளின்மேலேறிக் கண்ணைச் சிக்கெனமூடிக்கொண்டேன் பஜறிலேகொ
ண்டு பறந்து நான்குகடலுங்கடந்து சுலைமானபி பள்ளிக்கட்டிலிருக்கி
ற தீவிலேயத்தமிக்க வொருசாமத்தின்முதலே கொண்டுபோய்விட்டு
க் கண்ணைவிழித்திறக்குமென்றுனென்றவாறு.

கண்ணிகள்.

இறங்கினேனானுமப்போ என்றுமுள்ளான் தன்னருளால்
உறங்கிவிழித்தனபோலொன்றுந்தெரியாதெனக்கு. (௫௯௮)

அப்போதுதேவுசொல்லு மழகுடையதம்மீமே
இப்போசுலைமானபி நிஜானிதெரியுதென்றான். (௫௯௯)

எதிட்டுப்பார்த்தேனானேகனருளாலே
நீதிட்டவெண்மையிலு நேத்தியுள்ளவெண்குமிடம். (௬௱)

வெண்குமிடத்தின்கீழே மிக்கானபள்ளிக்கட்டில்
கண்கள் ரண்டுமெவ்வொளிவைக் கண்டுமருண்டனவே. (௬௱௧)

வெள்ளைத்துகிற்போர்வையது மின்னொளிபோலே
உள்ளமெல்லாந்தான்மகிழ்ந்தங் கொளிவுகண்ணைப்பார்த்துநின்றேன். ()

அந்தவொளிவினின்றங் கதியமணம்வீசியதே
சந்தணம்பன்னீர்புனுகு கஸ்தூரிக்குமமொவ்வாது. (௬௱௩)

விசும்பரிமளந்தான் விண்ணகத்திலுள்ளதல்லக்
காசினியிலந்தமணங் கண்டறியேனென்றுசொல்லி (௬௱௪)

சுலைமானபிதமக்குச் சிறந்தபாத்திகாவோதி
நிலையாய்நெடுநேர நின்றுதுவாவிரந்தேன். (௬௱௫)

அந்தத்தலமெத்த அதிகதலமானதிலே
வந்துநிற்கவல்லோன் வகுத்தானமக்கெனவே. (௬௱௬)

என்றுமனமகிழ்ந்தங் கிறையோனைத்தான்போற்றிப்
பண்டுநபிமார்களிலும் பதவிபெற்றபார்த்திபர்காண். (௬௱௭)

சற்றறிவாற்றேவேகீ தானிங்கேவர்தாயே
குற்றமில்லாச்சுலைமானபி குமிடந்தெரிகின்றதும். (௬௱௮)

எத்தனை தூரமுண்டு மிவ்விடத்திற்கவ்விடந்தான்
உத்தமனேதம்மீமே யொன்றரைச்சாமத்தின்வழி. (௬௱௯)

அத்தனருட்பெற்றவரே அஞ்சாதீர்வாருமென்றான்
சற்றுநான்முன்னடப்பேன் குர்தேவந்தேவாருமென்றான். (௬௱௰)

நடந்தோமிருபேரு நாடிமுன்னேபோகயிலே
படம்விரித்தைந்தலைநாகம் பார்த்துக்கண்ணெரித்தீப்பறக்க. (௬௱௰௧)

சினக்குத்தலையெடுத்துச் சீறிமெள்ளப்பாய்ந்ததுவே
மனந்திகைத்தேமாலிமவர் வந்தவழியேதெனவே. (௬௱௰௨)

அஞ்சுதலைநாக மதிவேகமாய்ச்சீறி
நஞ்சுவிட்டைடந்துதலை நாகமதங்கேவியதே. (௨௱௰௩)

ஏவினநஞ்சத்தனையு மெரிபாகத்தக்கினிபோற்
றூவிவெகுதூரந் தன்னிலகப்பட்டதெல்லாம். (௨௱௰௪)

மண்ணின்மரம்புற்பூடு மான்மிருகமுள்ளதெல்லாம்
விண்ணிற்பறவைகளும் வெந்தநீறாகியதே. (௨௱௰௫)

அந்தவகைகயைக்கண்டவன் காவிபட்டபடென்றே
சிந்தைகலங்கித் தியங்குமந்தவேளைதன்னில். (௨௱௰௬)

அஞ்சாதீர்தம்பீமே யதற்கேன்பயமுமக்கு
மிஞ்சநடந்திந்த மூலிகையைவீசுமென்றான். (௨௱௰௭)

மூலிகையென்கையிற்றந்தே முன்னேக்கிவீசுமென்றான்
சோலிதான்செய்யாமற் றூரவெட்டிவீசிவிட்டேன். (௨௱௰௮)

ஐந்தலைநாகம்விட்ட அக்கினிநஞ்சத்தனையுஞ்
சிந்திவிட்டமூலிகைதான் சென்றுநஞ்சின்மேற்றாவி. (௨௱௰௯)

அக்கினியைத்தானூற்றங் கனலையடக்கியதே
மிக்கபெருநெருப்பை விண்ணின்மழைதூற்பதுபோல், (௨௨௰)

அப்போதத்தேவுசொல்லு மழகுள்ளதம்பீமே
இப்போதுகண்டீரோ வென்மருந்துமூலிகையை. (௨௨௧)

இனிமேற்பயம்வேண்டா மேதிற்குமஞ்சாதையும்
மணிநர்சேராகையினல் மருந்துப்பலலித்திடுங்காண். (௨௨௨)

என்றந்தத்தேவுசொல்ல விதமித்திருபேரும்
வென்றிகொடுமுன்னே விரைந்துநடந்தோமே. (௨௨௩)

அப்போதைந்தலைநாக மதிகோபமாய்ச்சினந்தே
சர்ப்பமதுசீறித் தலையெடுத்துமூச்செறிந்து. (௨௨௪)

அஞ்சுதலைவாயாலு மைத்துவனஞ்சைவிட்ட
மிஞ்சுமந்தநஞ்சு வேகமதுதாவியதால். (௨௨௫)

சிங்கிகுளிரத் திரையுமிப்புகைபுகையாய்க்
க[illegible]லிருள்தபோற் ககனமெல்லாமூடியதே. (௨௨௬)

அந்தவகைகண்டேங்கி யாவிதடுமாறிச்
சிந்தைகலங்கித் தியங்குமந்தவேளைதன்னில். (௨௨௭)

வஞ்சன்மகாபாவியென்றன் மார்பிலடித்திதுசொல்வான்
அஞ்சாதீர்தம்பீமே யதற்கென்கையின்மூலியுண்டும். (௨௨௮)

மூலிகையுமுன்னடைக்கு முழுதுமென்றன்கையிற்றந்தே
வாலிபரோதம்பீமே மதியாமல்வீசுமென்றான். (௨௨௯)

அஞ்சாமல்நானங் கடந்தேதறிவீசிவிட்டேன்
நஞ்சுகுளிர்சிங்கியெல்லாம் நாடியங்கேறேறியதே. (௨௱௰)

இப்படியேனு கமேனியவங்கஞ்சதெல்லாம்
ஒப்பிலானுதவியினு லொரன்றும்பலியாதே. (௬௩௧)

ஐந்தலைநாக மதிகோபமாய்ச்சீறி
யென்தன்முன்னேதேவுமனு வென்னுமற்றான்வருமோ. (௬௩௨)

என்றுபடமெடுத்தையு மிதமாகத்தான்விரித்தே
வென்றியுடன்வாய்திறந்து வேகத்துடன்வரவே. (௬௩௩)

அப்போதுநான்பயந் தங்கறிவுதடுமாறி
இப்போதுதம்பீமே யேதுக்குமஞ்சாதேயும். (௬௩௪)

தஞ்சமன்சாரியரே சடுதியாயம்மருந்தை
நஞ்சிருக்கும்வாய்மூட நாடிநீர்வீசுமென்றான். (௬௩௫)

சென்றுநீர்வீசுமென்னத் தேவுசொல்லவீசிவிட்டேன்
குன்றுமணிக்கண்கள்போற்றிக் கோலப்படமொடுக்கி. (௬௩௬)

அஞ்சுவாய்மூடி யரவமொடுங்கியதே
தஞ்சமினியாண்டவனே யென்றேசலித்தரவம். (௬௩௭)

பள்ளிக்கட்டிற்றன்னைச்சுற்றிப் பதையாமலேகிடக்கும்
தள்ளிமுன்னேபள்ளிக்கட்டிற் றன்னருகேதேவுவர. (௬௩௮)

அப்போதுஎங்குமுள்ள வாதியருளாலே
மெய்ப்பாயோர்சத்தமுண்டாய் விண்ணுமண்ணுந்தானதிர்ந்த. (௬௩௯)

ஆர்ப்பரித்தசத்தமதி லங்கமெட்டுத்துண்டமதாய்
நேர்ப்பதித்தழுதேவி விழுந்தானெடுமலைபோல். (௬௪௰)

வெட்டிப்பிளந்ததுபோல் மேனியெட்டுத்துண்டமதாய்ப்
பட்டுவிழுந்தாவிறந்தான் பதையாமலேகிடந்தான். (௬௪௧)

அப்போதுநானங் கறிவழிந்துமெய்மறந்தே
யொப்புவமையில்லானே யுன்காவலென்றழுதேன். (௬௪௨)

அப்போதுநாய னருளாலேயோர்பறவை
மெய்ப்பாகவென்னுடைய மே[illegible]தொட்டுத்தான்தடவி. (௬௪௩)

கொண்டாருமில்ல சுலைமானபிமோதிரத்தை
சொண்டாற்கழட்டியென்றன் சுண்டுவிர[illegible]போட்டு. (௬௪௪)

பண்டாருங்காணுத பண்பாகவென்றனையே
தண்டாமலேதூக்கித் தரியாதுபந்தினைப்போல். (௬௪௫)

நாலாங்கடலுக்கப்பால் நாவிலத்திற்போட்டுவிட்டு
மேலோகந்தானோக்கி விரைந்துபறந்ததுவே. (௬௪௬)

வானந்தனைநோக்கியந்த மாபறவைபோனதற்பின்
கானகத்திலீமூன்றுதினம் கவ்வழியாமற்கிடந்தேன். (௬௪௭)

மூன்றுதினஞ்சென்றதற்பின் மூயம்சிந்தனைவுவந்து
ஆண்டவனைத்தானினைந்தன் கரியவிசாரத்துடனே. (௬௪௮)

சந்தேகமேயெடுத்துத் தான்பார்த்தேனுன்குதிக்கும்
சுந்தரந்திரையோர்புறமுன் கார்மலைதானோர்புறமும். (௫௰௯)

மற்றவிருபுறத்தில் வனமுமடவிகளும்
சுத்தனுருளிதெனக் கண்டேனப்வனத்தை. (௬௰)

கண்டுமனமுருகிக் கனலின்மெழுகதுபோல்
என்றுமுள்ள ஆண்டவனை யேற்றிப்புகழ்ந்துகொண்டே. (௬௰௧)

நாடினேன்மேற்கே நடந்தேனவிடம்விட்டுக்
காடுமலையும்பெருங் கானகமுமல்லாமல். (௬௰௨)

நாடும்பதியுமொரு நகரமுந்தானங்கிலையே
ஆடுமாடோட்டகமு மவ்வனத்திற்றானிலையே. (௬௰௩)

மானிடர்சஞ்சாரமில்லா வனவாசக்காட்டினிலே
நானடந்தேன்மூன்றுதினம் நரரில்லாக்கானகத்தே. (௬௰௪)

வானடர்ந்தஇருள்வனத்தில் மதியெழுந்தவாறதுபோற்
கானகத்திலோர்குமிடங் கண்டேனதிஜயமாய். (௬௰௫)

சந்த்ரவுதயம்போலே தானங்கன்றோற்றியதே
இந்தவனந்தனிலே யிதுகுமிடமேதெனவே. (௬௰௬)

தோற்றமணியுப்பரிக்கை துலங்கும்பளிங்கதனால்
சாற்றும்கபாடமெல்லாந் தங்கப்பலகையினால். (௬௰௭)

விசும்பைநேராயுயர்ந்த வெண்குமிடமாளிகைமேல்
பசும்பொற்பணிபூண்டு பைங்கிளிபோலங்கொருபெண். (௬௰௮)

விருத்தம்.

அந்தவுப்பரிக்கைமீதி லரிவையர்க்கரசியான
சந்திரவதனமாதோர் தையலாள்தனியேநின்று
முந்தவேதாயார்சொன்ன முதுமொழிதவறுவல்லாம்
எந்தனுமத்தைக்கூறி யெனக்கவள்சலாஞ்சொன்னாளே. (௬௰௯)

எனக்கவள்சலாஞ்சொன்னாள்பின் னேந்திழைமுகத்தைநோக்கி
வனக்கிளிமொழிநல்லாளே மயிலெனுமழகுள்ளாளே
யுனக்கென்பேர்சொன்னார்நாம முன்மைநீயுரையாய்மாதே
மனக்குறைமிகவுமுன்னிம் வள்ளலேசொல்லக்கேளும். (௭௰)

(வசனம்.) அல்லாகுக்த ஆலாவுடைய கிருபைப்பேறுபெற்ற தமீம
ன்சாரியாரே கேளும்மன் றுயாகிறவள் அறப்புநாட்டுசுல்த்தான் உடைய
மகள் அவள்வயிற்றிலே நான் செறபடாமுருக்கிறபோ தொருதேவிந்த
காட்டிலே யுள்ளதேவுக்கெல்லாம் ராஜாவாகிய தேவந்தத்தேவு என்று
ம்மை யெடுத்துக்கொண்டுவந் திந்தமாளிகையையுண்டாக்கி இதில் வை
த்துக்கொண்டிருந்தது நான் பிறந் [illegible] பிராயமாகிறபோ தெந்தா
யாருக்கு மரணகாலமாயிற்று அந்தநேரத்திலே யென்னையழைத் தெ
னக்கு ஒசியத்துச்சொன்ன தென்றவாறு.

கண்ணிகள்.

இஞ்சில்சமூறுதேள மேத்திங்கிவைமூன்றும்
நெஞ்சாரவோதி நெறியாலிருந்திருப்பாள். (௭௰௧)

அந்தத்தவுமெத்தி லாராய்ந்தறிந்தமொழி
எந்தனக்குச்சொன்னதெல்லாம் யான்சொல்லக்கேளுமையா. (௧௬௨)

ஆதியொளிவி லவதரித்தஆலநபி
வேதவிளக்கொளிவாய் வேதாம்பரானவர்காண். (௧௬௩)

ஆதந்தமக்குமுன்னே யானபயகாம்பரொளி
நீதமுடன்வைத்திருந்தா னீஸ்டசுவனமதில். (௧௬௪)

எல்லாநபிமார்க்கு மேத்தமுள்ளோராகையினல்
அல்லாவவரொளியா லமைத்தான்பலபடைப்பும். (௧௬௫)

அந்தமுகம்மதனூர் யார்களிலேதானொருவர்
இந்தவழிவருவ ரென்றுளியல்பாக. (௧௬௬)

பின்னுமெங்கள்மாதரவோர் பிரானாஞ்சொன்னாள்காண்
இன்னமிரவ்டாஸ்டிஞனக் கிரைந்தாம்வயதில். (௧௬௭)

மஞ்சிக்குடையுடைய முகம்மதனூர்யாரிற்றமீம்
அன்சாரியென்னு மவர்தானிங்கேவருவார். (௧௬௮)

வந்தவர்க்கிங்கெந்தன்சவா மறவாமற்சொல்லுகென்றான்
எந்தனின்றுபார்க்கின் றீடேற்றமுண்டாக. (௧௬௯)

தாயார்க்குமென்றனக்கும் சாகிபேதுவாச்செய்யுமென்றான்
வாயாரமங்கைபர்க்கு வகைவகையாய்த்துவாவிரந்தேன். (௧௭௰)

என்றுமுள்ளஆண்டவனே யிவர்கள்பிழைபொறுத்தே
நன்றிபெறுஞ்சுவர்க்கம் நாயனேநீகொடுப்பாய். (௧௭௧)

ஊக்கானநாயனவன் சலையேற்றிவைப்பதனை
மக்கநகர்க்கேக வழியெனக்குச்சொல்லையென்றேன். (௧௭௨)

விருத்தம்.

மக்கமாநகருக்கேக வழியெனக்கேட்டளையா
இக்கெலாம்வனமுங்காவுங் தேவுமஞ்சாரக்காடும்
பக்கமேட்டிகளில்லைப் பாவியென்செய்வேனின்றே
யொக்கவே துணைநான்கூட்ட வொருவருங்காணேனென்றான். (௧௭௩)

ஒருமனிதருமில்லாத வுதப்பினமிதுவேகண்டீர்
பெருகவின்குளதேதென்றாற் பேய்க்கணப்பூதத்தேவு
வருவர்போவாருமற்ற வனமிஃதாதலாலே
உருகியேமெலியவேண்டா மொருமொழிகேளுமையா. (௧௭௪)

(வசனம்) இந்தத்தலமாகிறது மனிதர்சஞ்சாரமான தலமல்ல தேவுகள் பரிகள் ஜின்கள் பூதங்கள் கூடியிருக்கிற தலமிது இவ்விடத்தில் அவ்வ்டனே தேவுகட்கெல்லாம் ராஜாவான என்னுடைய தாயைக்கொண்டு வந்து வைத்திருந்த தேவென்னுடைய காய்க்கிறுதி காலமானதினாலே இவ்விடத்திலுண்டாகிய தேவுகளெல்லாம் அனுப்பித் தென் வார்த்தைக்குள்ளாக வடக்குகொண்டுந்தவென்று தேவுக்கெல்லாம் புத்திகற்பித்தெனக்கேத்தபுத்திகளெல்லாஞ் சொல்லித்தேவுசொல்லும் நானுமுமாதம் புறாட்டுக்குப்போய்ச் சகியபக்தி வருகிறேனென்று

சொல்லிவிட்டுப்போயிற்று அதுபோயு மிரண்டுவருடமாயிற்று இதுவ
ரையும் வரக்காணோன் உம்முடைய விரலிலே இருக்கிற திருவாழ்மோ
திரம் [illegible]ன்தகப்பன் கையிலேகிடந்த மோதிரம்போ லிருக்குதென்று
சொன்னவாறு.

கண்ணிகள்.

அந்தமொழிகேட்டுடனே யன்னமெனுமின்னுளே
இந்தத்திருவாழிஇங் கென்கையில்வந்தவகை. (கஎரு)

உந்தனுடே யுரைக்க வொண்ணுதலேநீகேளாய்
எந்தனையோர்தேவிங் கெடுத்துக்கொண்டுபோனதினுல். (கஎசு)

[illegible]வொன்றுமில்லாத வாதியருளாலே
சுலைமானபிவிரலிற் றாய்தாகவேகிடந்த. (கஎஎ)

ஆழியெனக்கிங் ககப்படவுங்கொண்டேகும்
பாழானதேவு பதைபதைத் [illegible]த்திடவும். (கஎஅ)

செய்தானிறையவன்றான் [illegible]ரல்வாழியென
மெய்யாய்நடந்ததெல்லாம் விளம்பினான்வந்தவகை. (கஎகூ)

விருத்தம்.

என்றிந்தவரலாறெல்லா [illegible]ந்திழைதனக்குச்சொல்ல
நன்றுநன்றறிதுகொல்லென் வென்றுமின்னடுக்கமுற்றுப்
பல்லடனைப்பெற்றதா [illegible] பாவுமென்றந்தைத்தேவை
இன்றுநானிழந்தேனென்றே யேக்கமாய்த்தியங்கினளே. (கஅ0)

ஏங்கியேதியக்கிப்பின்று [illegible]யவன்றனையுங்கொண்டு
தீங்கிலாமதீனவுக்குச் செல்லவோர்தேவைவேற்றிப்
பா[illegible]ம்மூர்விட்டு வரவுநான்பகர்வேனின்று
தேங்[illegible]பதறவேண்டாங் கவலையையகற்றுமென்றுள். (கஅக)

(வசனம்.) அப்போது நான்சொன்னேனெனக்கொருகவலையுமில்லை
என்னுடைய நாயனுன்னைக்கொண்டே யுதவிசெய்விப்பா னுன்னுடை
ய தாய்தகப்பன் போனுர்களென்று சலியாதே ஆண்டவனை யெந்நேர
முந் தோத்திரவு செய்துகொண் டிருந்தா [illegible] லுனக்கொரு குறைவு
மில்லை நீயே நல்வழி பெற்றுக்கொள்வா[illegible] ஒருதலீனுக் காயிரந் தலீனு
[illegible]யு முண்டாக்கி வைப்பானென்று [illegible]னேன் அப்போது தன்
னுடைய சலிப்பையெல்லா [illegible] வெகு [illegible]தோஷத்துடனே தன்னு
டைய மாளிகையில் நின்றொருதேவுடைய பேரைச்சொல்லிக் கூப்பிட்
டா ளென்றவாறு.

கண்ணிகள்.

கூப்பிட்டசொற்கேட்டுடனே கொடியதொருதேவு
ஆப்பிட்டறைந்தனபோ லரசன்மகள்மொழியை. (கஅஉ)

கேட்டவுடனேதேவு கிடுகிடெனவோடுவந்து
நாட்டமுடனேடிவந்தன் இராஜன்மகள்பதத்தை. (கஅ௩)

தொட்டுச்சிரசில்வைத்துத் தோத்திரவுசெய்துநின்று
எட்டுத்திசைத்தேவுக் கெல்லாமரசன்மகளே. (கஅச)

என்னையழைத்ததென்ன ஏவல்தனைச்சொல்லுமென்றே
உன்னையழைத்ததுதா னொருகருமமுண்டதுகேள். (௬௮௫)

ஆதமகன்காணும் அருமநபிமுகம்மதிவர்
பாதம்பணிந்தவர்க்குப் பாவந்தொலைந்துவிடும். (௬௮௬)

சதுர்வேதமோதும் தமீமன்சாரிகாணிவரை
மதினாநகரிலேகொடுபோய் விட்டுவரவேண்டுமென்றாள். (௬௮௭)

விருத்தம்.

அம்மொழிகேட்கித்தேவன் சஞ்சிவாய்புதைத்துச்சொல்லு
மெம்மைநீரேவலாலிங் கென்குறைகலைதீர்ந்தே
னம்மொழிதவறுவல்லனை முயர்மதினாவில்விட்டு
செம்மையாய்வருவேனென்ற செய்திகேட்டரசிசொல்வாள். (௬௮௮)

பதனமாயிவரைத்தோளிற் பாங்குடனேற்றிக்கொண்டு
விதனமேவாரவண்ணம் விண்ணிடைபுகுந்துபோந்து
சுதனமாய்த்தமீமன்சாரி தம்மையேநான்குநாளின்
மதினமாநகரில்விட்டு வாவெனமடவாள்சொன்னாள். (௬௮௯)

(வசனம்.) அப்போது தேவுசொல்லும் நான் நான்குநாளைக்குள்ளே மதினத்திற்குப்போய்வரக் கூடாதென்னக் குடலமெத்த மெலிந்திருக்குதெட்டுநாளையிற் கொண்டுபோய்விட்டுவருகிறேன் என்றதுகேட்டிராஜகுமாரத்தி சீந்சினந்து வெகுகோபங்கொண் டென்பேச்சைத்தட்டிப்பேசுகிறதென்னவென்றாள் அப்போதே பயப்பட்டுநடுநடுங்கி நான்குநாளையிலேயே கொண்டுபோய் விட்டுவருகிறேனென்ற தப்போதெனக்கு ராஜகுமாரத்தி ஒட்டிபனங்கள் கனிவர்க்கங்களெல்லாங் கொண்டுவந்து பசியாம்பித் தேவின்கழுத்தி லென்னையேற்றிச் ச[illegible]யனுப்பினாள் அப்போதே யென்னை யாகாசத்திற்கொண்டு பறந்ததென்றவாறு.

கண்ணிகள்.

ஆகாசமீதெழுந்தக் கடுகநெடுந்தூரம்
மேகாசனம்பரவி வியனுய[illegible]ருகயிலே. (௬௯௦)

வஞ்சன்கசடன் மாபாவி[illegible]கவி
நெஞ்சில்வினைநினைந்து நெடுந்தூரமேகிப்பின்னர். (௬௯௧)

மண்ணிலிறங்கித்தேவு மயங்கிகிடந்ததுவே
மண்ணில்வருமுனக்கு மயக்கம்வந்தகாரியத்தை. (௬௯௨)

நில்லணியுமாயென்னுடனே நிகழ்த்தினேனேயுரைத்தேன்
அல்லாவேதம்மீமே யதிவாலுயர்ந்தவரே. (௬௯௩)

ஆதம்வழியில்வந்த அலநபிதோழரேகேள்
மாதமொருக்கால் வயிற்றுவலியுண்டெனக்கு. (௬௯௪)

அந்தநோயின்றெனக்கிங் கந்தரமாய்வந்ததுகாண்
இந்தநோய்தீர்வதற்கிங் கேதுமறியீரோ. (௬௯௫)

ஏதுமறியேனுன் எம்பிரான்றன்னையல்லால்
ஆதமக்களாலிங்ஙனே யாவதொன்றுமில்லையென்றார். (௬௰௬)

வே[illegible]னைகள்பாரமென்றன் மேனியயருதகாவன்
க[illegible]டைத்துக்கல்புதைந்து கால்சலைடைகொள்ளுதில்லை. (௬௰௭)

என்செய்வேன்தம்பீமே யிடைவழியில்வந்தவினை
உன்செயலோஎன்செயலோ வுடையோன்செயல்காணும். (௬௰௮)

எந்தவகையாலு மென்னைமுமக்கேன்காணும்
உந்தன்மன்னமாமதிறு லூரிற்கொடுபோய்விடுவேன். (௬௰௯)

சந்தாபமில்லையிது தம்பீயேநீர்கேளும்
எந்தன்பி[illegible]ர்ந்திங் கிதமாகவேண்டுமென்றால். (௭௰)

உந்தன் திருவா[illegible]தன்னை யுவந்தெனக்கென்கையிலிட்டால்
எ[illegible]கனையும்பிணியு மிந்நேரமேதீரும். (௭௰௧)

உந்தனைத்தானிங்கெடுத் தூவப்பாக்கத்தான்கொடுபோய்
அந்தமதிலூ ரங்குகொடுபோய்விடுவேன். (௭௰௨)

என்றந்தத்தேவுசொல்ல விதுமெய்யெனநினைந்து
நன்றியுடனாழிதன்னை நான்கழற்றியேகொடுத்தேன். (௭௰௩)

திருவாழியைவாங்கிச் சிறுவிரலிற்போட்டதம்பின்
னொருநாழிகைத்தூர மோடிச்சந்தோஷமுடன். (௭௰௪)

ஆழிகொடுத்தபின்ன ராகாதமூதேவி
தோளிலிருந்தவென்னைத் தூக்கியெறிந்ததுவே. (௭௰௫)

தூக்கியெறிந்துவிட்டுத் துசுமன்போற்போனபின்ன
ரேக்க[illegible]க்கங் கெல்லாமுஞானி[illegible]யே. (௭௰௬)

மன[illegible]ருந்து மயக்கமிகவாகிக்
கல்லணிருல்[illegible]நாவுலர்ந்து காதடைத்துமூச்சன்றியே. (௭௰௭)

ஒன்றுந்தெரியாம லுணர்வழிந்துநான்கிடந்தேன்
ஒன்றைச்சாமமங்க னுஜாரில்லாதேகிடந்தேன். (௭௰௮)

விருத்தம்.

விண்ணிலேபோனசீவன் மீண்டு[illegible]பாருந்துமாறு
[illegible]ங்காடாய[illegible]னவலி[illegible]ரமென்றே
[illegible]லேகி[illegible]ந்தெழுந்து மனதிலெவ்வல்லோன்றன்னை
[illegible]யமாகவெண்[illegible] நெடுகிலே விறைவன்றன்னால். (௭௰௯)

நெடுகிலேவிட்டுவிட்டே கிகரில்லாவருவினாலே
கடுகியேகிபுலாநோக்கிக் கானகமடவிசார்ந்தேன்
அடிகள்நொப்பளமேகொள்ள வந்தரயலைமுன்றேற்ற
நடநடநடெனவோடி நாடியேயெருக்காலே. (௮௰)

(வசனம்) இப்படி யந்தவனத்திலாடேகுடியாய் நடந்து மலையடிவார
த்தில் வரும்போது கானையாறுகளும் சோலைகளும் காடுகளு மிருக்கக்
கண்டனன் அக்காட்டில் யானை கரடி புலி சிங்கம் காண்டாமிருகம் கல

ஞாரி காமி ஆங்ஃட சண்டபட்சி இதுமுதலனேகதுஷ்டமிருகங்க ளென்னைக்கண் டொன்றுஞ்செய்யாமற் பார்த்துநின்று திரும்பிக் காவகளிலோடிப்போயின தங்ககாவுகளை நீக்கி மலைச்சாரில்வந்து மலையை நோக்கி எதிட்டுப்பார்த்தேனப்பா அந்தமலை வானத்தைத் தொடுகின்றதுபோ லிருந்தன அம்மலைபுச்சின் மேலே யொருகழுத்தைத் தேவிருந்தன அந்தத் தேனைக்கண்டு பயந்தேனென்றவாறு.

கண்ணிகள்.

கண்டுபயந்தென்றன் கைகால்நடுக்கமுற்றுங்
கொன்றுந்தெரியாம லோவியம்போலேயிருந்தேன். (௭௰௧)

பண்டுவிதியின் பயனோ பாவியெந்தன் பாவமதோ
இன்றுதானிம்மலையே லேறினேனுமானக்கால். (௭௰௨)

கட்டிலைத்தேவுநம் மைச் சும்மாவிட மாட்டாதே
மட்டுயிரை மாய்க்குமென மதிவிதியையெண்ணமுற்றே. (௭௰௩)

மலையினிற்பாய்ந்துயிரை மாய்க்கலாமென் றன்னித்தான்
பெலமோடுநின்றங்ஙனே பின்னிடைந்தேன்பாய்வதற்கு. (௭௰௪)

அப்போதிறைவருளா லண்டத்திலோர்சத்தமுண்டாய்த்
தப்பாதசசத்தத்தொடுந் தானங்கொருபறவை. (௭௰௫)

விருத்தம்.

வானகத்திருந்தக்குற்ற பறவையப்பருளினாலே
யீனையேகெருடன்றுவி லேலையிற்றூக்குமாறாய்க்
கானையாறடவியங்கார் கருமலைகடந்தப்பாலே
மாநிலமீதற்போட்டு மறைந்தனபட்சியம்மா. (௭௰௬)

மலைபடிவாரந்தன்னிற் போட்ட துமறைந்தபின்னர்
தலைத்துகிறப்பனோடு ஜடத்தினிற்பலமதின்றி
யலைகடற்றுரும்புபோல வசைந்தசைந்திடப்பிட்டு
நிலையொடு[illegible]மெங்கோர் விருட்சத்தினிழலிலார்கால். (௭௰௭)

(வசனம்.) அந்த விருட்சத்தி னபரமேகத்தை யளாவிநிம் அதின் விசாலங் கண்ணலிற் கெட்டாமையுமா யிருந்தன அம்மரத்தின் கீழ் இருந்துகொண் டேறிட்டுப் ப[illegible]த்தே னென்றவாறு.

வெண்பா.

பார்த்தேனுயரப் பன்மரத்தின்சந்துமலைச்
சேர்த்திருக்கக்கண்டே னடுக்கமுற்று—காற்றிசையுஞ்
சக்தி[illegible]
பங்கிருக்கக்கண்டே னயர்ந்து. (௭௰௮)

ஆரார்தானிவழிக்கக் கண்டொல்லாமோர்மயக்காய்ப்
பயந்தனிவழி[illegible] பார்த்தவெளி—யுயர்ந்த
பெருமலைபோலேயிருந்தான பேராயக்காலந்
தகுமிலிருந்தேனியான். (௭௰௯)

(வசனம்.) அப்போதந்தப்பாசபதத்தைதிகாளவிருட்சத்தின்மேலே தஜ்ஜாலே நாற்பதினுயிரஞ் சங்கிலிகொண்டு கட்டியிருக்கின்றன அந்தத் தஜ்ஜாலென்னைக்கண்டு யாண்டவன் நீயாரென்றுகேட்டானென்றவாறு.

கண்ணிகள்.

சோதிமுனிவுபெற்ற தசுமன்மொழிகேட்டுடனே
ஆதமகனுன் அருமதரினும்மத்தென்பேர். (௭௨௰)

தம்மீமன்சாரியென்றேன் தான்கேட்டக்கீதுரைப்பான்
செம்மல்முகம்மதரின் திருக்காலந்தான்மீபாச்சோ. (௭௨௧)

என்றனதுகேட்டக் கெழிலார்முகம்மதரின்
சன்றூர்காலந்திரந்து நல்லபூடக்கர்காலம். (௭௨௨)

சென்றமறுகத்தாப் திருக்காலமாகுமின்னர்
ளென்றுரைக்கத்தச்சா லிளாந்தாக்ரமித்துரைத்தான். (௭௨௩)

இகத்திலென்கால மிப்போதுதானுச்சுப்
பகைத்தவனாவெஸ்வனெனப் பாக்ஷபறைந்தீதுரைத்தான். (௭௨௪)

ஆதமகனே யருமதரினும்மதியே
வேதமதிலுள்ள விசளமொன்றுசொல்லுகிறேன். (௭௨௫)

புவிக்குனடக்குகின்ற பிரகாரம்புகலுகிறேன்
நபிக்குப்பிற்காலமிந்த நாற்பதடையாளமுண்டு. (௭௨௬)

அந்தவடையாளங்களை யருள்வேனுன்கேளுமென்றான்
சிந்தனையோடங்கவனைச் செப்புகென்றேன் சொல்லலுற்றான். (உ௨௭)

அரசர்நெறிநடத்த[illegible] ஆலீம்கைக்கூல்கொள்வார்
மரபின்வழு[illegible] யார்க்கநெறிநடக்கார். (௭௨௮)

இறையேவலைத்தவிர்வா ரெத்தீங்களைப்பேணுர்
மறையநேர்நெறிநடப்பார் வஞ்சமேநெஞ்சில்வைப்பார். (௭௨௯)

பொய்யும்புறமும் புலைகொலையுந்தானுவப்பார்
மெய்யுமறமுமி[illegible] விசுவாசமுந்நெகிழ்வார். (௭௩௰)

துய்[illegible]வனேவல்தனைச் சுற்றமுடை[illegible]பற்றியிரார்
[illegible]வல்வழுக எள்புவையாரம்[illegible]யார். (௭௩௧)

[illegible]ரக்கா ரதையல்கள்சொற்கேட்பார்
[illegible]றை யன்புவைத்தேயாசரியார். (௭௩௨)

அரிவையரைசற்புருட ரதபுசெற்வருத்தார்
புருஷர்தமைமாதர் போற்றியேசங்கைசெய்யார். (௨௩௩)

மூதையதை வறுவார்மறைபின் மூதரிவைத்தானிகழ்வார்
குதிகியித்தம்பார்ப்பார்கள் கோட்குச்சொனிபகர்வார். (௭௩௪)

கோதையரக்காடிதனிற் கொள்ளவிற்கக்கூசார்கள்
மாதர்பரியேறி வழிபயணம்போவார்கள். (௭௩௫)

வெள்ளிதிக்கட்பள்ளியெய்தி விசித்தோனைத்தான்வணக்கார்
ஒள்ளியோர்மேலோ ருலமாக்களைநெகிழ்வார். (௭௩௬)

மஞ்சார்ந்திடையுடைய முகம்மதிரின் மார்க்கத்தவர்
கஞ்சாவெறிமயக்குங் கள்ளரக்குங்கொள்வார்கள். (எகூஎ)

வாதுசொல்லிப்பந்தயங்கள் வைப்பார்மதிகேடாய்ச்
சூதுவந்துசொக்கட்டான் சேரவிளையாடுவார்கள் (எகூஅ)

அளவுதராசுகைக்கோலதனிற்களவுசெய்வார்
களவுசனுப்பொய்ச்சத்தியங் கைவசக்குச்செய்வார்கள். (எகூகூ)

வைத்ததமானங்குலைப்பார் வழக்கோரஞ்சொல்வார்கள்
மெய்த்தவங்கள்தன்னைவிட்டு மேவாப்பலிசைகொள்வார். (எசமி)

உற்றவடையாளமிதென் குள்ளபடிசொல்லுகென்றான்
சற்றுமொளியாமற் சாற்றுகென்றான்மாபாவி. (எசக)

கோபமாய்க்கண்சிவந்த குறிகேடன்கேட்டவுடன்
ஆவிதடுமாறியனலின்மெழுகாகி. (எசஉ)

தப்பில்லையொன்றுஞ் சரியாய்நடக்குதென்றேன்
இப்போதென்காலமாச் சென்றேலலங்கரித்தான். (எசங)

விருத்தம்.

அலங்கரித்தவன்வானேழு மதிர்ந்திடவசனிபோல
நிலங்களேழதிரவாரி நீரெல்லாஞ்சுவறவேருத்
தலக்கிடுகிடென்னத்தைத்த சங்கிலிநெரிக்கத்தச்சால்
விலங்கெல்லாந்துளதாக்கி வெளியினிற்புறப்பட்டானே. (எசச)

வெளியிலில்வரும்போதென்றன் மெய்நடுநடுக்கமுற்றுப்
பழியிவன்செய்வானென்னைப் பாதவித்தருகிவாடி
பொளிவினிலொளிவாமாகி யொருவனையுள்ளத்தன்[illegible]
யழிவில்லாப்பொருளேயுன்றனடைக்கலநானென்றேனே. (எசரு)

(வசனம்) இப்படி யாண்டவனைப்புகழ்ந்து முறைஜாத்துச்செய்கேனப்போ தன்னுமுன்னறியும் நாயனருளால் அங்கோர்க்கதமுண்டாயிற் றதலேறுமாகாசத்திலிருந் தோர்பறவை யதிசீக்கிரத்தில்வந்[illegible] கெருடன் மேயுங்கோழிக்குஞ்சை யாராஞ்சுவதுபோலத் [illegible] பறவையானது இறகினு ஸணைந்[illegible] க்கிக்கொண்டு[illegible] காயலைப் பொதும்பிற்போட்டு[illegible] நகாவெல்லாம்[illegible] த்துப்போட்டு மூதேவி நீ வெளியில்வா இன்றாம[illegible] தென்று சொல்லிப் பறவையாகாசமார்க்கமாகப் போ[illegible]

கண்ணிகள்.

வர்னேக்கியப்பறவை வாகப்போயினபின்
நானேவெழுந்துநாயனையுந்தன்புகழ்ந்து. (எசசு)

இறைவேயுன்காவலென்னா ஏகினேனவிடம்விட்டுத்
தரையில்நடந்து வருங்வழியில். (எசஎ)

வரும்வழியிலேயுயர்ந்த மலையும்பல்மரமும்
அருவிகளுமாலைகளு மடைத்திருக்கும்பட்சிகளும். (எசஅ)

சேனமுதலாம்பறவை சேர்ந்தங்கிசைதொனிப்ப
கானமுற்றசந்தகிலு நன்றாகக்கண்டேனே. (௭௪௯)
இப்படிப்பதினைந்துதினம் யானடந்திங்காகயிலே
யொப்பிலாதோர்மரத்தா லுயர்சோலைகண்டேனே. (௭௫௰)
அண்ணார்ந்துபார்த்தா லதினிலைகள்பூகாய்கள்
கண்ணாரந்ததல்லாமற் கண்டதில்லையென்விழியில். (௭௫௧)
உதிர்ந்தவிலையகல மொன்பதுபத்துண்டுமுழம்
அதிர்ந்தமரச்சோலைக்குள்ளே யாதித்தனைக்கண்டதில்லை. (௭௫௨)
இருள்விட்டமரச்சோலையதி லெண்ணியெண்ணியுண்ணடுங்கி
வெருண்டுமருண்டு வெகுதூரம்போமளவில். (௭௫௩)
இடிமுழக்கம்போல விரைச்சலொன்றுதான்கேட்டேன்
அடிகள்தடுமாறி யஞ்சிப்பயந்தெண்ணினனே. (௭௫௪)
குத்திரங்கள்செய்யுங் கொடும்பாவித்தேவுகளோ
சத்திரக்கமில்லாத சண்டாளப்பேயதுவோ. (௭௫௫)
என்றுநடுக்கமுற்றங் கென்கால்நடையயர்ந்தே
யொன்றுமுறையாம லூமனைப்போற்கண்ணயர்ந்தேன். (௭௫௬)
நித்திரைநானங்க ணிலத்திலேகொள்ளையிலே
முத்திரைசேர்வள்ளல் முகம்மதுற்றசூல்பொருட்டால். (௭௫௭)
என்கனவிலென்விழியி லிருவர்வந்துதோன்றினர்கள்
வன்ககனர்போலவந்தோர் வடிவார்சலாஞ்சொல்லினர். (௭௫௮)
சொன்னசலாத்திற்குப்பிரத்தி சொல்லிவெகுதாழ்ச்சிசெய்தேன்
இந்நாளளவுநீ ரேழாள்பட்டசளம். (௭௫௯)
முன்னூழிறைவன் [illegible]விதிதப்பாது
அந்நாளின்[illegible]மைத்நபிமார்களிலே. (௭௬௰)
ஆதநபிமுதல வராவர்கப்பட்டசெய்தி
ஓதும்மறைதனிலே யுற்றுணர்ந்துபார்க்கிலேயோ. (௭௬௧)
காட்சிபவமான கடவுள்பொருட்டாலினிநீர்
மீட்சியுண்டா[illegible]முடைய விடுமனையாளும். (௭௬௨)
சிக்கிர[illegible]டு தெரிசிக்கநாள்வந்ததென்றார்
[illegible]தக்க மாதிகிருபையினால். (௭௬௩)
[illegible]கனவிற் [illegible]காக்கண்[illegible]வா
[illegible]ந்து [illegible]ரிக்குத்தான்விழித்து. (௭௬௪)
[illegible]சனந்தேதவிவ்வினை தூராச்சேனநினைந்தே
யச்சமொன்றுமில்லாம லவிடம்விட்டுத்தாவடந்தேன். (௭௬௫)
காட்டினிருளிற் [illegible]
தேட்டமுடன்போம்பொழுது சேயரிவெளியாச்சே. (௭௬௬)
வெளிமீதிலவனதற்பின் வெம்பொன்றுதோற்றியதே
ஒளிவுபளிங்கிமலை யுயரம்வெகுபாரம். (௭௬௭)
அம்மலையருகே யாறொன்றுதோற்றியதே
சிந்ததிக்கரையில் விரையநடந்தேனே. (௭௬௮)

கடந்தேனதிக்கையில் நான்வாறபோதினிலே
அடர்ந்தோர்பறவை யரியபெரும்பாரமதாய். (௭௬௯)
மிச்சமழகாகநின்று விளம்பிற்றதென்னோடு
மச்சப்படாதிருங்கா ளறகாரும்ஆதமியே. (௭௭௰)
தம்மீமன்சாரியரே சலாமுமக்கென்றப்பறவை
செம்மையுரைத்ததுகேட்டுச் செப்புகின்றவென்றனுடல். (௭௭௧)
எல்சாலுடம்பு மெனையறியாதேமயங்கி
மல்ருதுநின்றேன் மதியானதும்மழிந்து. (௭௭௨)
கொஞ்சநேரத்திற் குள்ளேநினைவெனக்குத்
தஞ்சமிறையருளாற் றன்வந்துதோற்றிலதே. (௭௭௩)
அச்சமதுதீர்ந்தே யதைப்பார்த்தங்கேதுசொல்லேன்
யச்சமார்பக்கிகீயார் பகராயெனக்கேட்டேன். (௭௭௪)
அப்போதுபட்சிசொல்லு மாலமதிலுண்டான
மெய்ப்பானபட்சிக்கெல்லா மேலரசனுவெனவே. (௭௭௫)
சொல்லியென்றுமமது சொல்லுகிறேனீர்கேளும்
கல்லறிரவேதுளக்குங் கண்டவன்னப்பட்சியென்பேர். (௭௭௬)
அல்லாவெனக்குக் களித்தயஸீனகேளும்
எல்லாப்பறவையினு மென்னைப்பெரும்படைப்பாய். (௭௭௭)
முன்னோன்படைத்தான் மொழியவொல்லுதென்வலிமை
சொன்னாலுமென்னும் சொல்லமுடியாதுகண்டீர். (௭௭௮)
எழுகடலுக்கு ளிறங்கினேனாகில்
நீளுஞ்சமுத்திரத்தை நிமைக்குமுன்னேதான்கலக்கி. (௭௭௯)
மத்தின்மயிரதுபோல் வாறைதப்படுத்திடுவேன்
கத்தன்மனக்கஞ்சிக் கலக்[illegible]வலியிழந்தேன். (௭௮௰)
ஊணிப்பதெல்லாமிழந்தின் [illegible]கொடுங்கிமயங்கிமனம்
சாணிப்பயந்து நடுங்கியவன்கட்டளைக்கு. (௭௮௧)
தானிங்கிருக்கிறேன் தமீமேபுவியாசைவிட்டு
மேனயமாயிங்குவந்த வியப்பென்னதாலுரையும். (௭௮௨)
ஆதமக்களில்விட்த்தை யாரேனுங்கண்டதில்லை
வேதமும்றவாசகரோ விளம்புநீரொன் [illegible]ரைத்த. (௭௮௩)
பறவைமொழிகேட்டுப் [illegible]கைகாயா[illegible]ரைத்தேன்
இறைவன[illegible] [illegible]றகுல்முகம்மது[illegible]. (௭௮௪)
நல்லவும்மத்துகளில் நானுமொருவும்மத்தென்றேன்
சொல்லியபினும்முறையை சொன்னேனமேதனையும். (௭௮௫)
என்றுபறவை யிடம்புரியில்யாலுரைத்தேன்
வென்றியிறைவன்படைத்த மேன்மையடிபார்களிலே. (௭௮௬)
இம்மையிறாப்ததப்ப [illegible]க்கிட்டபெயர்
தமீமன்சாரியெனச் சாற்றும்பின்மொழிந்தேன், (௭௮௭)
அதிருக்கிதாலேயு மறுதுலேப்பாமேம்
சீரமெனிவுந் தனித்தவரலாறும், (௭௮௮)

பேணிநடந்த பெருமைபொன்றுமென்னும
லாணின்றிறமு மழகுங்குடிப்போக்கும். (௭௮௯)
இவ்வளவுநாட்கழித்தே னென்விதியைநானறியேன்
எவ்வ[illegible]வாறுலு மேவலுக்குத்தாழ்ச்சிசெய்தால். (௭௯௦)
உள்ளபடிக்கிக் குடையோன்கிருபைசெய்வான்
வள்ளலிறையெனக்கு வழங்கும்படிநடப்பேன். (௭௯௧)
இப்படியேபட்சியொடும் யான்பேசிருக்கையிலே
கற்பனையாலக்கொருவர் கண்ணெதிரேவந்தார். (௭௯௨)
சொர்ணம்போன்மேனி துலங்குமிகுமழகாய்
வன்னப்பொற்முடி வளர்ந்துநரைத்தவராய். (௭௯௩)
கண்டேன்களிகூர்ந்தேன் கண்ணுறைநதவா[illegible]வாய்
விண்டாரென்பேரைச்சொல்லி விரைந்தேசலாமுரைத்தார். (௭௯௪)
உரைத்தசலாமுக்குநா னுத்தாரஞ்சொல்லியபின்
களைத்தனுடனென்னைக் கட்டித்தழுவிக்கொண்டு. (௭௯௫)
தம்பீமன்சாரியேநீர் தாரணியிலாசைவிட்டு
தம்மாலவேண்டமட்டுஞ் சங்கடங்கள்பட்டீரே. (௭௯௬)
அல்லாவருள்பெருகு மகுமதும்நபியுலும்மத்தில்
நல்லாரேநீர்கேளு நானுமொருத்தனென்றார். (௭௯௭)
சொன்னபின்னர்நுந்தம்பெயர் சொல்லுமென்றுநானுரைத்தேன்
மன்னயத்திலான நபிமார்கள்தங்களிலே. (௭௯௮)
இதுறப்பயகாம்பரெனக் கிருபையுடனேமொழிந்தார்
பிதிரும்வகைகளெல்லாம் பேசுமென்றுயான்சொல்லினேன். (௭௯௯)
தேவுகொடுபோனதுவுந் தேசமிழந்ததுவும்
காவுகாய்பிருபத்தி காட்சியுமங்கானதுவும். (௮௱)
எழுவருட பெறிந்பிருபத்தியிடம்
தாழுவொன்றில்லாமற் றுடங்கிருக்கையிலே. (௮௱௧)
தன்மனைவிபிள்ளைகளைத் தாலிணைந்தழுததுவும்
அன்னதைப்பிருபத்தி யாள்விட்டுசாவியென்றன். (௮௱௨)
வட்ட[illegible]மெல்லாங்கேட்டு மனதங்கிரக்கமுற்று
ஆட்[illegible]ன்னதேவொன்றினை [illegible]த்து செய்திசொல்லி. (௮௱௩)
[illegible]வாய்[illegible]றுவி[illegible]கடுகவேதம்மைக்கொண்டு
[illegible]வர்கள்[illegible]வரக் கருத்தாயுரைத்ததுவும். (௮௱௪)
அனுப்புமிர்போதி லாதிஇசுமானதொன்றை
மனுப்பிறவியேநீர் மனதிலவதரித்து. (௮௱௫)
மறக்காமலேயதினல் மாற்றமொன்றம்வாராதேன்
றுறைப்பாகச்சொன்ன வுண்மையுள்ளவுத்திரவும். (௮௱௬)
தேவுதம்மைக்கொண்டு சேணிற்பறந்ததுவும்
கோபுக்காவெம்பிருக்கு குதிகப்பித்தேகமுற்றதுவும். (௮௱௭)
வானம்வரைதேவுசெல்ல வாணோர்மிகச்சினந்து
வேனலுறுகொள்ளிதனை விட்டெறியப்பட்டதுவும். (௮௱௮)

பட்டபொழுதத்தேவு பதைத்துவிழுந்ததுவும்
இட்டெனவேகைகயைவிட்டுத் தேவுபறந்ததுவும். (ஆ௱கூ)
செயித்தானகன்றதம்பின் சிந்தைதடுமாறி
யயர்த்திமிகவாகி யாவிபயக்கொடுங்கி. (ஆ௱௰)
தேறிநடந்ததுவுந் திருநகர்விட்டன்றளவும்
நேரிட்டசெய்கையெல்லாம் நிகழ்த்தவவர்கேட்டு. (ஆ௱௰க)
சலித்துமுகம்வாடிச் சஞ்சலமாயென்றனையே
நலித்தவொன்றுமில்லையினி நான்சொல்லக்கேளுமென்று. (ஆ௱௰உ)
செப்பினார்நல்ல திருவார்கிலுறுநபி
இப்படித்தான்றுன்புற்றோ ரெண்ணவொண்ணாப்பேர்களுண்டும். ()
எப்படித்தாறுறு முழுதிவிதிவிடுமோ
ஒப்பில்லாநாய னுதவியதனாலே. (ஆ௱௰ச)
ஒன்றுக்குமஞ்சாதினி நீருடையோன்கிருபைசெய்வான்
இன்றைக்குநாளைக்குள்ளே யேகுவீர்நும்மூரில் (ஆ௱௰ரு)
என்றுநபிசொன்னதுகேட் டிருபதத்திலேவிழுந்து
அன்றுநான்கண்டகளு வாதிகிருபைசெய்தான். (ஆ௱௰சு)
இனிமேலினைகூறின் கெம்மைத்தொடராமற்
றனியோனிடத்திற் றவங்கேட்டுக்கொள்ளுமென்றும். (ஆ௱௰எ)
உம்மைத்தெரிசித்ததிக்கென் னுள்வினைகள் தீர்ந்ததென்றும்
செம்மைக்குரியதவச் சிந்தைகளிகூர்ந்தேனே. (ஆ௱௰அ)

விருத்தம்.

வரிசைசேர்நபியைப்போற்றி வான்களுக்குரியகோவே
பிரிசமாய்மனத்தைத்தேற்றும் பிரபலமிகுந்தகாவே
வருஷமேழ்நாளிளைம்பான் பட்டிடும்வருத்தமின்ன
பரிசெனச்சொல்லவொண்ணாப் படும்விதிப்பயனேகண்டீர். (ஆ௱௰கூ)

(வசனம்.) இவ்விதமாகக் கிலுறுநபியும் நானும் பேசிக்கொண்டு நி ற்கின்றநேரத்தில் பட்சிசொல்லியது கிலுறு அலைகிஸ்ஸலாமே தமீம ன்சாரியாரிருக்குநாடு எந்தநாடென்றுகேட்டது அப்போது கிலுறுநபி சொன்னார்கள் அல்லாகுத்தஆலா வருட்சேர்ந்திருக்கும் மக்கமதீனமெ ன்றார்கள் அப்போது பட்சிகேட்டது மக்கமதீன மிந்லிருந்தெவ்வள வு தொலையிருக்குதென்று சொல்லக் கிலுறுநபிசொன்னார்கள் [illegible] றுவருஷத்தழிப்பாடென்றார்கள் அப்போது பட்சிஇருநா [illegible] வழிகையும் எத்தனைவருஷத்திற்கொண்டுபோய் விடுவீர்களென்று கே ட்டது அப்போது கிலுறு அலைகிஸ்ஸலாம்சொன்னார்கள் [illegible] வருஷ த்திற்கொண்டுபோய்விடுவேனென்றார்கள் அப்போதுபட்சி நான் [illegible] வருஷத்திற்கொண்டுபோய் விடுவேனென்றது இப்படி இருவருமிகலி க்கொண்டு பேசினதில் ஒருநாழிகைக்குள்ளே நான் கொண்டுபோய்வி டுவேனென்று கிலுறுநபிசொன்னார்கள் அப்போது பட்சி கண்மூடிமுழி க்குமுன்னே நான் கொண்டுபோய்விடுவேனென்றது அப்போது கிலுறு அலைகிஸ்ஸலாம் பட்சியைப்பார்த்து அல்லாகுத்தஆலா வுனக்குமுகுமு

த்துச்செய்வா ளப்படியே கொண்டுபோய் விட்டுவாவென்றுசொன்னார்கள் பின் பென்னைப்பார்த்து கிலுறுநபிசொன்னார்கள் தம்மீமன்சாரியாரே உம்முடைய வூருக்குப்போமென்றார்கள் அப்போது நான் மலைவாச[illegible]றேன் அதுபார்த்து நபிசொன்னார்கள் தம்மீமே நீர் லாயிலாக இல்ல[illegible]லாகு முகம்மதுற்ற சூலுல்லாகியென்று சொல்லிக்கொண்டு அங்க[illegible]ட்சிசொல்லை நம்பிக்கொள்ளுமென் றென்னைத்தழுவிக் கட்டிய[illegible]த்து சலாம்சொல்லிக் கையைப்பிடித்துத் தூக்கிப் பட்சியுடையமுதுகிலேற்றினார்கள் அப்போது பட்சி தம்மீமன்சாரியாரே கண்ணைமூடுமென்றுசொன்னது கண்ணை நான்மூடினேன் பின்பு கண்ணைமுழியுமென்றது முழித்தேன் அப்போ தென்வீட்டு முற்றத்துவெளியிலேயிறங்கினேன் பின் பென்னுடைய மனையாளைக்கண்டே னென்றவாறு.

கண்ணிகள்.

மனையாளைக்கண்டேனே மனதிற்களித்தேனவளம்
பென்னையாரென்னைப்பார்த்தா ளேங்கித்திடுக்கமுற்றே. (௮௨௰)

பயந்துமிகநடுங்கிப் பகர்ந்தாளென்னைப்பார்த்துக்
கயந்தமனதுடைய கரும்பூகத்தேவேநீ. (௮௨௧)

மரியாதையில்லாதென் மனையில்வாத்தான்றகுமோ
சரியாவிதென்றுரைத்தாள் சாற்றினேனுன்கேட்டு. (௮௨௨)

என்றன்மனைதனிலே ஏகினேனுன்தானே
உன்றன்புருடனென வோதினேனென்பெயரை. (௮௨௩)

சொன்னவுடன்பயந்து தோகையென்னைப்பார்த்துக்
கன்னமிடவந்தவனோ கள்ளனோபோடாநீ. (௮௨௪)

ஏழாண்டாயிற்றென்புருட னேகினொன்னைவிட்டு
நாளாண்டிலோ ருட்கழித்தேனின்றிரவு. (௮௨௫)

திறத்தாருமறுகத்தாப் திருவார்மனமகிழ்ந்து
அறமியொருவருக்கிங் கவளொழுதியேகொடுத்தார். (௮௨௬)

செவ்வேயவர்முகத்திற் றிறமாய்விழிக்கவில்லை
யொவ்வாதவார்த்[illegible]சொன்னு யுன்டோவிதென்னபழி. (௮௨௭)

என்றுரைத்தாள்[illegible]டன் கேதோவெளைப்பதறி
அ[illegible]றுமனைஇரு[illegible]மறமிவெளியில்வந்தே. (௮௨௮)

[illegible]தடாநீயா ரென்மனையாள்தன்னுடனே
வா[illegible]பேசுகிறாய் வம்பாவென்றெனப்போது. (௮௨௯)

கோபம்பெ[illegible]க்காமல் குதித்தவரின்முன்பாய்ந்து
தாவிப்பிடி[illegible]இழுத்துச் சண்டைசெய்தேனப்போது. (௮௩௰)

வந்துவிலக்கினார் மகாஜனங்களெல்லோரும்
மந்திரங்களாயத்துகள் மனதிற்றரிப்பாரும். (௮௩௧)

அப்புறமேயின்றன் கவர்கூப்பிட்டிதுசொல்வார்
தப்பான சொல்லுரைத்துச் சண்டைசெய்யவேண்டாங்காலர். (௮௩௨)

உந்தம்மனையென்றுசொன்னு லொப்புவர்களோவூரார்
இந்தஇராத்தான்விடிந்தால் ஏந்தலுமறுகத்தாப். (௮௩௩)

சொன்னபடி கேளுமென்று சொல்லிவெளிப்படுத்திப்
பின்னொருமாடமதிற் பிரியாதேவிட்டடைத்தார். (௮௩௪)
அறபிதனையழைத்தங் கவரையொருமாடமதிற்
றிறவியர்களெல்லோருஞ் சேர்த்தாரிருவரையும். (௮௩௫)
மானாளைத்தம்மனையில வருந்தாதிருத்திப்பின்னர்
போனாரவர்மனையிற் பொழுதுவிடிந்ததுவே. (௮௩௬)
பொழுதுவிடிந்ததற்பின் புதுமையென்றேயூர்ச்சனங்கள்
பழுதுபடுஞ்சடையும் பாரகஞ்சாரும். (௮௩௭)
கண்டுபயந்து கதவடைத்துக்கொள்வாரும்
தண்டெடுத்துவாளெடுத்துத் தான்வந்துநிற்பாரும். (௮௩௮)
மாடந்தனைத்திறந்து வாருமென்றுதானழைத்தார்
வேடந்தனைக்கண்டு வெருண்டோடிநிற்பாரும். (௮௩௯)
வெளியிற்புறப்பட்டவென்னின் வேஷந்தனைப்பார்த்துத்
தெளியாமல்முன்னடத்திச் சென்றார்களெல்லோரும். (௮௪௰)
அழியாப்பொருளான ஆதிஇறையினால்
வழிகூடியேநடந்தேன் வாரிக்கடற்போற்சூழ்ந்தார். (௮௪௧)
பாராளும்வேந்தர் பகரியகேசரியாம்
ஊராளும்வள்ள லுமறுகத்தாபின்பாதம். (௮௪௨)
கண்டேன்களிகூர்ந்தேன் கனகமனமகிழ்ந்தேன்
கொண்டேன்வெகுபிரியங் கொண்டாடித்தானடந்தேன். (௮௪௩)
நாற்பத்தீராயிரவர் நாற்றிசையுஞ் சூழ்ந்திருக்கச்
சாற்பத்தராஜாக்கள் சரணந்தொழுதுநிற்க. (௮௪௪)
உதுமானுமற்ற வுவப்பானபேர்களெல்லாம்
சதுமாமறைபகர்ந்து தாமிருந்தாரவ்விடத்தில். (௮௪௫)
சென்றேனவர்களெல்லாந் திகைத்தாரெனைப்பார்த்தன்
குண்டானகூட்டமதி லொருத்தருமறியாமல். (௮௪௬)
தேவபரிஜின்னோ தெரியாதெனப்பகர்ந்தார்
காவபரிவேந்தர் சந்தாபமாய்நினைந்து. (௮௪௭)
எழுந்தார்நடந்தா ரேந்தலுமறுசர்
செழுந்தாமரைமுகத்துச் செல்வருமுகமையில். (௮௪௮)
வந்தாரிருந்தார் வடிவாருமாளிகையில்
நந்தாதசொல்லுடைய நாற்பத்திராயிரரும். (௮௪௯)
எல்லோருங்கூடி யிருக்கின்றாரவ்வேளை
நல்லானசித்தீகர் நாடியெனைப்பார்த்து. (௮௫௰)
எழுந்தெதிரில்வந்தி ரென்கரத்தைத்தான்பிடித்துக்
கொழுந்தியைக்கீரமில வெவ்விட்டுவித்தவைறதுமேபால். (௮௫௧)
வங்கக்குளிர்வென் றைகற்பிரியப்பாசச்
சங்கையுடனென்னைச் சிறிதுச்சலாமுரைத்தீர். (௮௫௨)
உம்முடைய பிள்ளையுடைபோனவிவினை
எம்பிரானுஞ்சொன்னமொழிக் கின்றுகண்டேனத்தாஜ்சி. (௮௫௩)

ஆயிலுறக்காரணத்தி னருமையினுக்சென்றுவி
போயிடினும்நான்மறவேன் புகமோரயெனவுரைத்தார். (௮௫௪)
இவ்விதமாய்த்தம்மீம னிப்புவியிற்பட்டசெய்தி
செவ்விதாலாய்ச்சொல்லத் திசேனர்களெல்லாங்கேட்டு. (௮௫௫)
சவிந்தார்கள்தங்கள்மனச் சந்தாபந்தான்தீர்ந்தார்
கடைக்காடேரிக்குங் கருணையனலான. (௮௫௬)
வள்ளலுமறகத்தாப் பனமகிழ்ந்தங்கிதுரைத்தார்
உள்ளபடிதப்பாநிவ் குடையோன்விதித்தவிதி. (௮௫௭)
கன்னியுமதுமனைக் காதலியாள்கற்பதுவும்
உன்னிமெய்யாரும்முடைய வுயர்வாரிருதயமும். (௮௫௮)
காணாதுவுலகிற் கண்டார்களும்மளவிற்
றேறுகசாரணக்க டோற்றரவுண்டானதெல்லாம். (௮௫௯)
கத்தனுமக்கிந்த கருணைநிகுமத்துகள்
பத்திமுத்தியாகவிறை பாவித்தான்கண்டீரோ. (௮௬௰)
வல்லவன்றன்சூழ்ச்சிதன்னை வாக்காலுரைக்கரிதென்
றில்லல்லாதன்னையும பேற்றியேவாழ்த்தினரோ. (௮௬௧)
வாழ்த்தினர்யார்கள் வருந்தினார்தம்பீமை
யாற்றினார்கூட்டத்தோ ரரதரித்திருத்தினரோ. (௮௬௨)
இருந்தார்தமீமனங்கே யெழிலாருமரசர்
வருந்தாதோரேவலனா வாவென்றழைத்துச்சொன்னர். (௮௬௩)
தமீமனிசாரீரோமங் தான்களையவுஸ்தாவை
சமீமாயழையுமென்றார் தாமழைத்துவந்தார்பின். (௮௬௪)
அக்கீருக்குந்தம்பீமி னரும்ரோமங்களையும்
பங்கமில்லாதேகளைந்து பகர்தாடியும்மொதுக்கி. (௮௬௫)
சுத்தப்படுத்தினுஸ்தா சொல்லரியவன்னமதாய்
மற்றங்குதம்மீமன் வரிசையாய்த்தானெழுந்து. (௮௬௬)
சுனைதனிலேமூழ்கித் துலங்கவுநப்பானதெல்லாம்
நனையமுழுகி நல்லவுடுப்புச்செய்துபின்னர். (௮௬௭)
ஏகன்றனையோர்மனதுப்பா யிரண்டிறக்அத்துத்தொழுது
மகிழ்தம்பீமன்சாரி வந்தார்அலியில்மனையில். (௮௬௮)

சந்தவிருத்தம்.

வந்தார்அம்மனைமீதினில் வல்லோனையினைந்தவ்
கைந்தாருமறதுமானலி யார்தம்மையும்வாழ்த்திச்
சந்தாபமதெல்லாமவர் தனைவிட்டொழியத்தான்
செந்தாமரைமலர்போன்முகந் தெளிவுற்றிருந்தனரோ. (௮௬௯)

கண்டார்தமீமன்சாரியைக் களித்தார்கையைப்பிடித்தே
கொண்டாடிநல்லசகாபிகள் குலத்தோர்முதல்யாரும்
விண்டாரதிஜயமென்னவே வெள்ளாடையுடனந்தே
அண்டாதுலகேழும்படைத் தோனைப்புகழ்ந்தாரே. (௮[illegible])

(வசனம்.) இப்படி உமறுகத்தாபு ராஜாமுதலான யாவரும் அல்லாவைப்புகழ்ந்து பின்பு உமறுகத்தாபு றலியல்லாகு அன்கவர்கள் உதுமானை யலியாரை யசுகாபிமார்களை அறூகுறைறூவவர்களை அப்பாசவர்களை அப்துற்றகுமானை மற்றும்பெயர்களையு மழைத்துக்கொண்டு தமீமன்சாரியாரோடும் அத்தமீமன்சாரியார் மனையிற்போயிருந்து சறகிலேயுண்டான முறைப்படிக்குத் தமீமன்சாரியார் பெண்சாதிக்கு நடுவெளுதின நிக்காகைப்பிரித்து மறுபடியும் தமீமன்சாரிக்கு நிக்காகெழுதிக் கலியாணமுடித்து முன்போலப் பெண்சாதியும் புருஷரும் வாழ்ந்திருங்களென்று வாழ்த்தி ஏத்திப்போற்றி துவாவோதி தமீமன்சாரியாருக் கவரவரோ முறைபோல வெகுமதிகளுங்கொடுத்து சலாஞ்சொல்லிக்கொண் டவரவரிடஞ்சார்ந்தா ரென்றவாறு.

கண்ணிகள்.

அங்ஙன்மனைவியரு மழகானதம்மீமுந்
துங்கமுறச்சேர்ந்து சுகித்திருந்தாரின்பமதாய். (௮௭௧)

பூவுமணமும் பொருந்தினபோலேபொருந்திக்
காவின்கனியில்ரசங் கலந்ததுபோல்வாழ்ந்திருந்தார். (௮௭௨)

நகமுஞ்சதையும்போல் நன்குறவேவாழ்ந்திருந்தார்
மிகவுமகிழ்ந்து மேன்மையுடன்வாழ்ந்திருந்தார். (௮௭௩)

ஆதியருளா லேந்தும்வணங்கியருட்
சோதிமுகம்மதைத் துதித்தங்குவாழ்ந்திருந்தார். (௮௭௪)

அல்லாவருள்வாழி யகுமதுற்றசூல்வாழி
நல்லமறைவாழி நபிதோழன்மார்வாழி. (௮௭௫)

கான்குக்கொடைக்கரத்துத் தம்மீமன்சாரியரி
னேக்குபுகழ்மாலைதனை யுவந்துபடிப்போர்வாழி. (௮௭௬)

நயவாகக்கேட்டுத் தனீந்செய்தோரும்வாழி
நயமாவுரைகள்சொல்லு நல்லோர்களும்வாழி (௮௭௭)

மாதமூன் றுங்மாரி வரிசித்துலகமெல்லாந்
தீதறவேவாழ்ந்தோங்கச் செய்வன்றகுமானுமீன். (௮௭௮)

தமீமன்சாரிமாலை முற்றிற்று.

இஃது, இராமநாதபுரம். இரவுன்ஷாப்புக்கடை
ம. வெ. முகம்மது இபுறூகீம்சாகிபுமுயத்தியால்
குலசேகரம்பட்டணம்.
சர்க்கரைசாகிபுத்தம்பி யவர்கள் குமாரர்
அல்லாபிச்சைப்புலவரவர்களால்
இலக்கணவிலக்கிய வழுவறத்திருத்தி அச்சியற்றப்பட்டது.